

January 2024
தமிழ்
14
YEARS
ANNIVERSARY
நற்றமிழரின் நாடித்துடிப்பு
பொங்கல் மலர்


VARSHA™
HAPPY NEW YEAR
2024
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

நற்றமிழரின் நாடித்துடிப்பு

January 2024

சுவடி— 13
ஓலை— 11

உள்ளே...

## வணக்கம் பல

**கா**லம் யாருக்காகவும் எதற்காகவும் காத்திருக்காது என்று சொல்லுவார்கள். எதனை இயற்கை நிகழ்த்தினாலும், எதனை மனிதன் நடத்திக் காட்டினாலும், அதையெல்லாம் கடந்து காலம் பயணித்துக் கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டிலும் நிகழக் கூடிய மாற்றங்களை எல்லாம், அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகள் தாண்டி நின்று, சாதனைகளையும் சரித்திரங்களையும் படைத்து கொண்டிருக்கிறது. இதனால்தான் மாபெரும் மாற்றங்களைச் செய்யும் காலத்தை இறைவனுக்கு இணையாக ஒப்பிடுகிறோம்! காலதேவன் என்கின்ற இறைவன் நிகழ்த்துகின்ற அற்புதங்களும், அதிசயங்களும் எண்ணிலடங்காதன. குப்பைமேட்டில் கிடந்தவரைக் கோபுரத்துக்கும், கோபுரத்தில் இருந்தவரைக் குப்பைமேட்டுக்கும் கொண்டு வருவதெல்லாம் காலத்தின் விளையாட்டுதானே!


காலதேவன் ஆடும் ஆட்டத்தில், நிச்சயமாக அடுத்து வருகின்ற தலைமுறைக்கு நல்ல அனுபவத்தையும் அதிலே ஒரு பாடத்தையும் தந்துவிட்டுச் செல்கிறான். அதனைச் சரியாகக் கையில் எடுத்துக்கொண்டு, நிகழ்காலத்தை நிர்ணயிக்க சில உறுதிமொழிகளையும் நிச்சயித்துக் கொண்டு செயல்படுபவர்கள், காலதேவனோடு பயணித்து தாங்களும், காலமாகவே நிலைத்து நின்று வாழும் சரித்திரமாக விளங்குகிறார்கள். கால மாற்றத்தைச் சுட்டிக் காட்டுவதுதான் ஒவ்வொரு புத்தாண்டு பிறப்பு! அதனை வரவேற்பதற்கு மனிதச் சமுதாயம் குதூகலமாகத் தயாராகி, மிகப்பெரிய மகிழ்ச்சித் திருநாளாகவே புத்தாண்டைக் கொண்டாடி மகிழ்ந்து வரவேற்கிறது.

ஒவ்வொரு புத்தாண்டும், அத்துடன் பிறக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையும் ஒரு பெரும் நம்பிக்கையை அடையாளப்படுத்துகின்றது. நம்பிக்கையோடு அன்பையும் சமாதானத்தையும் உலகெங்கும் பரப்பும் முகமாக இந்தப் புத்தாண்டையும், பொங்கல் திருநாளையும் நாம் வரவேற்போம்! உலக மக்கள் அனைவருக்கும், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை 'அய் தமிழ்' கூறி மகிழ்கிறது.

வழமைபோல கதை, கவிதை, கட்டுரைகள் என நல்ல பல ஆக்கங்களுடன் மலர்கின்ற 'அய் தமிழ்' பொங்கல் சிறப்பதழை வரவேற்று வாசித்து நேசித்து மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு




**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**

## ஏனில்லை பட்டாபிஷேகம்?

## மீண்டும் கோரமுக இனவாத அரசியல்

## பசுத்தோல் புலி

## தமிழே தமிழே

## சேரமான் கனவு





# உள்ளே

# HAPPY NEW YEAR 2024

கவிதைகள்

சிறுகதை

சிவகாமியின்சபதம்

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

யோக யோகம்

உறவின் மகிமை






# ஏன் வேண்டும்

### இந்தியாவின் ‘இளவரசன்’ காங்கிரஸை வளமாக்குவாரா ராகுல் காந்தி?

ராகுல் காந்தி, 1970ம் ஆண்டு ஜீன் 19ம் தேதி பிறந்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். உத்ரபிரதேசத்தின் அமேதி, கேரளாவின் வயநாடு ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டு இந்திய லோக் சபாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவர். இந்தியாவின் தற்போதைய எதிர்கட்சியான காங்கிரஸின் தூணாக பார்க்கப்படுபவர். இவர் காங்கிரஸ் கட்சியில் தலைவராக டிசம்பர் 2017 முதல் 2019ம் ஆண்டு வரை இருந்தார்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பேரன், முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி மற்றும் முன்னாள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகன் ராகுல் காந்தி. டெல்லியில் பிறந்த இவர், பெரும்பாலான தனது குழந்தை பருவ காலத்தை டெல்லி மற்றும் டேராடூனில் கழித்தார். இவர் பள்ளிக்காலத்தில் பொது இடங்களில் பெரும்பாலும் தோன்றவில்லை. ஆரம்ப பள்ளிக்கல்வியை டெல்லி மற்றும் டேராடூனில் கற்றார்பின்னர் பாதுகாப்பு காரணங்களுக்காக





# பட்டாபிஷேகம்

வீட்டிலிருந்தே கல்வி கற்றார். செயின்ட் ஜோசப் கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்றார். ஹார்வர்ட் பல்கலைக்கழகம் சென்றார். பின்னர் அவரது தந்தை கொல்லப்பட்டதையடுத்து, ஃப்ளோரிடாவில் உள்ள ரோலிங் கல்லூரிக்கு பாதுகாப்பு காரணங்களுக்காக மாற்றப்பட்டார். கேம்பிரிட்ஜில் எம்.பிஃல் முடித்தார். லண்டனில் ஒரு மேலாண்மை ஆலோசனை நிறுவனத்தில் தனது முதல் பணியை துவக்கினார்.

பின்னர் இந்தியா வந்து ஒரு நிறுவனத்தை துவங்கினார். பணி செய்த இடத்தில் தன்னை யார் என்று அவர் அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. வெளிநாட்டில் இவரது பணி முத்திரை பதிக்கும்படியாக இருந்ததாக இவரது நண்பர்கள் இவரை பாராட்டினார்கள்.

2004ம் ஆண்டு அரசியலுக்கு வந்தார். அமேதி தொகுதியில் போட்டியிட்டார். 2009 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகள் அதே தொகுதியில் வெற்றி பெற்றார். காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக 2013ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னதாக அவர் பொதுச்செயலாளராக இருந்தார். 2014 காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரத்திற்கு இவர் தலைமை வகித்தார்.








அப்போது 44 தொகுதிகளில் மட்டுமே காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அதற்கு முந்தைய 2009ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் அக்கட்சி 206 இடங்களை பிடித்திருந்தது.

பின்னர் தலைவராகி வழிநடத்திய 2019ம் ஆண்டு தேர்தலிலும் காங்கிரஸ் 52 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. எதிர்கட்சி அந்தஸ்தையும் இழந்தது.

அப்போது தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று தலைவர் பதவியில் இருந்து விலகினார். இவர் முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவின் கொள்ளுப்பேரனும் ஆவார். இவரது சகோதரி பிரியங்கா வதேரோ. இவரது மைத்துனர் ராபர்ட் வதேரா.

அரசியல் துவங்கிய காலத்தில் ஏற்பட்ட சுணக்கம், பின்னர் கிடைத்த முதிர்ச்சி என தற்போதைய அரசியலில் அவ்வப்போது லைம்




லைட்டிலும், அவ்வப்போது சுணங்கியும் இருக்கும் ராகுல் காந்தி, 2022ம் ஆண்டு நடத்திய பாரத் ஜோடா யாத்திரை காங்கிரஸ் கட்சிக்கு புது ரத்தம் பாய்ச்சுவதாக இருந்தது. அதன் பின்னர் நடந்த கர்நாடக தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வெற்றி, வரும் தேர்தல் களில் காங்கிரஸ் கட்சிக்கு மாபெரும் வெற்றி வாய்ப்பை பெற்றுத் தரும் என்ற நம்பிக் கையை விதைத்துள்ளது. ஆனால்

ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட தோல்வியும், எதிர்க் கட்சிகளின் கூட்டணியான




'இந்தியா'வின் இதுவரையிலான நகர்வுகளும் காங்கிரசுக்கு சவால்களை அதிகப்படுத்தியுள்ளன. இந்தத் தோல்வி அக்கட்சியின் மன உறுதியைக் குலைத்துள்ளதாகவும், இதன் காரணமாக 'இந்தியா' கூட்டணியில் கூட அக்கட்சி வலுவான நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இன்னும் சில மாதங்களில் மக்களவைத் தேர்தல் வரவுள்ளதால், அனைத்து அரசியல் கட்சிகளின் பார்வையும் அதன்மீது பதிந்துள்ளது. எனவே, காங்கிரஸ் மீண்டும் தன்னை வலுப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

காங்கிரஸ் பெரியளவில் அமைப்பு ரீதியான மாற்றங்களை செய்துள்ளது. ராகுல் காந்திக்கு சவால்கள் அதிகரித்து வரும்நிலையில், உத்தர பிரதேசத்தின் பொறுப்பில் இருந்து பிரியங்கா காந்தி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு இன்னும் பெரிய பொறுப்பு வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது. சத்தீஸ்கர் மாநிலத்தின் பொதுச் செயலாளராக சச்சின் பைலட் நியமிக்கப்பட்டுள்ளார். அசோக் கெலாட் தேசியக் கூட்டணிக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். ராஜஸ்தானில் எதிர்க்கட்சித் தலைவராக புதிய முகத்தை அக்கட்சியினர் தேடி வருவதாகத் தெரிகிறது.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் பொறுப்பாளராக இருந்த அவினாஷ் பாண்டே, தற்போது உத்தர




பிரதேசத்தில் காங்கிரஸ் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுள்ளார். காங்கிரஸ் கட்சியின் நகர்வுகளை உற்றுநோக்கும் ஆய்வாளர்கள், பிரியங்கா காந்தி இனி இந்த பொறுப்பை தொடர விரும்பவில்லை என்று கருதுகின்றனர்.

கடந்த உத்தர பிரதேச சட்டமன்ற தேர்தலில், பிரியங்கா காந்தி தலைமையில், காங்கிரஸ் கட்சி அங்கு தீவிர பிரசாரம் செய்தது. பெண்கள் அதிகாரத்தை மையமாக வைத்து பிரியங்கா தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டார். ஆனால் காங்கிரஸ் கட்சியால் 2 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. கட்சியின் பழைய முகங்களான முகுல் வாஸ்னிக், குமாரி செல்ஜா ஆகியோரின் பொறுப்புகள் வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. தீபா தாஸ்முன்ஷிக்கு மூன்று மாநில பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

காங்கிரஸின் சவால்

இந்த மாற்றம் இருந்தாலும், மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு காங்கிரஸ் தகுந்த சவாலை அளிக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. மக்களவைத் தேர்தல் வரை, பாஜகவுக்கு கடும் போட்டியை கொடுக்க, காங்கிரசை, ராகுல் காந்தி எந்தளவுக்கு தயார்படுத்துவார் என்பது இரண்டாவது கேள்வி.

ஏனென்றால், 'இந்தியா' கூட்டணி இன்னும் உறுதியான திசையைப் பெறுவதாகத் தெரியவில்லை. பிரதமருக்கான எந்த முகத்தையும் அதன் தலைவர்களால் தீர்மானிக்க முடியவில்லை அல்லது யார் கடைசி வரை கூட்டணியில் இருப்பார்கள், யார் இருக்க மாட்டார்கள் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. கூட்டணியில் காங்கிரஸ் பெரிய கட்சியாக இருப்பதால், ராகுல் காந்தி பெரிய பங்களிப்பை வழங்குவார் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




கட்சி அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் ராகுல் காந்தியால் ஏன் தேர்தல் வெற்றியை கொடுக்க முடியவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான அம்ப்ரிஷ் குமார் விவரிக்கிறார்."மறுசீரமைப்பு என்பது கட்சியின் உள்விவகாரம். இதனால் தேர்தல் செயல்பாடு பாதிக்கப்படாது. அரசியல் வியூகம்தான் முக்கியமானது. காங்கிரஸ் இதை கருத்தில் கொள்ள வேண்டும். கூட்டணி அரசியலில் காங்கிரஸ் கவனம் செலுத்த வேண்டும்" என்கிறார். "கட்சிகள் கூட்டணியில் இருக்கும் போது, ஒருவருக்கொருவர் வேலை செய்வதால்தான் அதிக வாக்காளர்கள் உங்களிடம் வருவார்கள். பகுஜன் சமாஜ் கட்சி, சமாஜ்வாதி, லோக்தளம்

போன்ற கட்சிகளுக்கு தனியான தொண்டர் பலம் உள்ளது. காங்கிரஸ் சிறந்த கூட்டணி அமைத்தால், உத்தர பிரதேசத்தில் அதன் பலன் கிடைக்கும். மற்ற மாநிலங்களில் பலம் வாய்ந்த கட்சிகளுடன் கூட்டணி வைத்தால் அதே பலன் கிடைக்கும்.

மூன்று மாநிலங்களில் தனித்துப் போட்டியிட்ட பிறகு, அதனால் எந்த பயனும் இல்லை என்பது காங்கிரஸுக்கு தெளிவாகிவிட்டது. உத்தர பிரதேச த்தில் ஒரே ஒரு இடத்தை மட்டுமே பெற்று ள்ளது, இங்கு காங்கிரஸ் சரியான கூட்டணி அமைக்க வில்லை என்றால், இந்த இடத் தையும் இழக்க நேரிடும் என்று சொல்ல லாம். இம்மாநிலத்தில் அக்கட்சிக்கு சிறந்த வேட்பாளர் களோ நிர்வாகி களோ இல்லை. அத்தகைய சூழ்நிலையில், முதல் உத்தி கூட்டணியாக இருக்க வேண்டும்.

உத்தராகண்டில் காங்கிரஸ் கூட்டணி அமைக்கவில்லை, இடைத்தேர்தலில் தோல்வியடைந்தது. அதன்பிறகு மற்ற கட்சிகளை குற்றம் சாட்ட ஆரம்பித் தார்.ஆனால் கூட்டணிக் க ா க காங்கிரஸ் மட்டும் பேச







வேண்டியதாயிற்று. மத்திய பிரதேசத்தில் சமாஜ்வாடி கட்சியுடன் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் காங்கிரஸ் கூட்டணி அமைக்கவில்லை. சமாஜ்வாடி கட்சி ஒன்று அல்லது இரண்டு இடங்களில் திருப்தி அடைந்தது, ஆனால் காங்கிரஸ் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டது.

உத்தரபிரதேசம் போன்ற பெரிய மாநிலத்தில் காங்கிரஸ் எல்லாவிதமான சோதனைகளையும் செய்துள்ளது. இங்கு சல்மான் குர்ஷித், ரீட்டா பகுகுணா ஜோஷி முதல் ராஜ் பப்பர் வரை அனைவரும் காங்கிரஸ் தலைவராக ஆக்கப்பட்டுள்ளனர். ஆனால் உண்மையான கேள்வி தொண்டர் பலம் பற்றியது. ஒரு கட்சிக்கு தொண்டர் பலம் இல்லை என்றால், அது தனது வியூகத்தை மாற்ற வேண்டும். பொதுவான உத்தியைக் கடைப்பிடிக்க வேண்டும். காங்கிரஸால் இதைச் செய்ய முடியாது" என்கிறார் அவர்.

மறுசீரமைப்பால் எவ்வளவு நன்மை கிடைக்கும்?

காங்கிரஸின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டாலும் அதில் புதிதாக எதுவும் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சமீபகாலமாக காங்கிரஸ் அமைப்பில் தொடங்கியிருந்த கொஞ்சநஞ்ச ஜனநாயகமும் பின்னடைவை சந்தித்துள்ளது என்கின்றனர்.

'தி பிரிண்ட்' பத்திரிகையின் அரசியல் ஆசிரியர் டி.கே.சிங் கூறுகையில், "மல்லிகார்ஜுன கார்கே படிப்படியாக காங்கிரஸின் சூழலை மேம்படுத்தத்

தொடங்கினார். தெலங்கானாவில் ரேவந்த் ரெட்டிக்கு ஆதரவாக கடைசி வரை நின்றார். பிராந்திய தலைவர்களுக்கு முடிவெடுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆனால், ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தோல்விக்குப் பிறகு, கட்சியில் அந்தஸ்து கொண்டவர்கள் மீண்டும் கட்சியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த தோல்வியை கார்கேவுக்கு எதிராக பயன்படுத்துகிறார்கள்.

’இந்தியா’ கூட்டணிக் கூட்டத்தில் மம்தா பானர்ஜியும், அரவிந்த் கேஜ்ரிவாலும் கார்கேவின் பெயரைப் பிரதமர் வேட்பாளராக முன்வைத்த விதம், அவருடன் தங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை என்பதுதான் காங்கிரஸுக்குச் செய்தியாக இருந்தது. ஆனால், அது அவ்வளவுதான் என்று டி.கே. சிங் கூறுகிறார். ‘காந்தி (குடும்பத்திலிருந்து)

கார்கேவை பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருந்தால் பெரிய பலன் கிடைத்திருக்கும் என்று டி.கே. சிங் கூறுகிறார். உத்தர பிரதேசத்தில் மட்டும் தலித்துகள் 20 சதவீதம் உள்ளனர். இரண்டாவது விஷயம், இப்போது நாட்டின் தலித் தலைமைத்துவத்தில் நெருக்கடியான காலகட்டம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தலித்துகள் காங்கிரஸை நோக்கி வந்திருக்கலாம், ஆனால் இந்த வாய்ப்பை அக்கட்சி தவறவிட்டது.

காங்கிரஸின் தற்போதைய மறுசீரமைப்பு பெயரளவில் மட்டுமே உள்ளது என்று அவர் கூறுகிறார். காந்தி குடும்பத்தின் பழைய விசுவாசிகள் மற்றும் பல ஆண்டுகளாக கட்சிப் பதவிகளை வகித்த அதே நபர்களும் இதில் அடங்குவர்.

உதய்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் காங்கிரஸ் ஒரு புதிய தீர்மானத்தை நிறைவேற்றியதாக அவர் கூறுகிறார். எந்த







ஒரு கட்சி பிரமுகரும் ஐந்தாண்டுகளுக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்று கூறப்பட்டது. ஆனால் பட்டியலைப் பார்த்தால் பழைய பெயர்களே திரும்பத் திரும்ப வந்துள்ளன.சமீபத்தில் ராகுல் காந்திக்கு ஏற்பட்ட தோல்வி எவ்வளவு பெரிய ’அடி’? பாரத் ஜோடோ யாத்ரா ராகுல் காந்திக்கு வித்தியாசமான பிம்பத்தை உருவாக்கியுள்ளது. இந்த வருகைக்குப் பிறகு, அவரது பிம்பம் காங்கிரசுக்கு தேர்தல் ஆதாயம் தரும் என்று மக்கள் நம்பினர், ஆனால் அது நடக்கவில்லை.

வேண்டாம்’ என்பதே செய்தியாக இருக்கிறது. ஆனால் இதை சோனியாவும், ராகுல் காந்தியும் விரும்பாததால், காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் கூட விவாதிக்கவில்லை.

கூட்டணிக்கு அவர்தான் தலைமை தாங்க வேண்டும் என்று காங்கிரஸ் தொடர்ந்து விரும்புகிறது. இங்கு தங்கள் கட்சிக்கு பிரதமர் பதவி பரிசாக வழங்கப்பட்டு கொண்டிருந்ததை சோனியாவும், ராகுலும் குறிப்பிடவில்லை. காங்கிரஸில் தொடங்கிய ஜனநாயகமயமாக்கல் செயல்முறை இப்போது பின்னோக்கிச் சென்றுள்ளது என்பதே இதன் பொருள்” என்றார் அவர்.

கர்நாடகா மற்றும் தெலங்கானாவைத் தவிர, வட இந்தியாவில் தேர்தல் வெற்றியிலிருந்து அக்கட்சி வெகு தொலைவில் இருந்தது.காங்கிரஸை தேர்தல் வெற்றிக்கு அழைத்துச் செல்லும் திறன் ராகுல்



காந்திக்கு இல்லையா அல்லது அதில் கவனம் செலுத்தாமல் அரசியல்வாதி என்ற பிம்பத்தை உருவாக்குவதில் மும்முரமாக உள்ளாரா? அம்ப்ரீஷ் குமார் கூறுகையில், “ராகுல் காந்தி தனது தேர்தல் வியூகத்தில் பலவீனமாக இருக்கலாம், ஆனால் அவர் வெகுஜன தலைவராக வேகமாக வளர்ந்து வருகிறார். வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சுற்றுச்சூழல் போன்ற பிரச்னைகளை பேசும் தலைவராக வலம் வருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, கோவில்—மசூதி அரசியல் இன்னும் 10 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள் நீடிக்கும். இதற்குப் பிறகு நாம் உண்மையான பிரச்சினைகளைப் பற்றி பேச வேண்டும்.

ராகுல் காந்தி வெகுஜனத் தலைவராக மாறுவதற்கான செயல்பாட்டில் இருக்கிறார். அவரது உத்தி தெளிவாக உள்ளது. ’எந்த தயக்கமும் இல்லாமல் பேசுங்கள். இதயத்திலிருந்து பேசுவோம்.’ என்பதுதான் அவருடைய அணுகுமுறை. ஆனால் அரசியல் என்பது தந்திரமான மனிதர்களின் விளையாட்டு. நரேந்திர மோதியின் தந்திரத்தை ராகுல் இன்னும் வளர்த்துக்கொள்ளவில்லை, ஆனால் அவருக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. ராகுல் காந்தி ஒரு பெரிய கட்சியின் தலைவர், அக் கட்சிக்கென பெரும் பாரம் பரியம் உள்ளது. மக்கள் இப்போது அவரைப் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டனர். மூன்று மாநிலங்களில் ஏற்பட்ட தோல்வியால் ராகுல் அரசியலில் தோல்வியடைந்துவிட்டார் என்ற முடிவுக்கு வரக்கூடாது. அரசியலில் தலைவருக்கும் அரசியல்வாதிக்கும் வித்தியாசம் உண்டு. ராகுல் காந்தி அரசியல் வாதி என்ற பிம்பத்தை உருவாக்குவது போல் தெரிகிறது” என்றார்.





ராகுலின் பிம்பத்தால் காங்கிரஸுக்கு தேர்தல் பலன் கிடைக்கவில்லை என்ற கேள்விக்கு டி.கே. சிங் மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளார்.

அவர் கூறும்போது, “சோனியா காந்திக்கும் ராகுல் காந்திக்கும் வித்தியாசம் இருக்கிறது. சோனியா காந்தி தனது வரம்புகளை அறிந்திருந்தார். எனவே அவர் தன்னைச் சுற்றியுள்ளவர்களின் ஆலோசனையைப் பின்பற்றினார். ஆனால், தான் அரசியலை நன்கு புரிந்து கொண்டதாக ராகுல் கருதுகிறார். எனவே, சுற்றி இருப்பவர்களின் அறிவுரைகளை அதிகம் கேட்க மாட்டார் அல்லது ராகுல் அவர்களை அங்கிருந்து அகற்றி விடலாம் என்பதால் அமைதியாக இருக்கிறார். தனக்கு என்ன பிடிக்குமோ அதைத்தான் அவர் சொல்கிறார்.

ராகுல் ’மையத்தில் இடதுசாரி போக்கு’ கொண்டிருப்பதாக அவர் கூறுகிறார். ”அதனாலேயே அவருடன் நெருக்கமாக இடதுசாரி சார்புடையவர்களும் இருக்கிறார்கள். முடிவுகளை எடுப்பதில் இப்படிப்பட்டவர்களின் பங்கு அதிகரித்து வருகிறது. கட்சியின் தேர்தல் செயல்பாடுகளில் அதன் தாக்கம் தெரியும்” என்கிறார் அவர்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்








# சொல்றாங்க... சொல்றாங்க...



*"விஜயகாந்த் நலமுடன் இருந்திருந்தால் தமிழக அரசியல் போக்கே மாறியிருக்கும்!"*

**சீமான்**

*(அதிசயமா இருக்கே! எப்பவாவது இப்படி உண்மையும் பேசுவீரோ?)*



*"நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவேண்டும் என விரும்பினேன்!"*

**லதா ரஜினிகாந்த்**

*சினிமா இப்போது வேண்டாம்னு அவரே நினைச்சாலும், நடிக்க வச்சமாதிரி அரசியலிலும் ஒரு முயற்சி எடுக்கலாம்னு நீங்க நினைச்சீங்க... ஆனா அவர்? ..)*



*"தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சாதியப் பாகுபாடு பார்க்கப்படுவதில்லை!"*

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

*(கேட்க நல்லாத்தான் இருக்கு! அப்புறம் எதுக்கு பள்ளிகளில் சாதிச் சான்றிதழ்? நீக்கிட வேண்டியதுதானே?)*



*"ஓ.பி.எஸ் விரைவில் சிறைக்குச் செல்வார்!"*

**எடப்பாடி கே. பழனிசாமி**

*(என்னங்க விளையாட்டு இது? மாத்தி மாத்தி ரெண்டு பேரும் ஒரே டயலாக் பேசறீங்க? உங்களைப் பார்க்கிறதுக்கு அவரும், அவரைப் பார்க்கிறதுக்கு நீங்களும் போகப் போறீங்களா?)*

# மீண்டும் கோரமுக இனவாத

## மக்களால் விரட்டப்பட்ட ராஜபக்ஷே மீண்டும் ஆட்சியை கைப்பற்ற முயற்சியா?

''நாங்கள் கோழைகள் என நினைக்க வேண்டாம். வீதியில் செல்லும் நாய் ஒன்றின் மீது கல்லை எறிந்து தாக்கினால், அது குரைத்துக்கொண்டு வேகமாக ஓடும். ஆனால், சிங்கத்தின் மீது கல்லை எறிந்தால், யார் கல்லை எறிந்தார்கள் என்று அது திரும்பிப் பார்க்கும். அதுபோலத்தான் நாங்கள். எம் மீது கல்லை எறிய வேண்டாம்.

நாம் திரும்பிப் பார்ப்போம். ஸ்ரீலங்கா பொதுஜன






பெரமுன மீது கல் எறிய வேண்டாம். நாங்களும் திரும்பிப் பார்ப்போம்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷ தெரிவிக்கின்றார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாடு கொழும்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை மக்களின் கடும் போராட்டம் மற்றும் எதிர்ப்புக்கு மத்தியில் ஆட்சி பீடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளது. இதன் ஒரு கட்டமாகவே கட்சியின் மாநாடு கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப் பட்ட கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, 2016ஆம் ஆண்டு பஷில் ராஜபக்ஷவால் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

# அரசியல்

**ரஞ்சன் அருண் பிரசாத்**

தாமரை மொட்டு சின்னத்தில் இந்தக் கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி வகிப்பதுடன், இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களில் மாபெரும் வெற்றியை தன்வசப்படுத்தியது.

தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி 2018ஆம் ஆண்டு முதல் தடவையாகப் போட்டியிட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாரிய வெற்றியைத் தன்வசப்படுத்தியது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பாரிய வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.



எனினும், கோவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் மீது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மீதான நம்பிக்கையை மக்கள் இழந்த நிலையில், ஆட்சி பீடத்திலிருந்த ராஜபக்ஷ குடும்பத்தை வெளியேறுமாறு வலியுறுத்தியிருந்தனர்.

ஆட்சியிலிருந்து வெளியேற ராஜபக்ஷ குடும்பம் மறுத்த பின்னணியில், நாடு தழுவிய ரீதியில் பாரிய தன்னெழுச்சி போராட்டங்கள் ஆரம்பமாகியிருந்தன. இவ்வாறான நிலையில், பல லட்சக்கணக்கான மக்கள் ஒன்று கூடி, 2022ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியிருந்தனர்.




இந்த நிலையில், மொட்டு சின்னத்திலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பாரிய வீழ்ச்சியைச் சந்தித்திருந்தது. எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியை மீண்டும் நாட்டில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாடு கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கியில் கடந்த 15ஆம் தேதி நடைபெற்றது. கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஸ தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், கட்சியின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷவும் கலந்து கொண்டிருந்தார். அத்துடன், கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்த போதிலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.


தமது ஆட்சியில் பொருளாதாரம் பாரிய முன்னேற்றத்தைக் கண்டிருந்த போதிலும், 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் நாட்டை வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றதுடன், அவ்வாறு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி அடைந்த நாட்டையே கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்றுக் கொண்டதாக மாநாட்டில் ஒளிபரப்பு செய்யப்பட்ட வீடியோவில் கூறப்பட்டது.

அதன் பின்னர் தமது ஆட்சியில் கோவிட் பெருந் தொற்றிலிருந்து மக்களின் உயிரைக் காப்பாற்ற தாம் எடுத்த முயற்சிகள் காரணமாகவே நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்ததாக கட்சியின் மாநாட்டில் ஒளிபரப்பு செய்யப்பட்ட குறித்த வீடியோவில் குறிப்பிடப்பட்டிருந்தது.




கோவிட் தொற்றிலிருந்து மக்களின் உயிரைக் காப்பாற்ற முயற்சி எடுத்தமை, நாடு முடக்கப்பட்டிருந்த தருணத்தில் மக்களுக்கு மூன்று தடவைகள் 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டமை, அரசு ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் உரிய சம்பளம் வழங்கப்பட்டமை, ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்பட்டமை, நிவாரண திட்டங்கள் உரிய வகையில் வழங்கப்பட்டமை, நாடு முடக்கப்பட்ட தருணத்தில் அனைத்து மக்களுக்கும் உதவிகள் செய்தமை ஆகியவையே பொருளாதார நெருக்கடி ஏற்படக் காரணமாக அமைந்ததைப் போன்று வீடியோ ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் டாலர் வருமானம் பூஜ்ஜியத்திற்கு வீழ்ச்சி அடைந்ததாக அந்த வீடியோ தொகுப்பில் தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறை முழுமையாக இல்லாது போனதாகவும், வெளிநாட்டு பணியாளர்களின் வருமானம் முழுமையாக இல்லாது போனதாகவும், வெளிநாட்டு முதலீடுகள் இல்லாது போனதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டது. பொருளாதார, சமூக, அரசியல் சூழலை பயன்படுத்திக் கொண்ட சில குழுக்கள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்த்ததாக இந்த மாநாட்டில் ஒளிபரப்பு செய்யப்பட்ட வீடியோவில் குறிப்பிடப்பட்டது.



‘விடுதலைப் புலிகளிடமிருந்து மக்களை காப்பாற்றினோம்‘

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான பஷில் ராஜபக்ஷ கருத்து தெரிவித்தார். ‘‘எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் மாத்திரமே ஆகியுள்ளது. கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் எமது கட்சி வெற்றியீட்டியது.

மூன்று தேர்தல்கள் மாத்திரமே நடத்தப்பட்டன. அந்த அனைத்து தேர்தல்களிலும் எமது கட்சி வெற்றி பெற்றது. எதிர்வரும் காலத்தில் நடைபெறும் எந்தவொரு தேர்தலிலும் உங்களின் பொதுஜன பெரமுன கட்சியே வெற்றி பெறும் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது. இதுவரை காலம் நீங்கள் எங்களுக்காக செய்ய சேவையை நாம் வரவேற்க வேண்டும். இலங்கையர்களுக்கு வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பங்களில் மரண பயம் ஏற்பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் காலத்திலும், கோவிட் பெருந்தொற்று காலத்திலும் மக்களுக்கு மரண பயம் ஏற்பட்டது.


அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் மக்களைக் காப்பாற்றியது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் என்பதை கூறிக் கொள்கின்றேன்,’’ என கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார். அதைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.




‘‘கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களினால் நாடு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளை சந்தித்திருந்தது. அவ்வாறான பொருளாதார பின்னடைவுகளின் போதே நாட்டை நாம் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

அப்படியான சூழ்நிலையிலேயே யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் கோவிட்—19 பெருந்தொற்று வந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. யுத்தத்தில் மக்கள் கொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திய நாம், கோவிட் தொற்றில் மக்கள் உயிரிழப்பதைத் தவிர்ப்பதற்கு வேலை செய்தோம் என்பது உங்களுக்கு நினைவில் இருக்கும்.

கோவிட் தொற்றை வெற்றிகொண்ட போதிலும், அதற்கு முன்னர் பின்னடைவைச் சந்தித்திருந்த நாட்டை மீட்டெடுக்கப் பாரிய பிரயத்தனம் மேற்கொண்டோம். அப்போதுதான் மக்களைத் தூண்டிவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.




நாடு கடனில் இருப்பதால் பொறுப்பேற்க அச்சப்பட்டார்கள்.

அவர்களின் இருப்பிற்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்திலேயே நாட்டைப் பொறுப்பேற்க அச்சப்பட்டார்கள். அவ்வாறானவர்களே தற்போது ஆட்சியைக் கோருகின்றார்கள். அவ்வாறான தலைவர்களுக்கு நாட்டின் பொறுப்பைக் கொடுக்க நாம் தயார் இல்லை.

அடுத்த தேர்தலில் எமது கட்சியே பாரிய சவாலான கட்சியாக இருக்கும். கட்சியைப் பலப்படுத்த இன, மத, கட்சி வேறுபாடின்றி எம்முடன் இணைந்துகொள்ளுங்கள். நாட்டு மக்களுக்கு மாத்திரமன்றி,அரசியல் கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்," என மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

போராட்டம் எமது கட்சி ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இன்று வரை அதற்கான நியாயம் கிடைத்தது என்று என்னால் கூற முடியாது. எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடு வீதியில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.




இந்த சம்பவங்களுக்கு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நான் கோருகின்றேன். உண்மையான குற்றவாளிகள் இன்றும் வெளியில் இருக்கின்றார்கள்.

எனினும், அவ்வாறானவர்களின் முகமூடி தற்போது கழற்றப்பட்டுள்ளது. இந்த பிரச்னைக்கு எதிர்காலத்தில் நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொள்வோம் என நான் உங்களிடம் கூறிக்கொள்கின்றேன்," எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமது ஆட்சியின்போது எந்தவித பொருளாதார நெருக்கடியும் ஏற்படவில்லை என்பதைப் போலியான முறையில் நிருபித்து, மீண்டும் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்கு ராஜபக்ஷ குடும்பம் தொடர்ச்சியாக முயன்று வருவதாக வடக்கு கிழக்கு மக்கள் போராட்டத்திற்கான ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவரும், காலி முகத்திடல் போராட்டக் குழுவின் உறுப்பினருமான ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பம் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதை தவிர்ப்பதற்கான அனைத்து வித நடவடிக்கைகளையும் தாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

எமது மக்கள் அமைப்பின் ஊடாக நாங்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு பிரதேசங்களாக சென்று எங்களுடைய வேலைத் திட்டங்கள் மற்றும் இந்த நாட்டில் எப்படியான அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் மக்களுக்குத் தெளிவூட்டவுள்ளோம். அத்துடன், இந்த நாட்டை ஏன் மஹிந்த ராஜபக்ஷ குழு ஆட்சி செய்யக்கூடாது



என்பதைப் பற்றியும் மக்களுக்குத் தெளிவூட்டி வருகின்றோம். இவர்கள் செய்த பிழைகள், அந்த பிழைகளுக்குரிய பொறுப்புக்கூறல், அந்த பிழைகளுக்கான தண்டனைகள் என்ன?

இவர்களை மீண்டுமொரு முறை ஆட்சிக்கு வரவைத்தால், வரப்போகும் பிரச்னை என்ன?

ஒட்டு மொத்த இலங்கையும் இன்றைக்குப் பாரதூரமான பொருளாதாரம் மற்றும் வாழ முடியாத நிலையில் இருப்பது போன்ற பிரச்னைகளுக்கு மூலக்காரணம் இவர்கள், தமது குடும்பம் மற்றும் தம்மைச் சார்ந்தவர்களின் நலனுக்காக ஒட்டு மொத்த இலங்கையர்களையும் பள்ளத்தில் தள்ளினார்கள் என்பதையும் நாம் மக்களுக்கு கூறி வருகின்றோம்," என அவர் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜக்ஷே திட்டம் என்ன?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் கிடையாது எனவும், மாறாக மக்கள் மத்தியில் தமது இருப்பை உறுதி செய்துகொள்வதற்கான தேவையே காணப்படுவதாகவும் மூத்த செய்தியாளர் ஆர்.சிவராஜா தெரிவிக்கின்றார்.

"கடந்த தேர்தலில் 69 லட்சம் வாக்குகளைப் பெற்று,மக்களால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டதன் பின்னர் அவர்களுக்கான தளமொன்று இல்லாது போயுள்ளது. தேர்தலில் வெற்றி பெறுவதல்ல மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கம். மாறாக மீண்டும் மக்கள் மத்தியில் தமது பிரசன்னத்தை உறுதிசெய்து கொள்வதே அவர்களின் நோக்கம்.

அந்த வன்முறைக்குப் பின்னரான முதல் நிகழ்வு இது. மக்கள் மத்தியில் முன்பைப் போன்று தலையை காட்டி அடித்தளத்தை ஏற்படுத்த வேண்டும். ரணில் விக்ரமசிங்க அரசியல் கூட்டணியொன்றை உருவாக்க முயல்கிறார். அந்தக் கூட்டணியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதான கூட்டணியாக எடுக்க எண்ணியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவை பொருத்தவரை, அடுத்த ஆட்சியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றுவதில் அவருக்கு உடன்பாடு இல்லை.

அவர் எதிர்கட்சியின் இடத்தை எடுக்கப் பார்க்கிறார். அப்படியென்றால், பாரிய கூட்டணியொன்றை அமைத்து அந்தக் கூட்டணி ரணில் விக்ரமசிங்கவை வெல்ல வைத்து, அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியில் அமர்வதே மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணம். மக்கள் மத்தியில் செல்வதற்கும், எதிர்ப்பைத் தணிப்பதற்காகவுமே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இவ்வாறான மாநாடொன்றை நடாத்தியது," என செய்தியாளர் ஆர்.சிவராஜா தெரிவிக்கின்றார்.




சிங்கத்திற்குக் கல் எறிந்தால், சிங்கம் திரும்பிப் பார்க்கும் என்ற வசனத்தைப் பயன்படுத்தி, முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அச்சுறுத்தல் விடுக்கின்றார் எனவும் ஆர்.சிவராஜா குறிப்பிடுகின்றார்.

"இப்படிச் சொல்வதன் மூலம் தங்களுடன் மோத வேண்டாம் என பஷில் ராஜபக்ஷ மறைமுகமாக அச்சுறுத்தல் விடுக்கின்றார். இதுவரை எதிர்ப்பு தெரிவித்தவர்கள், இனி வரும் காலங்களில் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள்.

சில வேளைகளில் ஆட்சிக்கு வந்து விடுவார்களோ என்ற அச்சம் வந்து விடும். ரணில் விக்ரமசிங்கவுடன் உள்ள எம்.பி.களும் தற்போது யோசிப்பார்கள். பஷில் ராஜபக்ஷ அந்த வசனத்தின் ஊடாக அச்சுறுத்தல் விடுக்கின்றார்," எனவும் அவர் கூறுகின்றார்.

# பசுத்தோல்

## இந்தியா கூட்டணிக்கு என்ன சிக்கல்?

இந்திய அரசியல் களம் புதிய காட்சிகளுக்குத் தயாராகிறது. ஒருபுறம் ‘இந்தியா’ (Indian National Developmental Inclusive Alliance), மறுபுறம் என்டிஏ (தேசிய ஜனநாயகக் கூட்டணி) எனப் பெரும் படைகள் மோதவிருக்கும் 2024 மக்களவைத் தேர்தல் மிகுந்த கவனம் ஈர்க்கிறது. பிரதமராக மோடி பொறுப்பேற்ற பிறகு, பாஜகவின் நகர்வுகளுக்கு எதிர்வினையாகத்தான் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் இருந்துவந்தன.

முதல் முறையாக, எதிர்க்கட்சிகளின் வியூகத்துக்கு எதிர்வினையாக பாஜக வெளிப்படையாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது. எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெற்ற நாளில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிக் கூட்டத்தை பாஜக ஒருங்கிணைத்ததே இதற்கு உதாரணம். ஒருவகையில், இதை பாஜகவின் பலவீனமாகப் பார்க்க முடியும் என்றாலும், எதிர்க்கட்சிகளின் வியூகத்தை முறியடிக்க அக்கட்சி முழுமூச்சாகத் தயாராகிறது என்றும் கொள்ள முடியும்.

மோடி யுகம்: 1998இல் காங்கிரஸுக்கு எதிராக பாஜக தலைமையில் உருவான என்டிஏ கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது; வாஜ்பாய் பிரதமராகப் பொறுப்பேற்றார். எனினும், கூட்டணியில் ஏற்பட்ட சிக்கல்களால் 13 மாதங்களில் ஆட்சி கவிழ்ந்தது. 1999இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்ற இந்தக் கூட்டணியால், 2004 தேர்தலில் வென்று ஆட்சியைத் தக்கவைக்க முடியவில்லை. 2009இல் அத்வானியைப் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்திப் போட்டியிட்ட அக்கூட்டணிக்குத் தோல்விதான் கிடைத்தது.




தீவிர இந்துத்துவம், வளர்ச்சி ஆகிய இரண்டு அம்சங்களுக்காகப் பேசப்பட்ட மோடி, 2014 தேர்தலில் முன்னிறுத்தப்பட்டார். அடிமட்ட மக்கள் வரை சென்றடையும் வகையிலான பேச்சாற்றல் கொண்ட மோடிக்கு அப்போது முதல் வெற்றிமுகம் தொடர்ந்தது. எனினும், சூழல் வேகமாக மாறிவருகிறது.பழைய கணக்குகள்: 2019 தேர்தலில் பாஜகவுக்கு 37% வாக்குகள் கிடைத்தன. இன்றைக்கு எந்தக் கூட்டணியிலும் சேராமல் ஒதுங்கியிருக்கும் பிஜு ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கட்சி, பிஆர்எஸ், தெலுங்கு தேசம், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் போன்றவற்றைத் தவிர்த்து, பல பிரதான கட்சிகள் ‘இந்தியா’ கூட்டணியில் இருக்கும் நிலையில், அவற்றின் மொத்த வாக்கு சதவீதம் மிக முக்கியமான காரணியாக 2024 தேர்தலில் அமையும். 2019 மக்களவைத் தேர்தலில், என்டிஏ 353 இடங்களைக் கைப்பற்றியிருந்தது (மொத்த வாக்குகள் 42%).

‘இந்தியா’ கூட்டணியில் உள்ள கட்சிகள் அந்தத் தேர்தலில் மொத்தமாக வென்ற இடங்கள் 134 தான். ஆனால், மொத்த வாக்குகள் 35%. எனவே, இந்தக் கூட்டணியின் நகர்வுகளைக் கண்டு பாஜக பதற்றம் அடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. அதேநேரம், மொத்த வாக்கு சதவீதத்துக்கும் தொகுதிவாரியான வெற்றிக்கும் வித்தியாசம் உண்டு. அதை அந்தந்தத் தேர்தல் களத்தின் வெவ்வேறு காரணிகள்தான் தீர்மானிக்கின்றன. கூட்டணியின் முக்கியத்துவம்: 2014க்குப் பின்னர் பாஜகவுக்குக் கிடைத்த வெற்றிகளுக்கு மோடியின் முகம் முக்கியக் காரணியாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சிகள் — தேசியக் கட்சிகளும் பலம்வாய்ந்த மாநிலக் கட்சிகளும் — ஒன்றிணைந்திருக்கும் இந்தத் தருணத்தில், மோடியின் பெயர் மட்டுமே செல்லுபடியாகிவிடாது. பாஜக இதை நன்றாகவே உணர்ந்திருப்பதால், இதுவரை பெரிதாகக் கண்டுகொள்ளப்படாத கூட்டணிக் கட்சிகள் இப்போது முக்கியத்துவம் பெறுகின்றன.

என்டிஏ கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் 38 கட்சிகளில், 24 கட்சிகளுக்கு மக்களவையில்

# புலி!

**க. பாண்டியன்**

உறுப்பினர்களே இல்லை; ‘இந்தியா’ கூட்டணியிலும் 10 கட்சிகள் மக்களவை உறுப்பினர்கள் இல்லாதவை. எனினும், வெற்றி வாய்ப்பு நழுவுவதைத் தவிர்க்க எல்லா பக்கமும் அணை போட வேண்டிய அவசியம் இரண்டு தரப்புக்கும் உருவாகியிருக்கிறது.

2004 மக்களவைத் தேர்தலுக்குப் பின்னரே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உருவானது; 2009 தேர்தலில் அந்த வெற்றி தொடர்ந்தது. எனினும், காங்கிரஸைப் பொறுத்தவரை தேசிய அளவில் தேர்தலுக்கு முந்தைய கூட்டணியில் இத்தனைத் தீவிரம் காட்டுவது இதுவே முதல் முறை. பாஜகவை வீழ்த்தியே ஆக வேண்டும் எனும் முனைப்பில் பிரதமர் பதவிக்கான போட்டியிலிருந்து விலகவும் தயார் எனக் காங்கிரஸ் சொல்வது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

காத்திருக்கும் சவால்கள்: ‘இந்தியா’ கூட்டணிக்குத் தலைமை வகிப்பது யார், ஒருவேளை வெற்றி பெற்றால் பிரதமர் யார் எனும் கேள்விகள் எழத் தொடங்கியிருக்கின்றன. பாஜக இதைப் பிரதானமான விமர்சனமாக முன்வைக்கிறது. பெங்களூரு







கூட்டத்தில் முக்கியத்துவம் கிடைக்காததால் நிதீஷ் குமார் அதிருப்தியடைந்ததாகச் செய்திகளைப் பரப்புவதில் பாஜக ஈடுபடுகிறது. அதேபோல, மேற்கு வங்கம், கேரளம் போன்ற மாநிலங்களில் இதுவரை நிலவிவந்த அரசியல் சமன்பாடுகளை அவ்வளவு எளிதில் கலைத்து, புதிய களத்தை உருவாக்கிவிட முடியாது.

மாநில அரசியல் களம் என்ற அளவில் காங்கிரஸ் கட்சிக்கும் திரிணமூல்

காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகளுக்கும் இடையிலான முரண்கள், தேசிய அளவில் எப்படிச் சரிசெய்யப்படும் என்பது முக்கியமான கேள்வி. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கும் அம்மாநிலக் காங்கிரஸ் தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரிக்கும் எப்போதும் ஆகாது. உள்ளாட்சித் தேர்தல் வன்முறை தொடர்பாக இரண்டு கட்சிகளுக்கும் இடையே கடும் கருத்து முரண்கள் ஏற்பட்டது மிகச் சமீபத்திய அம்சம். பஞ்சாபில் காங்கிரஸைப் படுதோல்வி அடையச் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சியினர் மீது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இதனால் அம்மாநிலக் காங்கிரஸார் அதிருப்தியில் ஆழ்ந்திருக்கின்றனர். பாஜக மிகச் சாதுரியமாக இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இவற்றைச் சமாளிப்பது ‘இந்தியா’ கூட்டணி எதிர்கொள்ளும் இன்னொரு சவால். அதேபோல், இந்த ஆண்டு தேர்தலை எதிர்கொண்டிருக்கும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களில் காங்கிரஸ் தலைவர்களுக்கு மத்தியில் நிலவும் பூசல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவது அவசியம்.

தொகுதிப் பங்கீடு எந்த அளவுக்குத் திறம்படத் திட்டமிடப்படுகிறது என்பதைப் பொறுத்துதான் இக்கூட்டணியின் வெற்றிக் கணக்கு உறுதியாகும். இவ்விஷயத்தில் வழக்கமான கூட்டணியிலேயே பல பிரச்சினைகளைக் கட்சிகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இதுவரை அரசியல் களத்தில் எதிரிகளாகப் பாவித்துவந்த கட்சிகள், இப்போது கூட்டணி அமைத்துக் களம் காணும்போது, அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் பகைமை நீடித்தால், தேர்தல் பணிகளில் சுணக்கம் ஏற்படும். கூட்டணி சார்பில் பாஜகவுக்கு எதிராக அல்லது என்டிஏ கூட்டணிக் கட்சிக்கு எதிராகப் பொது வேட்பாளரை நிறுத்தும்போது இந்தச் சிக்கல் பெரிய அளவில் எழலாம்.

பயணங்கள் முடிவதில்லை: ராகுல் காந்தி மேற்கொண்ட ‘ஒற்றுமை இந்தியா’ (பாரத் ஜோடோ) நடைப்பயணத்தின் மூலம் காங்கிரஸுக்குக் குறிப்பிட்ட அளவுக்கு வலிமை சேர்ந்திருப் பது மறுக்க முடியாததுதான். ஆனால், இதுபோல் பல நடைப்பயணங்கள், சுற்றுப்பயணங்களைக் காங்கிரஸ் தலைவர்களும், ‘இந்தியா’ கூட்டணியின் பிற தலைவர்களும் மேற்கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் பிரத்யேகப் பிரச்சினைகளைப் பிரதானமாக முன்வைத்துப் பிரச்சாரம் செய்யும் மோடியின் பாணியை எதிர்கொள்வது அத்தனை எளிதல்ல.





2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் நேரத்தில், இந்தியா கூட்டணியின் முக்கியமான அங்கமான திமுக பாஜகவின் இலக்காகியுள்ளது. திமுகவுக்கும் பாஜகவுக்கும் இடையிலான வார்த்தை போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

இந்தியா கூட்டணியை, குறிப்பாக இந்தி பேசும் மாநிலங்களில், எதிர்கொள்வதற்கான கருவியாக திமுக மாறி வரும் நிலையில், இதற்கு காரணம் திமுகவின் சில தவறான அணுகுமுறைகளா அல்லது மாநில அரசியலுக்கும் தேசிய அரசியலுக்கும் இடையேயான சிக்கலான உறவா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.கடந்த காலங்களில் நாம் பார்த்த பல சர்ச்சைகளின் பட்டியலில் சமீபத்திய வரவு வெள்ள நிவாரணம் தொடர்பானது. இந்த விவகாரத்தில் நிர்மலா சீதாராமன் மற்றும் உதயநிதி ஸ்டாலினுக்கு இடையேயான வாதங்கள் மோசமானதாக மாறியுள்ளன.

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கான நிவாரணத் தொகை கேட்ட போது, மத்திய அரசு “ஏ.டி.எம்” கிடையாது என்ற பொருளில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் கூறுகிறார். இந்தக் கருத்துக்கு எதிர்வினையாற்றிய தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சரும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மகனும் ஆகிய உதயநிதி ஸ்டாலின், “அவர்களின் அப்பன் வீட்டு சொத்தை கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தைதான் கேட்கிறோம்” என்று தெரிவித்தார்.இதன் தொடர்ச்சியாகவே நிர்மலா சீத்தாராமன் சுமார் ஒருமணி நேராம் பத்திரிக்கையாளர் சந்திப்பை டெல்லியில் மேற்கொண்டார். அதன் கேள்விகளும், பதில்களும் பெரும்பாலும் தமிழிலேயே அமைந்தன.

அப்போது பேசிய நிர்மலா சீதாராமன் “அவர்களின் பாஷை அப்படித்தான் இருக்கும். சனாதனத்தை அழிக்க மாட்டோம், ஒழிப்போம் என்று கூறினாரே, அவர்களின் பாஷை அப்படிதான் இருக்கும். நீங்கள் அப்பன் வீட்டு சொத்தில் தான் அனுபவித்து வருகிறீர்கள் எனக் கூறமுடியுமா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு மரியாதை கொடுத்துதானே ஆக வேண்டும். அப்பன்

வீடு, ஆத்தா இந்த பேச்சு எல்லாம் நல்லது இல்ல. வாய் வார்த்தைகள் அளந்து வரவேண்டும்” என்றார்.




இந்த விவகாரம் இத்துடன் முடிந்துபோகவில்லை. மீண்டும் பதில் பேசிய உதயநிதி ஸ்டாலின், “அப்பன் என்பது கெட்ட வார்த்தையா, மரியாதைக்குரிய அமைச்சரின் மரியாதைக்குரிய அப்பாவின் பணத்தை கேட்கவில்லை என்று தான் கூறினேன்” என்று பதில் பேசியதுடன் சிலசமயம் ‘பெரியாரின் பாணி’ அவசியம் என்று அறிக்கை விட்டார். இந்த சூழலில்தான், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் பேசிய 2019 ஆம் ஆண்டு வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் தற்போது பரவலாக பகிரப்பட்டு வருகிறது.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவில் பேசிய அந்த உரையில், “ஆங்கிலம் தெரிந்தால் ஐ.டி நிறுவனங்களில், கை நிறைய சம்பளம் வாங்கலாம். உத்தர பிரதேசத்தில், பிஹாரில் இந்தி மட்டும் படிப்பவன் தான் இங்க வந்து வீடு கட்டி தர்றான், கக்கூஸ் கழுவுறான்” என்று அவர் பேசியிருந்தார். சமூக ஊடகங்களில் இந்த பேச்சை பாஜகவினர் பகிர்ந்து வருகின்றனர். சில முன்னணி ஊடகங்கள் இது குறித்து விவாதங்கள் நடத்தின.

பொதுவாக மாநில அளவில் சர்ச்சையாகும் விசயங்களை தேசிய அளவில் பேசுபொருளாக்கி வருகிறது பாஜக. இதன் மூலம் இந்தியா கூட்டணிக்கு ஒரு நெருக்கடியை அளித்து வருகிறது பாஜக. இந்தியா கூட்டணியில் சித்தாந்த, கலாச்சார அடையாளத்தை விட்டுக் கொடுக்காமல் இருக்க வேண்டிய நிர்பந்தம் திமுகவுக்கே இருக்கிறது.எந்த அரசியல் கூட்டணியிலும் இருப்பது போல், இந்தியா கூட்டணியில் பாஜகவை எதிர்த்து நிற்கும் கட்சிகள் என்ற விதத்தில் கட்சிகள் ஒரே கருத்தை பகிர்ந்துகொள்கின்றன. ஆனால் அரசியல் தளத்தில் அவைகளுக்குள்ளே மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

“இந்தியா என்பது பல கலாச்சாரங்களை உள்ளடக்கிய நாடாகும். திமுகவுக்கு பண்பாட்டு பின்புலம், கலாச்சார பின்புலம் உள்ளது. பாஜகவினர் இந்தியா கூட்டணியை பலவீனமாக்க, அந்த கூட்டணியில் உள்ள அமைப்பு ரீதியாக வலுவாக உள்ள கட்சியை தாக்குவார்கள். எதிர்கட்சிகளை, எதிரி கட்சிகளாக சித்தரிப்பார்கள். அந்த விதத்தில்தான் இப்போது திமுகவை தனிமைப்படுத்த நினைக்கிறார்கள்.”




“கூட்டணிக் கட்சிகளுக்குள் ஒத்த கருத்து உள்ள பிரச்சனைகளான இட ஒதுக்கீடு, மதவாத எதிர்ப்பு, மாநில உரிமைகள் நிலைநாட்டுவது போன்றவை தவிர மற்ற கருத்துக்களில் மாறுபடலாம். எல்லா விதத்திலும் ஒரே கருத்து கொண்டிருந்தால் ஒரே கட்சியாகவே இருந்திருக்கலாமே?”

“குறிப்பாக சில விஷயங்களை தேர்ந்தெடுத்து பூதாகரமாக்குவது, வாக்கு வங்கி அரசியலுக்காக செய்யப்படும் அரசியலாகும். இந்தியாவில் அனைவருக்கும் உரிய மரியாதை வழங்க வேண்டும். அதே சமயத்தில் ஒரு கருத்துக்கு மற்றொரு கருத்து இணங்கியே ஆக வேண்டும் என கூறுவது சரியல்ல” என்றார்.

தயாநிதி மாறனின் வீடியோவை ஙீ தளத்தில் பதிவிட்ட பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் ஷேசாத் பூனாவாலா, “ திமுகவின் மூத்த தலைவர்கள் இது போன்ற கருத்துகளை தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். இந்தியா

கூட்டணியில் உள்ள காங்கிரஸ் மற்றும் பிற கட்சிகள் அமைதி காப்பதன் மூலம், இந்த கருத்து அவர்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும், இந்தியா கூட்டணியின் உத்திகளில் ஒன்றாகவும் இருக்கிறது என தெரிகிறது. காங்கிரஸ் கட்சியும் இதை ஆமோதிக்கிறது. உத்தர பிரதேசத்தில் அரசியல் செய்து வளர்ந்த காங்கிரஸ் இன்று அதே மாநிலங்களை இழிவாக பேசுகிறது.

முதலில் சனாதனத்தை இழிவுப்படுத்தினார்கள், பிறகு ஒ பி சி விவகாரத்தை கொண்டு சாதி பிரிவினையை தூண்டினார்கள், பிறகு வடக்கு தெற்கு பிரிவினையை உருவாக்குகிறார்கள். இந்தியா கூட்டணியில் இருக்கும் லாலு பிரசாத் யாதவ், அரவிந்த கெஜ்ரிவால், மம்தா பேனர்ஜி, தேஸ்வி யாதவ் அனைவரும் ஒன்றுமே நடக்காதது போல் இருக்கப் போகிறார்களா? ” என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

கூட்டணிக்குள் குழப்பமா?

இதனைத் தொடர்ந்து இந்தியா கூட்டணியில் உள்ள ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பிஹார் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

“கருணாநிதி தலைமையிலான திமுக சமூக நீதியின் மீது நம்பிக்கைக் கொண்டது. பிஹார் மக்கள் குறித்து திமுக தலைவர்கள் தவறாக பேசியிருந்தால் அது கண்டத் துக்கு உரியது. பிஹார் மற்றும் உத்தரபிரதேச தொழிலாளர்கள் நாடு எங்கிலும் விரும்பப்படுகிறார்கள். அவர்கள் இல்லையென்றால் நிலைமைகள் ஸ்தம்பித்து விடும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

லாலு பிரசாத் தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியுடன் திமுக இணக்கமான உறவினை பின்பற்றுகிறது. இந்தியா கூட்டணியின் கூட்டம் பிஹாரில் நடந்த போது, தேதஸ்வி யாதவின் வீட்டிற்கு சென்ற முகஸ்டாலின் அவரின் தாயார் ராப்ரி தேவியை நேரில் சந்தித்தார். சென்னையில் நடைபெற்ற கருணாநிதியின் சிலை திறப்பு நிகழ்வுக்கு தேஜஸ்வி நேரில் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தார். அதே சமயம் திமுக இன்று பேசிவரும் பல்வேறு அரசியல் பிரச்சனை கள் எதுவும் 2014ம் ஆண்டுக்கு பின் எழுந்தவை அல்ல, பல தசாப்தங் களாகவே அரசியல் களத்தில் விவாதப்பொருளாக இருந்துவரும் பிரச்னைகள். விடுதலைக்கு முன் 1930 ம் ஆண்டில் இருந்தே இந்தி திணிப்புக்கு எதிராக போராட்டங்கள் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளன. இந்த போராட்டங்களை அதிகம் எதிர்கொள்ள நேர்ந்தது காங்கிரஸ் ஆட்சியாளர்கள்தான்.ஆனால், 2014—ல் பாஜக ஆட்சிக்கு வந்தவுடன் இந்த மோதல்கள் கூர்மை அடைந்துள்ளன என்று கூறலாம். ஏனென்றால், இந்துத்துவா, இந்தி மொழி, சாதி பிரச்னைகள், சமஸ்கிருதம், சனாதனம் எந்த விவகாரத்தை எடுத்துக் கொண்டாலும், திமுக மற்றும் பாஜக இரு கட்சிகளும் தங்கள் மாறுபட்ட கருத்துகளை பரிமாறிக் கொள்ளும் தொனி, தாக்குதல் மற்றும் மோதல் போக்கு கொண்டதாகவே இருக்கின்றன.இந்த சர்ச்சைகள் பொதுவாக திமுகவுக்கும், தமிழ்நாட்டில் முன்னெடுக்கப்படும் அவர்களது அரசியலுக்கும் இடையூறாக இல்லை. ஆனால், இந்தியா கூட்டணிக்கு குறிப்பாக இந்தி பேசும் மாநிலங்களில் இது கவலை தரக்கூடியதாகவே மாறி வருகிறது.

குறிப்பிட்டு சொல்லத்தக்க மற்றொரு சர்ச்சை, உதயநிதி ஸ்டாலின் கூறிய ‘சனாதன தர்மம்’ குறித்த கருத்துகள் ஆகும். உதயநிதி, சனாதனத்தை கொடிய நோயுடன் ஒப்பிட்டு, அதை ஒழிக்க வேண்டும் என்று பேசியிருந்தார். காங்கிரஸ் கட்சி இந்த விவகாரத்தில் பெரிதாக தலையிடாத நிலையில், பாஜகவோ இந்த பிரச்னையை நாடு முழுவதும் பேசியது. பிரதமர் நரேந்திர மோதி தனது தொண்டர்கள் இதை எதிர்க்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். எனினும் திமுக தனது கூற்றை, தனது வார்த்தைகளை மாற்றிக் கொள்ளவில்லை.கலாச்சார பண்பாட்டு அடையாளங்கள் குறித்த விவகாரங்களில் தமிழ்நாடு








தனித்தே நிற்கிறது. தென்னிந்தியாவில் உள்ள அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா இந்தியை எதிர்க்காத போது, தமிழ்நாட்டில் பெரும் போராட்டங்கள் வெடித்தன. அதே போன்று தான் நீட் விவகாரத்திலும். ஆனால் இந்த கோரிக்கைகளும் விவகாரங்களும் நாட்டின் பிற பகுதிகளிலும் எளிதாக புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை.

"திராவிட கட்சிகள் தேசிய அரசியலில், முக்கிய பங்கு வகித்து வருகின்றன. இந்நேரத்தில், நமது சிந்தாந்தம், அரசியல் கருத்துகளை தெரியாத மாநிலங்களோடு உறவாட பயன்படுத்தும் மொழி முக்கியமானதாகும். அப்போது தான் நமது கருத்துகளை இந்தியா முழுவதும் எடுத்து செல்ல முடியும். இந்த விவகாரங்களில் இன்னும் நேர்த்தியான மொழி பயன்படுத்தப்பட்டிருந்தால், வட இந்தியாவில் இன்னும் ஆழமான புரிதலை உருவாக்கலாம்" என்று திமுக இலக்கிய பணிகளை மேற்கொள்ளும் மூத்த தலைவர் கூறினார்.

எனவே இந்திய அரசியலில், தேசிய கூட்டணி என்பது பொது எதிரி கொண்டிருப்பது மட்டுமல்ல, பல்வேறு பின்புலங்களிலிருந்து வரும் வெவ்வேறு அரசியல் பார்வைகள் குறித்து விவாதிப்பதற்கான தளத்தையும் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்ப்பு எழுகிறது.தயாநிதி மாறனின் வீடியோவை பற்றி கருத்துச் சொன்ன பாஜக தலைவர் அண்ணாமலை, இன்றைய சூழல் மாறிவிட்டது என்கிறார். "இந்தியாவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் இருந்து வந்தது. ஆனால் இன்று உத்தரபிரதேசம் வந்து விட்டது. மேலும் இரு மாநிலங்கள் தமிழ்நாட்டுக்கு கடும் போட்டியை தருகின்றன. சீக்கிரமே தமிழகம் ஐந்தாவது இடத்துக்கு தள்ளப்படும். எனவே தமிழகத்துக்கு தேவை புதிய பார்வை கொண்ட பாஜக தான்" என்கிறார்.

கோவையில் செய்தியாளர்களை சந்தித்த பாஜக சட்டமன்ற உறுப்பினர் வானதி ஸ்ரீநிவாசன், "(தயாநிதிமாறன்) இது போன்ற கருத்துகள் தெரிவிப்பது, தரக்குறைவாக பேசுவது முதல் முறை அல்ல. பான் போடுகிறவர்கள் என ஒரு தலைவர் கூறியிருந்தார். கோமூத்ரா மாநிலங்கள் என பேசி மன்னிப்பு தெரிவித்து வந்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார். மொழியை,மாநிலங்களின் பிராந்தியத்தை வைத்து இழிவுப்படுத்துவது திமுகவின் பாரம்பரியத்தில் இருக்கக் கூடியது. மத்திய தொழில் பாதுகாப்புப் படை வீரர் இந்தியில் பேச சொன்னதுக்கு ட்வீட் போட்ட முதல்வர் ஸ்டாலின் , நிதிஷ் குமார் பேசியதாக சொல்லப்படுவதற்கு ஏன் அமைதியாக இருக்கிறார்?" என கேட்டுள்ளார்.




இது குறித்து பேசிய திமுக நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன், "பாஜக திமுகவை வலிமையான கட்சியாக பார்க்கிறது. தெளிவான சிந்தனையும் சிந்தாந்தமும் கொண்ட கட்சி திமுக என்பதால், திமுகவை பார்த்து பயப்படுகிறது பாஜக. உதயநிதி ஸ்டாலின் கூறிய கருத்தை பெரியார் கூறியிருக்கிறார், அம்பேத்கர் கூறியிருக்கிறார். ஏன் உதயநிதி ஒரு அரங்கில் பேசியதை மட்டும் எடுத்து சர்ச்சையாக்க வேண்டும்? மதம் மொழி இதை வைத்து தான் பாஜக அரசியல் செய்கிறது. உண்மையில் தயாநிதி மாறன், வட நாட்டு தொழிலாளர்களை பாராட்டி பேசுகிறார், அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள், தமிழ்நாடு அவர்களை அன்புடன் நடத்துகிறது என்று தான் கூறுகிறார்" என்றார்.

முன்பைவிட அதிக எச்சரிக்கை உணர்வுடன் எதிர்க்கட்சிகள் இருந்தாலும் பாஜகவின் காய்நகர்த்தல்களை வெல்ல இன்னும் கூடுதலான ராஜதந்திரம் அவசியம். அதைப் பொறுத்துதான் 'இந்தியா'வின் எதிர்காலம் அமையும்!

கட்டுரை



## சோழர்கள் ஆட்சியில் நுட்பமான நீர் மேலாண்மை

ஒவ்வோர் ஆண்டும் பருவ மழை பெய்வது வழக்கம். அந்த மழை நமக்கு ஒரு வரலாற்றுப் படிப்பினையைத் தொடர்ந்து கற்றுக் கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறது.ஓரிரு நாட்களில் பெய்த அதிகனமழை சென்னையைப் புரட்டிப்போட்டு விட்டது. இயற்கை நமக்கு வகுத்துக் கொடுத்த முறைகளை நாம் சரியாகப் பின்பற்றாததுதான் இது போன்ற பேரிடர்களுக்கு காரணம் என்கின்றனர் இயற்கையியலாளர்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 ஏரிகள் உள்ளன. அவற்றுள் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 124 ஏரிகளும், 34 கோவில் குளங்களும் உள்ளன. இதில் ஏரிகளின் மொத்த கொள்ளளவு சென்னை மாநகர பரப்பளவில் 5.5 சதவீதமே ஆகும்.

பழங்காலத்தில் சோழ அரசர்கள் நீர் மேலாண்மையை வெகு லாகவமாக கையாண்டு தண்ணீரைப் பாதுகாத்து விவசாயத்திற்கு, குடிநீருக்கு என திட்டமிட்டுப் பயன்படுத்தி வந்தார்கள். இருப்பினும், சில நேரங்களில் ஏற்படும் புயல் மழையில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் அளவிற்கு கட்டுமானங்களையும் நீர் வழித் தடங்களையும் வைத்திருந்தார்கள்.

தற்போது சென்னையில் பெய்த புயல், மழை, வெள்ளம் போன்ற தாக்குதல்கள் பழங்காலத்தில் ஏற்பட்டபோது என்ன செய்தார்கள், எப்படி அவர்கள் மக்களை பாதுகாத்தார்கள் என்பது குறித்து இதில் விரிவாக பார்ப்போம்.

கல்வெட்டு ஆய்வாளரும், வரலாற்று எழுத்தாளருமான குடவாயில் பாலசுப்பிரமணியன் பிபிசி தமிழிடம் பேசியபோது, “முன்னோர்கள் குறிப்பாக சோழர்கள் நீர் மேலாண்மையில் நிபுணர்களாகவே விளங்கினார்கள் என்ற போதிலும் புயல், மழை காலத்தில் சில நேரங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களையும் கல்வெட்டுகளாக பதிவு செய்து வைத்தார்கள்,” என்று கூறினார்.

### 825 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த பெருமழை

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 12ஆம் ஆட்சி ஆண்டில் அதாவது 825 ஆண்டுகளுக்கு முன்பு தொண்டை மண்டலத்தில் மிக கனத்த மழை பெய்தது. அதன் காரணமாக அன்றே காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள சோமங்கலம் ஊரில் இருந்த பெரிய ஏரியின் கரையில் ஏழு இடங்கள் உடைந்து வெள்ளம் பெருகி ஊர் சீர்குலைந்தது என்று குறிப்பிடுகிறார் குடவாயில்








பாலசுப்பிரமணியன். அவர் கூறியதன்படி, அந்த உடைப்புகளை திருச்சுரக் கண்ணப்பன் திருவேகம்படையார் கம்பமுடையான் காமன் கண்ட வானவன் என்பவன் அடைத்து ஏரிக்கரையைப் பலப்படுத்தினான். தொடர்ந்து அடுத்த ஆண்டும் பெருமழை வெள்ளத்தால் அதே ஏரி நிரம்பி உடைந்தது, மீண்டும் திருவேக கம்பமுடையான் அவற்றை அடைத்து சீர் செய்தான்.

மேற்கொண்டு விளக்கியவர், "அதற்கு அடுத்த ஆண்டு முதல் அது பலப்பட்டு நின்றது. அது தொடர்ந்து நடைபெற வேண்டும் எனக் கருதி அவன் சோமங்கலத்து ஊர் சபையோரிடம் 40 பொற்காசுகளை ஏரி பராமரிப்பிற்காக நிரந்தர வைப்புத் தொகையாக அளித்தான். அதைப் பெற்ற சபையோர் அந்த வைப்புத் தொகையை

## மாயகிருஷ்ணன்.க

வட்டிக்கு ஈடாக 12 பிடி என்ற பரப்பளவுடைய குழிக்கோலால் 40 குழி நிலத்தை ஆண்டுதோறும் தோண்டி ஏரிக்கரையைப் பலப்படுத்த ஒப்புக்கொண்டனர். இதுபோல் இன்னும் பல கல்வெட்டுகள் உள்ளன.

அதுபோன்று பெருமழை காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் ஏரி உடைந்து ஊர் நிலங்கள் அனைத்தும் பாழ்பட்ட பின்பு பெரும் பஞ்சம் ஏற்பட்ட போதும், தாம் வைத்திருந்த நகைகளையும்






சொத்துகள் முழுவதையும் சீரமைப்புப்



பணிகளுக்காகக் கொடுத்து நீர்நிலைகளையும் ஊரையும் மங்கையர்கரசியார் என்ற பெண்மணியும் அவரது சகோதரர் நாற்பத்தெண்ணாயிரம்பிள்ளை என்பாரும் காத்தனர," என்று குறிப்பிட்டார் குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்கள் அளித்த கொடைகள் பற்றிய செய்திகளை திருவண்ணாமலை கோவிலில் உள்ள மூன்று சோழர் கால கல்வெட்டு சாசனங்கள் எடுத்துக் கூறுவதாகவும் அவர் கூறினார்.

வெள்ளத்தைத் தடுக்க நாணல்

அதேபோல், விஜய நகர மன்னர்கள் காலத்தில் திருச்சி திருவரங்கம் பகுதியில் வெள்ளத்தால் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்காக ஔக்கு நாராயண திருவேங்கடய்யங்கார் என்பவர் திருவரங்கத்தின் மேற்கு கரைக்கு எந்திர ஸ்தாபனம் செய்தும் அய்யனார் உருவச்சிலை அமைத்தும் காவிரி ஆற்றில் ஏற்படும் வெள்ளத் தின் வேகத்தைக் குறைக்க வடகரையில் நாணலை நட்டதாகவும் விஜயநகர மன்னர் சதாசிவராயரின்






திருவரங்க கோவில் கல்வெட்டு தெரிவிக்கின்றது.



தஞ்சை பெரிய கோவிலின் மிகச் சிறந்த வடிகால் அமைப்பு

புகழ்பெற்ற தஞ்சை பெரிய கோவிலின் கட்டுமான அற்புதங்களில் ஒன்று அதன் வடிகால் கட்டமைப்பு. எவ்வளவு பெரிய மழை பெய்தாலும் அந்தக் கோவிலில் நீர் தேங்குவதைப் பார்க்க முடியாது என்கிறார் குடவாயில் பாலசுப்பிரமணியன்.அதுகுறித்து விவரித்தவர், “கோவிலின் உள்ளே இருக்கும் வடிகால்கள் கோவிலில் உள்ள நீரை வெளிப் பிரகாரம் வழியாக அருகில் உள்ள சிவகங்கை குளத்திற்குக் கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாம் அதை நேரில் காண முடியும். அதேபோல் சோழர்கள் காலத்தில் சாலைகள் நடுவே மேடாகவே வடிவமைக்கப்பட்டன. இதனால் மழை பொழியும்போது சாலை பயணமும் தடைப்படவில்லை. நீர்நிலைகளை நோக்கிய மழை நீரின் பயணமும் தடைப்படவில்லை. சோழர்கள் தங்கள் உட்கட்டமைப்புகளை வடிவமைக்கும்போது நீர் மேலாண்மையை மனதில் கொண்டே திட்டமிட்டுச் செயல்பட்டனர்.

ராஜராஜசோழன் காலத்தில்தான் நீர்நிலைகளை உருவாக்கி பாதுகாக்கவும், நீரை சமமாகப் பங்கிடவும் ஆயக்கட்டு என்ற கிராம சபை அமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழக வரலாற்றில் மிகப் பிரமாண்டமான ஏரிகள் வெட்டப்பட்ட காலம் என்று சோழர்கள், அதிலும் குறிப்பாக ராஜராஜன்

காலத்தைக் கூற முடியும். தொழில்நுட்பத்தின் முன்னோடி இராஜராஜ சோழன்," என்று அவர் கூறினார்.

சோழர்களின் நீர் மேலாண்மை குறித்து விழுப்புரம் அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி வரலாற்று துறை பேராசிரியர் பேசினார்.அப்போது அவர், "ஒரு நாட்டின் வளமையும், வலிமையும் நீர் ஆதாரங்களைப் பொறுத்தே அமைகிறது. சங்க காலம் தொட்டே நீர்நிலைகள் பற்றிய சான்றுகள் கிடைக்கின்றன. பல்லவர்கள் மற்றும் பாண்டியர்கள் ஏரி, குளம், கிணறு ஆகிய நீர் ஆதாரங்களை உருவாக்கி பாதுகாத்ததை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன," என்று தெரிவித்தார். "பல்லவர் காலத்தில் மகேந்திர தடாகம், சித்திரமேக தடாகம், பரமேஸ்வர தடாகம், வைரமேக தடாகம் போன்ற பல ஏரிகள் உருவாக்கப்பட்டன. பாண்டியர்களின் காலத்தில் புள்ளனேரி, எருக்கங்குடி ஏரி, திருநாராயண ஏரி, மாலங்குடி பெருங்குளம், மாறனூர் பெருங்குளம் போன்ற ஏரிகள் மற்றும் குளங்கள் ஏற்படுத்தப்பட்டதை கல்வெட்டுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சோழர்கள் காலத்தில் பல ஏரிகள், குளங்கள், கிணறுகள் வெட்டப்பட்டதோடு பழைய நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டதை கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. வீரநாராயண பேரேரி (வீராணம்), கண்டராதித்த பேரரி, செம்பியன் மாதேவி பேரேரி, போன்ற பல நீர் நிலைகளை உருவாக்கினர்."மேலும், அவற்றைத் தொடர்ந்து தூர்வாரி முறையாகப் பராமரித்து நீரை சேமித்து அதைப் பாசனத்திற்கும் பயன்படுத்தினார்கள். மேலும் நீர்நிலைகள் பராமரிப்பிற்கு என்று குழுக்கள் அமைக்கப்பட்டதையும் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிவதாகவும் பேராசிரியர் ரமேஷ் கூறுகிறார்.

முட்காடுகளை அழித்து ஏரி

"கி.பி. 871இல் விஜயாலய சோழன் ஆட்சிக் காலத்தில் ஐம்பை அருகே உள்ள பள்ளிச்சந்தல் என்னும் ஊரில் வானர்குல சிற்றரசர் சக்கன் வைரி மலையன் என்பவர் தனது பெயரில் சமண பள்ளிக்குரிய பள்ளி நிலத்திற்கு நீர் பாய்ச்சுவதற்காக ஒரு ஏரியை அமைத்தார்." அதைப் பராமரிப்பதற்காக முட்காடுகளை அழித்து நிலத்தைத் திருத்தி ஏரிப்பட்டியாக வழங்கியதை கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதன் மூலம் ஏரி பராமரிப்பிற்காக தனியாக நிலம் வழங்கி அதை ஏரிப்பட்டியாக அளித்ததையும் ஐம்பை கல்வெட்டு தெளிவாக உணர்த்துவதாகக் கூறுகிறார் பேராசிரியர் ரமேஷ். ஐம்பை கோவிலின் அர்த்த மண்டபத்தின் தெற்கு சுவர் பகுதியில் உள்ள மற்றொரு கல்வெட்டு ராஜராஜனின் 24ஆம் ஆண்டு கல்வெட்டு எனக் குறிப்பிடுகிறார் அவர். அதில் "சிற்றரசன் இராச ராச வான கோவரையன், அரையர் காளாதித்த பேரேரி என்ற ஏரி ஒன்றை வெட்டி வைத்ததைக் கூறப்பட்டுள்ளது. அதேபோல் நெற்குன்றமாகிய வைரமேக சதுர்வேதி மங்களத்து சபையோர் குளம் வெட்டுவதற்கான நிலத்தை எடுத்துக்கொண்டு அதற்கு சமமான வேறு நிலம் கொடுத்த ஒப்பந்தத்தையும்" கூறுகின்றது.

ஓடத்தைப் பயன்படுத்தி தூர் வாரிய நிகழ்வு

இவை மட்டுமின்றி, திருச்சி மாவட்டம் நங்கவரம் கல்வெட்டு குளம் தூர்வரப்பட்டதைப் பற்றிய சுவாரஸ்யமான தகவலைத் தெரிவிக்கின்றது. குளத்தில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து ஆழப்படுத்துவதற்காக பணியாட்களும், ஓடங்களும் வழங்கப்பட்டதைக் குறிப்பிடுவதைத் தெரிவித்தார் பேராசிரியர் ரமேஷ். "அதாவது 6 பேர் ஓடத்தை இயக்கி கூடையைக் கொண்டு 140 கூடை எண்ணிக்கையில் குளத்தில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து வந்து குளத்தின் உச்சிக் கரையில் கொட்டுவதற்கு 6 பேருக்கு ஓராண்டுக்கு 320 களம் நெல்லும், சோறு மற்றும் ஆடையும் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.




இதற்கான ஓடத்தை செய்வதற்கு தச்சன், கொல்லன் ஆகிய இருவருக்கும் இரு களம் நெல்லும், மரம் கொடுக்கும் வலையருக்கு இரு களம் நெல்லும், குளத்தைக் கண்காணிக்கும் கண்காணி இருவருக்கு 45 களம் நெல்லும் வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது."இந்த ஏற்பாட்டை அந்த ஊர் சபையோரே பயிர் செய்து தரவேண்டும் என்றும் இதைச் செய்யத் தவறினால் சபையோர் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று அவர்களே உறுதிமொழி அளித்ததை கல்வெட்டு தெரிவிப்பதாகவும் விளக்கினார் அவர். "இதேபோன்று காப்பலூர் குளத்தில் வண்டல் மண் அள்ளுவதற்கு முதலாம் பராந்தக சோழன் காலத்தில் ஓடம் தரப்பட்டதை கல்வெட்டு கூறுகின்றது. இதன்மூலம் சோழர் காலத்தில் ஓடங்களை பயன்படுத்தி தூர்வாரியதை அறிய முடியும்," என்கிறார் ரமேஷ்.

ஏரி மதகு பாதுகாப்பு

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே கிளியனூர் பெருமாள் கோவிலில் உள்ள உத்தம சோழனின் கல்வெட்டு இந்த ஊர் ஏரியின்

மதகை பராமரிப்பதற்காக வோசாலிப்பாடி புடைப்பாக்கத்தைச் சேர்ந்த சாத்தன் மல்லடிகள் என்பவரிடம் ஏரி பாய்ச்சல் நிலத்தில் விளைந்த நெல்லை ஒவ்வொரு போகத்திற்கும் ஒரு தூணி அளவு கொடுக்க வேண்டும் என்றும் மேலும் நிலத்தை விற்று இந்த ஊர் சபையினர் கொடுத்ததையும் ஒரு தெரிவிப்பதாக விவரித்தார் பேராசிரியர் ரமேஷ். “ராஜராஜ சோழன் காலத்தில் நீர்ப்பாசனத்திற்காகத் தோண்டப்பட்ட குளங்களை ஆண்டுதோறும் பராமரிப்பதற்காக நிலங்களை வழங்கி அதிலிருந்து விளையும் நெல் வருவாயைக் கொண்டு பராமரித்தனர். இவ்வாறு அளிக்கப்பட்ட நிலம் ஏரிப்பட்டி, குளப்பட்டி என்றும் அழைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் திருவிளாங்குடி கோவிலில் உள்ள முதலாம் ராஜராஜனின் கல்வெட்டு குடிகாடு குளம் என்னும் ஏரி உடைந்து முள்காடு மண்டி கிடந்ததையும் அந்தக் காடுகளை அழித்து குளத்தை ஆழப்படுத்தி கரையைக் கட்ட வேண்டும் என்றும் ஊர் சபை சோழ அதிகாரியான உத்தம சோழ நல் உடையானிடம் விண்ணப்பித்து இந்த ஊர் ஏரியில் கூடி முடிவெடுத்து ஏரியிலிருந்து முட்காடுகளை அழித்து தூர்வாரி கரைகட்டி அதைப் பராமரிக்க நிலதானம் வழங்கியதையும் தெரிவிக்கின்றது.”

ஏரி தூர்வார வயது வரம்பு... கட்டுப்பாடு...

முதலாம் ராஜேந்திர சோழனின் பாகூர் கல்வெட்டு கடம்பனேரியை தூர்வாருவதை விரிவாக தெரிவிப்பதாக பேராசிரியர் ரமேஷ் குறிப்பிட்டார்.

“அழகிய சோழன் என்னும் மண்டபத்தில் நீலன் வெண்காடன் என்ற அதிகாரி உடனிருக்க மக்கள் பெருமளவில் கூடி ஏரி வரி மற்றும் தூர்வாருதல் பற்றி முடிவு செய்ததைக் குறிப்பிடுகின்றது. இந்த ஊர் மட்டுமல்லாமல் வெளியூரில் இருந்து இந்த ஊரில் பயிர் செய்வோரும் ஏரி வரியைச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் ஏரியைத் தூர்வார வேண்டும் என்றும் அதன் அளவைத் துல்லியமாக அளவிட்டு உள்ளது.

நான்கு சாண் அளவுள்ள அளவுகோலால் இரண்டு கோலுக்கு இருகோல் அகலமும் ஒரு கோல் ஆழமும் கொண்ட ஒரு குழி தோண்ட வேண்டும் என்றும் குழி தோண்டுபவர்களுடைய வயது வரம்பு 10 வயதிற்கு மேல் 80 வயதுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்றும் கல்வெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.” தோண்டாத நபர்களிடமிருந்து ஏரி வாரிய நிர்வாகிகள் தண்டப்பணம் வசூலிக்க வேண்டும் எனவும் அவ்வாறு வசூலிக்காத ஏரி வாரிய நிர்வாகிகளிடம் இருந்து ஆணையை மீறியவர்கள் என்று கல்வெட்டு துல்லியமாகத் தெரிவிக்கின்றது எனவும் ரமேஷ் தெரிவித்தார்.




“நீர் நிலைகளின் கரைகளில் மரம் வளர்த்து கரையை மண் சரிவு ஏற்படாமல் பாதுகாத்து வந்துள்ளனர். கரைகளில் உள்ள மரங்களை வெட்டுவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் கீரனூரில் உள்ள மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு நீர்நிலைகளையும் அவற்றின் கரைகளில் உள்ள மரங்களையும் அழிக்க மாட்டோம் என்று உறுதிமொழி கூறியதைக் கூறுகின்றது.அதாவது தங்களுக்குள் எவ்வித பகையோ மோதலோ வந்தாலும் ஊரில் உள்ள ஏரி, வயலில் உள்ள கிணறுகள் குளக்கரையில் உள்ள மரங்கள் இவற்றை அழிக்கவோ வெட்டவோ கூடாது என்றும் அதையும் மீறி அழிப்பவர்கள் நிலத்தை தண்டமாகச் செலுத்த வேண்டும் எனவும் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இதுபோல் சோழர்கள் காலத்தில் நீர் நிலைகளை ஏற்படுத்தி மழை நீரை சேகரித்தும் பாதுகாத்தும் பராமரித்தும் பயிர்த் தொழிலுக்கு மட்டுமல்லாது குடிநீருக்காகவும் பயன்படுத்தி உள்ளார்கள். மேலும் வெள்ளப் பெருக்கெடுக்கும் காலத்தில் நீர் வழித் தடத்தைச் செப்பனிட்டு வந்ததால் பெருமளவு வெள்ள பாதிப்பின்றி அவர்களால் மக்களைப் பாதுகாக்க முடிந்தது,” என்று கூறி முடித்தார் ரமேஷ்.

மழை, புயல், வெள்ளம் என இயற்கை சீற்றங்கள் பழங்காலத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தியதாகவும் அதுகுறித்த கல்வெட்டுகள் தென்னிந்தியா முழுவதும் காணப்படுவதாகவும் கூறுகிறார் திருவண்ணாமலை வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலாளரும் அம்மாவட்டத்தின் வட்டாட்சியருமான பாலசுப்பிரமணியன்.“மூன்றாம் ராஜராஜனின் திருமழப்பாடி கல்வெட்டில் வேளாண் என்பவன் திருமழப்பாடி கிராமத்தை கொள்ளிட ஆற்றின் வெள்ளத்தால் சேதம் உண்டாகாமல் தடுப்பதற்காக அதன் தென்பகுதியில் கரையமைத்து ஊரைக் காப்பாற்றியதைத் தெரிவிக்கிறது.

விக்ரம சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் வெள்ளம் ஏற்பட்டு ஊர் அழிந்ததை வட ஆற்காடு மாவட்டம் திருவோத்தூர் வேதபுரீஸ்வரர் கோவில் கல்வெட்டு மூலம் அறியலாம்.



காடவராயர்கள், கடலூர் மாவட்டத்தில் பெருமாள் ஏரி, புதுச்சேரி திருபுவனை ஏரி, ஒழுகரை ஏரி, திருக்கோவிலூர் அருகே கொளத்தூர் ஏரி எனப் பல இடங்களிலும் ஏரிகள் வெட்டி அதைப் பாதுகாத்து வந்ததை கோப்பெருஞ்சிங்கன் கால கல்வெட்டு மூலம் அறிய முடியும்.

கோப்பெருஞ்சிங்கனின் எட்டாம் ஆட்சியாண்டு காலத்தில் திரிபுவனமாதேவி ஏரியில் பெருவெள்ளம் ஏற்பட்டு மதகு உடைந்து அழிவு ஏற்பட்டதையும் அதை சீர்செய்து கரையை நன்றாகக் கட்டியதையும் கல்வெட்டு செய்தி உணர்த்துகின்றது," என்று விளக்கினார் அவர்.

பிட்டுக்கு மண் சுமந்த கதை...

மேலும், "முதல் பராந்தகன் காலத்தில் திருப்பாற்கடலில் பெரு மழையால் ஏற்பட்ட ஏரி உடைப்பை அடைப்பதற்காக 30 களஞ்சி பொன் ஏரி வாரிய பெருமக்களிடம் கொடுக்கப்பட்ட செய்தி கல்வெட்டு மூலம் அறியலாம்.

ஏரிகள், ஆறுகள், வாய்க்கால்கள், கரைகள், பெரும் புயல் மழை வெள்ளத்தால் உடையும்போது அவை உடனடியாகச் சீரமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. அதற்கு பெருமளவிலான மனித உழைப்பு அந்தக் காலத்தில் தேவைப்பட்டது.

அப்போது ஒவ்வொரு குடும்பமும் அல்லது ஒவ்வொரு நில உடமையாளரும் தாங்களே இலவச கட்டாய சேவையாக வேலையாட்களை அத்தகைய பணிகளுக்கு அனுப்புவது மரபு. இப்படி நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியின் அடிப்படைதான் திருவிளையாடல் புராணத்தில் குறிக்கப்படும் பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்ச்சியாகும்," என்று விவரிக்கிறார் பாலசுப்பிரமணியன்.




அதுமட்டுமின்றி, "ராஜராஜனின் 20ஆம் ஆட்சியாண்டு காலத்தில் திருவண்ணாமலை உடையார் கோவில் பகுதியில் பல இடங்களில் ஆறு, ஏரிக் கரைகள் உடைந்து கிடந்ததை கல்வெட்டு செய்தி தெளிவாக உணர்த்துகின்றது.

சந்திரமௌலி ஆற்றில் வந்த பெரும் வெள்ளத்தால் ஊருக்கு சேதம் ஏற்படாமல் இருப்பதற்காக திருமறை காடுடையான் என்பவன் ஆற்றின் போக்கையே மாற்றியுள்ளான். இது தொடர்பான கல்வெட்டு திருக்குவளை தியாகராஜ சுவாமி கோவிலில் உள்ளது.

மேலும், அக்காலத்தில் ஏரி, ஆறு என நீராதாரங்கள் குறித்த தெளிவும் புரிதலும் அரசர் முதல் மக்கள் வரை அனைவரிடத்திலும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதனால்தான் அதற்கு வாரியம் அமைத்து பாதுகாத்துப் பயன்படுத்தி வந்தனர், என்கிறார் திருவண்ணாமலை வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலாளர் பாலசுப்பிரமணியன்.

# அழியாப் பெருவெளி

இப்போதெல்லாம் பெருவிருப்பு ஏதுமில்லை!
இப்போதெல்லாம் பசித்தலோ புசித்தலோ
இப்போதே என்பதிலே நிச்சயமில்லை!
இப்படித்தான் என்பதிலும் நிச்சயமில்லை!

எப்படித்தான் மாற்றினாயோ என்னை?
எப்படித்தான் மாறினேனோ விந்தை!
எப்படியேனும் முன்பு கேள்வியெழும்!
எப்படியோ அதற்கொரு பதிலிடுகிறாய்!

உடுப்பை மாற்றுவது நடைமுறைதான்!
உடம்பை மாற்றுவது உன்முறைதான்!
உடம்பொரு கட்டையென நினைத்தேன்!
உடம்பொரு நிட்டையென நீயுரைத்தாய்!

உண்டது செரிக்கப் போராடினேன்!
உண்டது செழிக்கவே போதித்தாய்!
உணவுப் பழக்கத்தை மாற்றினேன் சரி!
உணர்வுப் பழக்கமும் மாற்றியதே மதி!

ஒவ்வொரு தொடர்பிலும் கண்ணியுண்டு!
ஒவ்வாததைக் காணவே கண்ணிரண்டு!
ஒவ்வொரு முடிவினுக்கு உள்ளேயும்
ஒவ்வொரு தொடங்கலும் தானுண்டு!

தோற்றுவாய் எங்குள்ளது தானறியேன்!
தோற்றங்காட்டி அவ்வப்போ தழைக்கிறாய்!
தோற்றமேனென விளங்கவே வைக்கிறாய்!
தோற்றத்தில் ஒகமொரு யாகமென்கிறாய்!

அழிந்த அனைத்தையும் மறந்தபோது
அழிந்ததற்குள் அழியாததைச் சுட்டினாய்!
அழியும் பொருளுலகில் அலைந்திருந்தேன்!
அழியாப் பெருவெளியைக் கைகாட்டினாய்!




**கொற்றவன்**



அன்பு பெருக...
மகிழ்ச்சி என்றும் தங்க...
செல்வம் நிலைக்க...
நோய் நீங்க...
முயற்சி பெருக...
வெற்றி என்றும்
உங்கள் வசமாக...
இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
VARSHA™
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

42

## 42 நள்ளிரவில் எழுந்த நாதம்!

கொற்றவன்

மயங்கிக் கிடந்த கயல்விழி கண்மலர்ந்தபோது, மகாராணியார் மடியில் தான் தலைவைத்து படுத்துக் கிடப்பதையும், இருபுறமும் தோழியர் இருவர் மயிலிறகால் விசிறியபடி நிற்பதையும் கண்டாள்.

“மன்னியுங்கள் மகாராணி!” என்றவாறே பதறிப்போய் எழ முற்பட்டவளை அமைதிப்படுத்தினார் மகாராணியார்.

“என்ன கயல்விழி? ஏன் பதற்றப்படுகிறாய்?”

அதற்குள் வேகமாய் எழுந்து அமர்ந்தவள், “மன்னியுங்கள் மகாராணி! அனைவருக்கும் சிரமம் கொடுத்து விட்டேன்.” எனப் பணிவுடன் கூறினாள்.

“கயல்விழி! இதென்ன அன்னியமான வார்த்தை நமக்குள்? மன்னிப்பு என்ற வார்த்தையை நீ என்னிடம் பயன்படுத்தலாமா? இனி அப்படி ஏதும் கூறாதே!” என்ற மகாராணி தேவண்மாளின் குரலில் கண்டிப்பு தெரிந்தது.




சற்றுத் தூரத்தில் நின்றிருந்த பெரியவர் கயல்விழியின் அருகில் வந்தார்.


“கயல்விழி! நீ காலையில் இருந்தே உணவருந்தவில்லையாமே! அதனால்தான் உனக்கு மயக்கம் வந்துவிட்டது!” என்றபடி வந்து நின்ற பெரியவர், தன் பேச்சில் பொடிவைத்து கூறியதை உணர்ந்தாள் கயல்விழி.

அங்குள்ளவர் எவருக்கும், கடலரசி பற்றிய விவரம் கூறியதால்தான் கயல்விழி மயங்கி விழுந்தாள் எனத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே பெரியவர் அவ்விதம் குறிப்பால் உணர்த்தினார்.

வாழ்க்கையில் நடக்கும் சில நிகழ்வுகளின் போது, அவை எதற்காக நடக்கின்றன என்பது புரிபடுவதில்லை! புரியாத புதிர்போல இருப்பதைச் சிலர் ஆண்டவன் செயல் என்றும், சிலர் இயற்கையின் நியதி என்றும் கூறுகிறார்கள்.

எது எப்படியிருப்பினும், எதிர்பாராத அந்த நிகழ்வுகளின் தாக்கத்தால் அல்லலுறுகிற மனங்கள் பரிதவிக்கும்போது, அவரவர் அனுபவத்தின் மூலம் தங்கள் நிலையை வெளிப்படுத்தி, தான் இன்னார் என்பதைக் காட்டி விடுகிறார்கள்.

அப்படிப்பட்ட நிலையில்தான் கயல்விழி மயங்கி விழுந்து தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறாள்.



ஒரு நாழிகைக்கு முன்பாக...

கயல்விழியிடம் எப்படிச் சொல்வதென்ற தடுமாற்றத்துடன் தான் பெரியவர் சிலவற்றைச் சொல்ல முற்பட்டார்.

பெரியவர் தனது வார்த்தைகளை அளந்து அளந்து பேசத் தொடங்கினாலும், அதைக் கேட்ட கயல்விழியின் இதயத் துடிப்பின் வேகம் பன்மடங்கு கூடியதன் விளைவால் கால்கள் ஆட்டம் கண்டு, கண்கள் மேலே சொருக தன் பாட்டனாரின் கரங்களில் உணர்வற்ற நிலையில் சரிந்தாள்.

“கயல்விழி!....”

பெரியவரின் அந்தக் கதறல், இடியைப்போல் பெரும் சத்தத்துடன் எதிரொலித்த போது, அது பக்கத்து மாளிகையில் தனது அறையில் இருந்த மகாராணியாரின் காதில் வந்து மோதியதும், பதறிப்போய் அந்த அறைக்கு ஓடிவந்து பார்த்தார்.

மயங்கிக் கிடந்த கயல்விழியைத் தன் மடிமீது போட்டுக் கொண்டு அவளுக்கு மயக்கம் தெளிவித்தார்.

அவளது மயக்கத்துக்கான காரணம் என்னவென்று அறியாத மகாராணிக்கு கடலரசி கதை ஏதும் தெரியவேண்டாம் என நினைத்தே தாத்தா அவ்விதம் கூறியதைப் புரிந்துகொண்ட கயல்விழி அந்தச் சூழலைச் சமாளிக்க வழி தேடினாள்.

பெரியவரின் வார்த்தையைக் கேட்ட மகாராணியாரும் முகம் வாடி வினவினார்.

“என்ன கயல்விழி! ஏன் உணவருந்தாமல் இருந்தாய்?”





“மறந்துவிட்டேன் அம்மா!” எனக் கூறிச் சமாளிக்கப் பார்த்தாள்.

“நல்ல பெண்ணம்மா நீ! இப்படி இருந்தால் உடம்பு என்னவாகும்? ஒரு பருவப்பெண் உடலைக் கெடுக்கும் எந்த வேலையையும் செய்யக் கூடாது!” என்ற மகாராணியார் அருகில் விசிறிக் கொண்டிருக்கும் முத்துநகையைக் கண்டு சற்றே ஆதங்கத்துடன் வினவினார்.

“நீ இதையெல்லாம் கவனிப்பதில்லையா முத்துநகை?”

“மன்னியுங்கள் மகாராணி!” எனப் பணிவுடன் வணங்கியவளாய், அவள் கயல்விழியை முறைத்துப் பார்த்தாள்.

மகாராணியார் கேள்வி கேட்பதுபோல் வைத்துவிட்டாயே என்பதே அந்தப் பார்வையின் பொருளாக இருந்தது.



வேண்டுமென்ற முடிவுடன் ஓவியம் குறித்து தீவிர சிந்தனையில் இருந்ததால், உணவருந்த மறந்து போனேன்! அதனால் வந்த குழப்பம்தான் இது! இனி இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் மகாராணி!”

உறுதியான அவளது அந்தப் பதிலுக்குப் பின் வேறேதும் அங்கே யாரும் பேச முடியவில்லை!

அதன் பின் பொதுவாகப் பேச்சு அமைந்தது. அடுத்த ஓவியம் தீட்டுவதற்கு தானும் ஒரு முடிவு எடுத்திருப்பதையும், அதே ஓவியத்தை வேறு விதமாக கயல்விழியும் முத்துநகையும் தீட்டுவதற்கு, தானே உதவி செய்வதாயும் மகாராணியார் கூற, அந்த உரையாடல் ஓவியம் பற்றி நீளத் தொடங்கியது.

இரவு உணவும் அந்த அறைக்கே வந்து சேர, மகாராணியார் உட்பட அனைவரும் உணவருந்தத் தொடங்கினர்.

நள்ளிரவு தாண்டிய நேரம்!...

நிலவின் ஒளியில் எழில்மிகு தோற்றத்தில் மிளிர்ந்தது அந்தப்புர மாளிகை.

அந்த நள்ளிரவு வேளையில் அந்தப்புரத்தின் மதிலைத் தொட்டபடி இருந்த செண்பக மரத்தின் கிளையொன்று குலுங்கியது.

குலுங்கிய கிளையில் இருந்து கயிறு கொண்டு ஓசையின்றி கவனமாக இறங்கியது ஓர் உருவம்.

அவ்வுருவத்தின் கால்கள் தரைதொட்ட வேளை...

மேலும் இந்த மயக்கத்தின் காரணம் யாதென யாரும் அதிகம் குழப்பிக் கொள்ள வேண்டாமென முடிவெடுத்த கயல்விழி திடமாகக் கூறினாள்.




“சித்திரக் கூடத்தில் தங்களது ஓவியங்கள் போல நானும் ஒரு ஓவியம் தீட்ட

சொல்லி வைத்தாற்போல் எழுந்தது ஒரு வீணையின் மெல்லிய நாதம்.

கனக்கசிதமாய் அந்தப்புரத்து தரையில், தான் கால் வைத்த வேளை அந்த ஓசை எழுந்ததால், சடாரென ஓடி அருகில் இருந்த ஒரு மலர்க்கொடியில் சென்று மறைந்த அவ்வுருவம் சஊருமுர்ரும் பார்த்தது. பிறகு சன்னமான குரலில் கேட்டது.

“ஏய், இதென்ன சோதனை? யார் அந்தச் சத்தம் எழுப்பியது?” தனது வருகையை உணர்த்தும் விதமான சங்கேத ஒலியாக இருக்குமோ என்ற எண்ணத்தில் அவ்வுருவம் மரக்கிளையை அண்ணாந்தபடி கேள்வி எழுப்பியது.



அவ்வுருவத்தின் கேள்விக்கு மரக்கிளையில் இருந்து எவ்விதப் பதிலுமில்லை!

“உன் கண்களுக்கு யாரவது தட்டுப்படுகிறார்களா எனக் கவனி!” என்றது மீண்டும் அவ்வுருவம்.

சில நொடிகளுக்குப் பின் மரக்கிளையில் இருந்து பதில் வந்தது.

“இது அந்தப்புரத்தின் நீராழி மண்டபத்தில் இருந்து வருகிற வீணையின் நாதம்!”

மறைந்திருந்த உருவம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

இந்த சமயத்தில் யார் வீணை வாசிக்கிறார்கள்? ஒலிக்கின்ற அவ்வீணையின் நாதம், சோகத்தை இழை இழையாகக் காற்றில் தவழ விட்டுக் கொண்டிருந்தது.

அதைக் கேட்பவர் எவருக்குள்ளும் இனம் புரியாத ஒரு சோகம் கவ்வும் என்பதை உணர்ந்த அவ்வுருவத்துக்குள்ளும் ஏதோ ஒரு சோகம் பரவத் தொடங்கியது.

அப்போது செண்பக மரக்கிளையில் இருந்து கேள்வி எழுந்தது.

“வந்த வேலையை விட்டுவிட்டு இசையை ரசித்துக் கொண்டிருக்கிறாயா?”

எந்த வேலையாக இருந்தாலும், ஒரு சிறந்த இசை ஒலிக்கும்போது மனது அதை ரசிக்காமல் இருக்க முடியாது! ரசிக மனம் அதைத்தான் செய்யும்!

ஆனால் மலர்க்கொடியில் மறைந்திருக்கும்




உருவமோ, அந்த இசையை ரசிக்கும் மனநிலையில் இல்லை! அதனை தனக்கு இடையூறான ஓசையாகவே நினைத்து அந்த ஓசை வந்த திசை நோக்கி நடக்கத் தலைப்பட்டது.

தன் முகம் மறைக்கும்படி இருந்த தலைப்பாகையின் துகிலை மீண்டும் நன்றாக இழுத்துச் சொருகி முகத்தை மறைத்தபடி நடக்கத் தொடங்கியது.

அப்போது மரக்கிளையில் இருந்து மீண்டும் மெல்லிய குரல் ஒலித்தது.

“எச்சரிக்கையாக இரு! என் பார்வையை விட்டு மறைந்து விடாதே!”

“கவலைப்படாதே! நான் கவனித்துக்

கொள்கிறேன்!” என்ற முகமூடி உருவம், அடிமேல் அடிவைத்து தன்னை யாரும் கவனிக்கிறார்களா என நோட்டமிட்டவாறே நீராழி மண்டபத்தை நோக்கி நடக்கத் தொடங்கியது.

அதேநேரம் செண்பக மரத்தின் மீதிருந்த உருவமும் முகத்தை மறைத்தே இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தபடி யாரேனும் காவல் வீர்கள் தென்படுகிறார்களா எனக் கண்களைத் தீவிரப்படுத்தியது.

வீணையின் நாதம் உற்பத்தி ஆகுமிடம் எது என்பதைக் கண்டுபிடிப்பது அவ்வுருவத்துக்கு அவ்வளவு சிரமமாக இல்லை!

அந்தப்புரத்தின் நந்தவனத்தில் செடிகொடிகளிடையே மறைந்து மறைந்து நடந்த அவ்வுருவம் நீராழி மண்டபத்தை அடைந்ததும், ஒரு செவ்வரளிச் செடி மறைவில் இருந்தபடி நோட்டமிட்டது.

அதன் கண்களுக்கு விரிந்த காட்சியால் மலைத்துப் போனது.

வட்ட வடிவில் இருக்கும் அந்த நீராழி மண்டபத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த படிகளில் ஒன்றில் கையில் வீணை ஏந்திய கலைமகளின் வடிவம் போல் கயவிழி அமர்ந்திருந்தாள்.

ஒருவேளை தன் கண்களுக்குத் தான் அவள் கயல்விழியாகத் தோன்றுகிறாளோ என நினைத்த அவ்வுருவம், தனது கண்களை நன்றாகக் இரு கைகளாலும் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தது.

ஆம்! இது கயல்விழியேதான்!

பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை என்பார்களே! அதுதான் இது! தான் வந்த வேலை இவ்வளவு எளிதில் முடியப் போகிறதா என எண்ணி உள்ளூரக் களிப்பெய்தியதன் விளைவு அவ்வுருவத்தின் கண்களில் மின்னியது.

அதன் விளைவால் முகத்தில் புன்னகை மலர்ந்ததையும் அந்தக் கண்களே காட்டிக் கொடுத்தது. சற்றுநேரத்துக்கு முன்பு அவ்வுருவத்துக்கு இடையூறு இசையாக இருந்தது இப்போது தேனிசையாக ஒலித்தது.


தனது மறைவிடத்திலிருந்தே அவள் மீட்டும் வீணை வாசிப்பை மட்டுமல்ல, வாசிப்பவளையும் பார்வையால் வாரிப் பருகியவாறே அவ்வுருவம் கவனிக்கத் தொடங்கியது.

கயல்விழியின் குழல்கள் காற்றில் அலையும் கொடிகளென அசைந்தன.


தன்னை மறந்த நிலையில் கண்கள் மூடியவளாய், வீணையின் தந்தியில் விளையாடிய அவளது மென்விரல்கள் மீட்டிய ராகம், கேட்கும் உள்ளத்தைக் கலங்கடிப்பதாய் இருந்தது.

வளவத்திரையன் தனக்கு துரோகம் இழைப்பவன் என்பதை அவளால் ஒப்புக்கும் கூட நினைக்க இயலவில்லை!

தாத்தா தன்னிடம் கடலரசியில் இருந்து வந்த செய்தியினை விவரிக்கும்போதே, அவருக்கும்கூட





சுற்றிலும் கண்களை ஓடவிட்டபின், அங்கே கயல்விழியையும் தன்னையும் தவிர வேறு யாருமே இல்லை என்பதைப் புரிந்து கொண்டு அந்த அரளிச் செடியின் மறைவில் இருந்து வெளிப்பட்டு கயல்விழியின் பின்புறமாக மெள்ள நடக்கத் தொடங்கியது.

நடக்கையில் தனது இடைக் கச்சையிலிருந்து ஒரு மலரை எடுத்து கவனமாக நாசிக்குச் சற்றே தூரத்தில் வைத்து கவனமாக முகர்ந்தது.

ஆம்! அதன் மணம் தூக்கலாகத்தான் இருக்கிறது என்பதனை உணர்ந்தபின் அம்மலரை இடையில் சொருகியபடி ஓசையின்றி கயல்விழியின் பின்புறமாக நெருங்கிச் சென்றது.

இன்னும் நொடிகளில்... இதோ வீணை மீட்டும் இந்தக் கயல்விழியே, தன் கைககளில் வீணையாகக் கிடப்பாள். ஆம்! காத்திருந்த காலம் கனிந்து விட்டது!




துக்கம் தொண்டையை அடைப்பதாகத்தான் இருந்தது. எப்படியோ மென்று விழுங்கி அவர் அந்தச் செய்தியைக் கூறிய போதுதான் கயல்விழி மயங்கி விழுந்தாள்.

கடலரசி கப்பலில் இருக்கும் வளவத்திரையனுக்கும் தாலியாவுக்கும் இடையே காதல் மலர்ந்திருப்பதாய் காற்று வாக்கில் வந்தது அந்தச் செய்தி!

அதனைக் கூறியவர் பரணர் என்பதால் அதில் பொய்யிருக்க வாய்ப்பில்லை என்றாலும் கூட, பரணுக்கு வந்த அந்தச் செய்தியே பொய்யாக இருக்கக் கூடாதா என்ற அலைக்கழிப்புதான் அவளை அதிகம் வாட்டி வதைத்தது.

அந்த வதைபடலம்தான் அங்கே இசைப்படலமாக நீராழி மண்டபத்தை நிறைத்திருந்தது.

கயல்விழி இழையோட விட்ட சோகக் கீதத்தில் சற்றே பாதிப்படைந்த அவ்வுருவம், அவளையே பார்த்துக் கொண்டு சிலையாக நின்றது.

அப்போது எங்கோ ஒரு நரியின் ஊளை ஒன்று கிளம்ப, அது அந்த செண்பக மரத்தில் இருந்துதான் வருகிறது என்பதை உணர்ந்த உருவம், விழிப்படைந்தது. மீண்டும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு வந்த வேலையைத் தொடங்க ஆயத்தமானது.

அவ்வுருவத்தின் மனதுக்குள் ஓடிய எண்ணம் அதன் விழிகளில் பெரும் ஆவலைத் தூண்டவே, அதன் கண்கள் மின்ன, இடையில் சொருகியிருந்த மலரைத் தன் இடக்கையால் எடுத்து ஏந்தியபடியும், கயல்விழியின் அதரங்களை மூட ஆயத்தமாக தனது வலக்கரத்தை நீட்டியபடியும் அவளை நெருங்கியது.

அப்போது செண்பக மரத்தில் இருந்து சத்தமாய் ஒரு குரல் ஒலித்தது.

“குமரா!... கவனம்!...”

அதைத் தொடர்ந்து அவ்வுருவம் மரத்தை நோக்கி சடாரெனத் திரும்பிய அடுத்த நொடியே...

அவ்வுருவத்தின் தலையில் இடியென விழுந்தது ஒரு அடி!..

அடுத்த நொடி அவ்வுருவம் படியில் மயங்கிச் சரிந்தது.

(கனவு தொடரும்...)

# வந்தது யார் ?

சந்தனத்து மேனியுடன்
உயிர்ப்பதுமை ஒன்றை
சந்நிதியின் சரவிளக்கு
ஒளியினிலே கண்டேன்!

மந்திரமா? இது என்ன
மாய விளையாட்டா?
அந்தரத்தில் மிதப்பதுபோல்
ஆக்கிவிட்டாள் என்னை!

சிந்திவிடும் புன்னகையில்
நிலையிழந்து போகின்றேன்
சொந்தமிவள் எனக்கென்று
சுகமேதான் காண்கின்றேன்!

விந்தைநடை; முத்திரைகள்
அபிநயமும் காண்கின்றேன்
இந்திரனின் சபையிதுவோ
என்றே நினைக்கின்றேன்!

சந்தங்கள் இசைமீட்டும்
சங்கீதக் கொலுசும்தான்
தந்தியனை மீட்டியதே
எந்தன் மனமெங்கும்

நந்தவனம் நடைபழகி
வந்ததுபோல் வந்தாள்
நங்கையினி எப்போது
வருவாளோ நானறியேன்!

வந்தவுடன் சென்றயிவள்
தேவதையோ பெண்ணோ?
எவ்விதமாய் மங்கையவள்
எழிற்கோலம் சொல்வேனோ?

இராதை பிரபாகர்





VARSHA™
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Happy
new year
2024




# கையெழுத்து

## நாறும்பூநாதன்

ம்ஹூம்..சரியாக வரவில்லை.

இந்த முறை கடைசியாக வரும் ‘ன்’ வரவில்லை.

சங்கரநாராயணன் சாருக்கு கை விரல்கள் லேசாக நடுங்கின.

“இன்னொருக்க போடுங்க சார்.. கடைசில ‘ன்’ வரணும்“ என்றான் முருகேசு.

தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் இன்னும் சற்று வசதியாய் உட்காரணும் போலிருந்தது அவருக்கு. புரிந்து கொண்ட முருகேசு, “நீங்க நல்லா ஒக்காந்துக்கோங்க..அவசரமில்லாம நிதானமாய் போட்டா போதும்..” என்றவன், தனது இருக்கை அருகே இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து சாரிடம் நீட்டினான்.

“கொஞ்சம் தண்ணீ குடிச்சுக்கிறீங்களா?”

அவருக்கு அப்போது தாகம் இல்லை என்றாலும், ஒரு சிறு இடைவெளி தேவையாக இருந்தது.




மனதுக்குள் எண்ணங்கள் ஓடின.

“கடைசியாய் எப்போது கையெழுத்து போட்டோம்?”

தண்ணீர் பாட்டிலை எடுத்து அண்ணாந்து குடித்தார். கொஞ்சம் சட்டையில் சிந்தியது. தோளில் போட்டிருந்த அங்கவஸ்திரத்தால் துடைத்துக் கொண்டார்.

இப்போ என்ன வேலைக்கா போகிறார் ..அடிக்கடி கையெழுத்துப் போட.

ஆசிரியர் பணியில் இருந்து ரிட்டயர்டு ஆகி பதினைந்து வருடங்களுக்கும் மேலாகி விட்டது. இந்த மாதிரி வங்கிக்கு வந்து பென்ஷன் பணத்தை எடுக்க… சமயங்களில் கார்பொரேஷன் ஆபீஸ் போனால் மனு எழுதிக் கொடுக்க .. ஹிந்து பேப்பர் படித்து விட்டு ‘லெட்டர்ஸ் டு தி எடிட்டர்’க்கு எழுதிப் போட.. என்று தான் அவரது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது..கொஞ்ச காலம் அதுவும் குறைந்துபோய் விட்டது. குறைந்து என்ன… நின்றே போய் விட்டது என்றுதான் சொல்லணும்.

ஒருமுறை சாலையில் நடந்து சென்றவரை, இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தவன் தட்டி விட்டுச் சென்றான்.



“பெருசு.. நீயெல்லாம் இந்த வயசுல வீட்டில கெடக்க வேண்டியதானே..” என்று திட்டி விட்டு வேறு சென்றான். வலது கால் முட்டியில் நல்ல சிராய்ப்பு. பால் ஊற்றும் பரமசிவம் தான் அவரைத் தூக்கி விட்டான்.

“நீ ஒழுங்கா ஒட்டிட்டுப் போலே மூதி... பேசுறான் நல்லாப் பேச்சு..” என்று அவனை ஏசி விட்டு, இவரை கைத்தாங்கலாய் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். சிவந்த முட்டியில் இருந்து ரத்தம் கசிந்து வேட்டியை நனைத்தது.

மகன் சபாபதி பதறிப் போனான்.

“ஏன்பா... இன்னைக்கு வெளியே போனீங்க... ஊருல ஆயிரம் அநியாயம் நடக்கும். நீங்க மனு எழுதிப் போட்டா எல்லாம் சரியாயிருமா..? பேசாம வீட்ல இருங்க...” என்று சொன்னபோது, இரு சக்கர வாகனத்தில் திட்டி விட்டுப் போனவனுக்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்று அவருக்குத் தோணியது. அதற்குப் பிறகு வீட்டை விட்டு வெளியே போவதே இல்லை.

ஹிந்து பேப்பர் படிப்பதோடு சரி... லெட்டர் எழுதிப் போடுவது இல்லை. ஒருமுறை சபாபதியிடம் கார்டு வாங்கி விட்டு வரச் சொன்ன போது “கார்டு ஸ்டாக் இல்லையாம்பா..” என்றான்.

என்ன சொல்றான்? போஸ்ட் ஆபீஸ்ல போஸ்ட் கார்டு ஸ்டாக் இல்லாமல் போகுமா? தனது எழுபத்தைந்து வயது சர்வீஸில் இப்படி கேள்விப்பட்டதே இல்லையே... யாருமே போஸ்ட் கார்டு வாங்குவதில்லையா? இதை யாரிடம் கம்பளைண்ட் பண்ண? கை துறுதுறுத்தது.





“யாருப்பா இப்பல்லாம் லெட்டர் போடுறா? ஈமெயில் வந்தாச்சு... மொபைல்ல அனுப்பீருதாங்க... போஸ்ட் கார்டு, இன்லேண்ட் லெட்டர்லாம், தந்தி மாதிரி சீக்கிரமே அழிஞ்சு போயிடும் பா..” என்று அவன் சொன்னபோது, அவர் உடல் அதிர்ந்து போனது.

கையால் எழுதுவது அவ்வளவு கேவலமா? போஸ்ட் கார்டு அழிஞ்சே போகுமா..? அவர் நண்பர்கள் எழுதிய கடிதங்கள் தான் எத்தனை எத்தனை... அவரது டிரங்க் பெட்டியில் பாதி இடத்தை போஸ்ட் கார்டுகளும், இன்லேண்ட் லெட்டர்களும் தானே அடைத்துக் கொண்டிருக்கின்றன.

“சார்... இப்போ வேற ஸ்லிப்பில் கையெழுத்துப் போடுறீங்களா?”

முருகேசு கேட்டபோது தான் நனவுலகிற்கு வந்தார் சங்கரநாராயணன் சார்.



மனம் கொஞ்சம் லேசானதுபோல இருந்தது. அவரது கருப்பு பவுண்டைன் பேனாவின் மூடியைத் திறந்து, பணம் எடுக்கும் ஸ்லிப்பில் கையெழுத்தைப் போடத் துவங்கினார்.

எல்லாம் சரியாகத்தான் வந்தது. ஆனால், நாராயணன் என்ற இரண்டாம் பகுதியில் 'ன்' போட்டு ஒரு நீண்ட இழுப்பின் முடிவில் 'ன்' உடன் முடியும். அந்த இழுப்பு மிஸ்ஸிங்..

சார் முருகேசுவின் முகத்தையே பார்த்தார் இப்போது, "சரியா வந்துட்டுதுல்ல இப்போ" என்பது போல.

முருகேசு, இப்போது வங்கி மேனேஜரின் முகத்தைப் பார்த்தான். அவர் திருப்தி அடையவில்லை என்பது தெரிந்தது.

"சார்.. எனக்கு ஏழாம் வகுப்பு கிளாஸ் டீச்சர்.. நான் வேணும்னா தெரிந்தவர் என்பதற்கு ஒரு கையெழுத்துப் போட்டு தரேன் சார்.." என்றான் முருகேசு.






மேனேஜர் சிரித்தார். "நீங்க போன வாட்டியே சொன்னீங்க முருகேசு... எத்தனை தடவை இப்படி வாங்குவது... நான் சொன்னமாதிரி செய்ங்க... அதுதான் நல்லது.." என்று அவர் இவனைப் பார்த்து சொன்னபோது, சங்கரநாராயணன் சார் "எனி பிராப்ளம் சார்?" என்றார்.

முருகேசு மீண்டும் ஆங்கில வாத்தியார் சங்கரநாராயணனை உற்றுப் பார்த்தான்.

* * * * * * * * * * *

சங்கரநாராயணன் சார் இங்கிலீஷ் க்ராமர் எடுத்தால் தெளிவாய் புரியும்படி எடுப்பார். ஆக்ட்டிவ் வாய்ஸ், பேசிவ் வாய்ஸ் நடத்தும்போது கரும்பலகை முழுவதும் அவரது அழகான கையெழுத்தாகத்தான் இருக்கும். கூட்டெழுத்தில் ஆங்கில எழுத்துக்கள் தெளிவாய் தெரியும்.

கோபம் வந்து விட்டது என்றால், கையில் உள்ள சாக்பீஸ் துண்டை சட்டென ஒடித்து மேலே எறிந்து விடுவார். பிரம்பு அவருக்குத் தேவைப்படாது.

"படிக்காட்டி ஒரு நாயும் உன்னை மதிக்காது. எழுதப் படிக்க தெரியாத பயலுக மார்க்கெட்டில் மூட்டை தூக்கித்தான் பொழைக்கணும் பார்த்துக்க" என்று திட்டுவார்.

"ஒனக்குப் புரியணும்னு தான தமிழ்ல சொல்லி விளக்குறேன்.. அப்பவும் வகுப்பை கவனிக்காம, எங்கியாச்சும் பராக்குப் பார்த்துட்டு இருந்தேன்னா ஈரமண்ணால விளங்கும்"


சார் மாணங்கண்ணியாகத் திட்டுவார். அவர் வகுப்பு முடிந்து அடுத்த வகுப்பு ஜான்சன் சார் வந்தவுடன், கரும்பலகையை அழிக்கப் போகுமுன் கேட்பார்.

"போன பீரியட் சங்கரநாராயணன் சாரா?"

சாரின் அழகான கையெழுத்து பள்ளி முழுவதும் பிரபலம். இங்கிலீஷ் காம்போசிஷன் நோட்டு திருத்தும்போது சொல்வார்.

"டேய் பசங்களா.. பரீட்சை பேப்பர் திருத்தும்போது, அழகான கையெழுத்துல இருக்குற பேப்பரை பார்த்தாலே, மனசு நல்லா இருக்கும்டா.. தப்பாய் நீ எழுதி இருந்தால் கூட, சமயங்களில் அது தெரியாது.. கண்களை மயக்கும். மார்க்குகளை

அள்ளிப் போடுவோம்.. கோழி கிண்டுன மாதிரி எழுதுனா, சரியாய் எழுதியிருந்தாலும் மார்க் போட மனசு வராது.. ரெட்டைக்கோடு நோட்டை டேய அதுக்குதாண்டா கண்டுபிடிச்சுருக்கான்.. ஒழுங்கா எழுதுங்க..” என்று போதனை செய்வார். எவன் கேட்டுருக்கான்!?



முருகேசு கையெழுத்து மேலே சொன்ன கோழி கிண்டுன கேஸ் தான். மணிக்கட்டு மொழியில் பலமுறை ஸ்கேலால் அடி வங்கியிருக்கிறான்.

ஒரு மழைக்காலத்தில், கீழே குனிந்தபடி வங்கியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த முருகேசு, “சார் .எக்ஸ்கியூஸ் மீ..” என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். ஒரு நிமிடம் வெலவெலத்துப் போய் விட்டான். எதிரே ஆங்கில வாத்தியார் சங்கரநாராயணன் சார் நின்று கொண்டிருந்தார். தலை நன்றாக நரைத்திருந்தாலும், சார் முகத்தை மறக்க முடியுமா?

“சார்.. நல்லா இருக்கீங்களா..?” என்று எழுந்தான்.

மழையில் வந்திருப்பார் போல. குடையை மடக்கி சுவர் ஓரத்தில் சாத்தி வைத்தார். தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

அவருக்கு இவனை எல்லாம் ஞாபகமாய் இருக்கப் போகிறது..?

“கொஞ்சம் நேரம் ஆயிட்டது.. பென்ஷன் பணம் இப்போ எடுக்கலாமா.. டைம் முடிஞ்சு போயிட்டுது.. லேட்டா வந்ததுக்கு மன்னிக்கணும் சார்..” என்று தனது மூக்கு கண்ணாடியை சரி செய்து கொண்டே பேசிக் கொண்டிருந்தார்.

“சார்..சார்.. என்ன சார்.. நீங்க.. மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு.. ஸ்லிப்பில எழுதிக் கொடுங்க.. பணம் வாங்கிக்கலாம்..” என்றபடி பணம் எடுக்கும் ஸ்லிப்பை நீட்டினான் முருகேசு.

“தேங்க் யூ சார்..” என்று புன்னகைத்தபடி எழுதத் தொடங்கினார் சார்.

சாரின் அந்த கையெழுத்தை ரசிக்கத் தொடங்கினான்.

டூ த்வசன்ட் ஒன்லி என்று கூட்டெழுத்தில் எழுதி விட்டு, சங்கர.. என்று துவங்கி, கூட்டுப்புழு போல சுருண்டு சுருண்டு இழுத்துச் சென்று பிறகு என்னில் முடியும் கையெழுத்தை நீண்ட நாட்கள் கழித்துப் பார்த்தான்.

அவனது இங்கிலீஷ் காம்போசிஷன் நோட்டில் பத்திற்கு நாலரைக்கு மேல் அவனுக்கு போட்டதில்லை. மார்க் போட்டு இறுதியில் இந்த கையெழுத்து இருக்கும்.

“நான் உங்க மாணவன் சார்..” என்றவுடன், சார் கண்கள் விரிந்தன.

“அப்படியா.. பெயர் என்னப்பா.. எந்த வருஷம் படிச்சே..” என்று உற்சாகமாய் விசாரித்தார்.

“1975 பேட்ச்ல படிச்சேன் சார்.. எனக்கு கிளாஸ் டீச்சர் நீங்க.. ஏழுல இருந்து பத்து வரைக்கும் நம்ம ஸ்கூல்ல தான் படிச்சேன்..” என்றான் முருகேசு.

உள்ளே வரச் சொல்லி நாற்காலி போட்டு உட்கார வைத்தான். அவன் நின்று கொண்டே பேசினான்.




“நீ உட்காருப்பா.. நல்லாப் படிக்குற ஸ்டூடென்ட் தானே.. எப்படி மறந்தேன்னு தெரியலையே..” என்றார் சார்.

“அப்படி சொல்ல முடியாது சார்.. சுமாரான ஸ்டூடென்ட் தான்.. பத்தாவது ரேங்க் எடுப்பேன்..” என்று நெளிந்தான் இவன். இன்னமும் அவரது வகுப்பில் இருப்பது போன்ற உணர்வு.

பக்கத்தில் இருந்த அதிகாரிகளிடம் சங்கரநாராயணன் சாரை அறிமுகப்படுத்தினான். காபி வாங்கிக் கொடுத்தான். அன்று முதல், வங்கிக்கு வந்தால், நேராக இவன் இருக்கும் இருக்கை அருகே வந்து நின்று விடுவார் சார்.


ஒரு நிமிடம் காக்க வைக்க மாட்டான் இவன். இன்னைக்கு ஓரளவு இங்லிஷ் ட்ராப்ட் போடுகிறான் என்றால் அது, சார் போட்ட பிச்சை அல்லவா..

* * * * * * * *

“சார்..உங்களுக்கு கையெழுத்து சரியா வர மாட்டேங்குது.. சில ஸ்ட்ரோக்குகள் மாறுதுன்னு மேனேஜர் சொல்றார்.. அதனால...” என்று முருகேசு சொல்லத் துவங்கும்போதே,

“மூணாவதாகக் கொடுத்த ஸ்லிப்பில் சரியா போட்டேனப்பா..” சார் பரிதவித்த குரலில் சொன்னார்.

“சரியாகத்தான் சார் இருக்கு... ஆனால், கொஞ்சம் வித்தியாசப்படுது.. நான் இருக்குறதுனால பிரச்னை இல்லை.. நான் ஒருவேளை லீவுல இருந்தேன்னு வையுங்க.. ஒங்களுக்கு சிரமம் தானே..” என்று முருகேசு சொன்னான்.



“இப்ப அதுக்கு நான் என்ன செய்யணும்பா..” அவர் குரல் படபடத்தது.

அவன் அவரிடம் ஒரு பாரத்தை நீட்டி, “இந்த கட்டம் இருக்குற இடத்தில உங்களோட இடதுகை பெருவிரல் ரேகையை மையில் தொட்டு வையுங்க..” என்றான்.

“கைரேகையா.. நானா.. என்னப்பா சொல்ற.. நான் அந்தக் காலத்து பி.ஏ.பி.டீ.ப்பா... அசிஸ்டன்ட் எட்மாஸ்டரா ரிட்டயர்டு ஆனவன்..” சங்கரநாராயணன் சாரின் குரல் தழுதழுத்தது.




“எனக்குத் தெரியாதா சார் உங்களைப் பற்றி... எங்களுக்கு இங்கிலீஷ் கத்துக் கொடுத்ததே நீங்க தானே.. கையெழுத்து சரியா வரலேன்னா, பேங்குக்குன்னு சில நடைமுறைகள் இருக்கு சார்.. மேனேஜர் போன தடவையே இதைச் சொன்னார்... நான் தான் கேக்கலை... நீங்க ரொம்ப வருத்தப்படுவீங்கன்னு விட்டுட்டேன். இப்போ மறுபடியும் சொல்லும்போது உங்க கிட்டே சொல்லாம இருக்க முடியாது..” என்றான் முருகேசு.

தனது கழுத்தில் கிடந்த அங்கவஸ்திரத்தை சரிசெய்து கொண்ட சார், “நான் வேணும்னா ஒன்னு செய்யுறேன்.. வீட்ல போயி என்னோட சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி, நிதானமா பணம் எடுக்குற ஸ்லிப்பில் கையெழுத்தை போட்டுப் பார்க்கிறேன்.. கண்டிப்பா வரும். நாலைந்து ஸ்லிப்பில் வேண்டுமானாலும் பழசைப் பார்த்து தப்பில்லாம எழுதிப் பார்க்கிறேன்.. எனக்கு இப்போ அவசரமாய் பணம் தேவைப்படல.. நாளைக்கு வேணும்னா வரட்டுமா”

சார் குரல் கரகரத்தது. குரல் கெஞ்சுவது போல இருந்தது. சற்றுத் தொலைவில் அமர்ந்திருந்த அவரது மகன் அருகில் வந்தான்.

“என்னப்பா.. என்ன பிரச்னை” என்று கேட்டபோது, முருகேசு கையெழுத்து விவகாரத்தை மெதுவாய் சொன்னான்.

“இதுக்கெல்லாம் ரொம்ப யோசிக்காதீங்கப்பா.. வயசாயிட்டுது.. கை நடுக்கம் இருக்கு.. எல்லாருக்கும் வர்றது தானே.. உங்க நல்லதுக்குத்தானே சொல்றாங்க.. சார் சொல்ற மாதிரி ரேகையே வச்சிருங்க..” என்றான் அவரது மகன்.

“ டேய்.. நான் படிச்சவன்டா.. என்னைப்போய்...”

சங்கரநாராயணன் சார் சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்டார். யாரேனும் தான் கைரேகை வைப்பதைப் பார்த்து படிக்காத அறிவிலின்னு ஏளனமாய்ப் பார்ப்பது போல உணர்ந்தாரோ என்னவோ..

“உங்களைப் போல பலர் ரேகை வச்சிருக்காங்க சார்.. எல்லோரும் ரொம்ப படிச்சவங்க தான்” என்றபடி முருகேசு, சாரின் இடதுகைப் பெருவிரலை எடுத்து இங்க் பேடில் உருட்டினான். மையுடன் இருந்த விரலை எடுத்து பணம் எடுக்கும் ஸ்லிப்பில் அழுத்தமாய்ப் பதிவு செய்யும் போது, ஸ்லிப்பில் விழுந்தது அவரது கண்ணீர்த்துளி



படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# யார்? யார்?

கங்கையும் கழனியும்
கதிரவன் ஒளி பட்டு
கணத்தில் ஆவியாகி
அந்தரத்தில் ஆனந்தமாய்
பவனிவரும்.

அடித்த காற்றில் திசைமாறி
இடித்த இடியில் இடம் மாறி
கங்கையிலும் கழனியிலும்
மறுபடியும்
விழுந்த மழைத் துளியில்
கங்கை எது?
கழனி எது?

மகானும் மாபாவியும்
காலனின் கயிறு தொட்டு
நொடியில் ஆவி அடங்கி
அண்டம் தொடாத
ஆத்மாக்களாய் உலவும்.

பாவக்கணக்கில் இடம்மாறி
புண்ணியக் கணக்கில் இனம்மாறி
மகானாய் மாபாவியாய் என்றிருக்க
மறுபடியும்
ஜனித்த சிசுக்களில்
மகான் யார்?
மாபாவி யார்?

**கோமதி நடராஜன்**




பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு





## மீண்டும் வேகம் எடுக்கும் மடோனா!

## 'ஏழு கடல் ஏழு மலை' போல் உயரட்டும்!

## மளமளவென உயரம் தொடும் மடோனா!

இயக்குநர் ராம் இயக்கத்தில் நடிகர்கள் நிவின் பாலி, சூரி, நடிகை அஞ்சலி ஆகியோர் நடிப்பில் உருவான திரைப்படம் 'ஏழு கடல் ஏழு மலை'. காதலை மையமாகக் கொண்டு உருவான இப்படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்குபெற்று வருகிற நிலையில், இப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ ஜன.2 ஆம் தேதி வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.




சக்தி சிதம்பரம் இயக்கும் புதிய படத்தில் பிரபுதேவா, மடோனா செபாஸ்டியன் நடிக்கிறார்கள். படத்துக்கு 'ஜாலியோ ஜிம்கானா' என்ற தலைப்பை வெங்கட் பிரபு வெளியிட்டுள்ளார். விநாயக மூர்த்தி இசையமைக்கும் படத்தில் யாஷிகா ஆனந்த், கிங்ஸ்லி, யோகிபாபு, அபிராமி உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். 'லியோ' படத்தில் துணைக் கதாப்பாத்திரமாக வந்த மடோனா, இப்படத்தின் மூலம் மீண்டும் கதாநாயகியாக உயர்கிறார்.

## 'ஏழு கடல் ஏழு மலை' வெள்ளோட்டம்!

## பொங்கலுக்கு வரும் 'அயலான்!'

## கீர்த்தி சுரேஷ் கலக்கும் 'ரகு தாத்தா!'




## ஆவலைத் தருவானா 'அயலான்?'

நடிகர் சிவகார்த்திகேயன், ரகுல் ப்ரீத்சிங் நடிப்பில் ரவிக்குமார் இயக்கத்தில் ஏ.ஆர்ரஹ்மான் இசையில் உருவாகியுள்ள 'அயலான்' படத்தை 24 ஏ.எம். ஸ்டுடியோஸ் மற்றும் கே.ஜே.ஆர் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளது. படம் இவ்வாண்டு பொங்கலுக்கு வெளியாகுமென படக்குழு சமீபத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்தது. சிவகார்த்திகேயனின் 'மாவீரன்' வெற்றிக்குப் பிறகு இந்தப் படம் வெளியாவதால் ரசிகர்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பு கூடியுள்ளது.

கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'ரகு தாத்தா' படத்தின் முதல் முன்னோட்டம் வெளியாகி ஆர்வத்தைக் கிளப்பியுள்ளது. இப்படத்தில் பாஸ்கர், தேவதர்ஷினி, ரவீந்திர விஜய் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். கயல்விழியாக வரும் நகைச்சுவை விருந்து படைத்திருக்கிறார். அவரது வித்தியசமான நடிப்புக்காகவே 'ரகு தாத்தா' குடும்பங்கள் கொண்டாடும் படமாக் இருக்கும் என்கிறது படக்குழு.

## 'ரகு தாத்தா' நகைச்சுவை ரசமான தாத்தா?



# தல வலம்

## வாமனபுரீஸ்வரர் (திருமாணிக்குழி)

புவனகிரி செயபாலன்

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு
பங்கர்புனல் தங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்துறைவிடங்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிள
வள்ளைபடர் அள்ளல்வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை
சேருதவி மாணிக்குழியே.' —திருஞானசம்பந்தர்

தேவாரப் பாடல் பெற்ற 2074—ஆவது சிவாலயங்களில் 228 —ஆவதும், நடுநாட்டுத் தலங்களில் 17 ஆவதும் ஆகும்.

மூலவர் —வாமனபுரீஸ்வரர், உதவி நாயகர், மாணிக்க வரதர். அம்பாள் —அம்புஜாட்சி, உதவி நாயகி, மாணிக்கவல்லி. தலப் பெயர் —வாமனபுரி, இந்திரலோகம், பீமசங்கர சேத்திரம், தற்போது கேப்பர் மலை. தலவிருட்சம் —கொன்றை. தீர்த்தம் —சுவேத நதி, கெடில நதி. தொன்மம் —ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது.

திருமாணிக்குழி தேவாரப் பாடல்களில் இத்தலம் உதவி மாணிக்குழி என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனால் உதவி என்பது ஊர்ப் பெயராக இருந்தது.







காலப்போக்கில் மாணிக்குழி என்னும் கோயில் பெயரே ஊருக்கும் பெயராகி இருக்கலாம்.

அத்திரி

வடநாட்டு வணிகன் அத்திரி என்பவன் இப்பகுதியில் வந்து கொண்டிருந்தபோது, திருடர்கள் கொள்ளை அடிக்க முற்பட, ஈசன் அவ்வணிகனைத் திருடர்களிடமிருந்து காத்து உதவி புரிந்தார். அதனால் இத்தலம் உதவி என்றும் இறைவன் உதவி நாயகன் என்றும், இறைவி உதவி நாயகி என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

மூர்த்தி, தீர்த்தம், வனம், கிரி, நதி, சங்கமம், ஆரண்யம், பதிகம் ஆகியவற்றால் பிரசித்தி பெற்ற திவ்ய தலம் இது.

கோயில்

ஐந்து நிலை ராஜகோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூன்று பிரகாரங்களைக் கொண்டது. கோபுரவாயில் வழியாக உள்ளே சென்றால், கிழக்கு வெளிப்பிரகாரத்தில் செப்புக் கவசமிட்ட கொடிமரம், அதையடுத்து பலிபீடம், நந்தி உள்ளன.

தெற்கு வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகரும்,வடக்கு வெளிப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் சன்னதியும் உள்ளது. செல்வ விநாயகர், உதவி விநாயகர் 12 திருக்கரங்களுடன் மயில் மீது அமர்ந்து தேவியருடன் உள்ளார். 63 நாயன்மார்கள், சப்தமாதர்கள், பஞ்சமூர்த்திகள், யுகலிங்கங்கள், விஷ்ணுலிங்கம், சமயக் குரவர்கள், கஜலட்சுமி, நவக்கிரகம், பைரவர், சூரியன், சந்திரன், சன்னதிகள் உள்ளன.




ஈசன்

இத்தல ஈசன் சுயம்பு மூர்த்தியாகக் கிழக்கு பார்த்து அருள் பாலிக்கிறார். சிவபெருமான் பூமியில் தோன்றிய முதல் தளம். அதன் பிறகுதான் பிற சிவத்தலங்கள் தோன்றின. மேலும் இக்கோயில் சூரிய பகவானால் உண்டாக்கப்பட்டு அவரே பூஜை செய்ததாகவும், திரிசங்கு மகாராஜா, அரிச்சந்திரன் போன்ற சூரிய வம்சத்தினரால் இக்கோயில் புனரமைக்கப்பட்டது என்றும் தல வரலாறு கூறுகிறது.

புராண வரலாறு

இந்திரனின் தாயார் ஆதிதேவி ஒருமுறை பூஜை செய்தபோது விளக்கில் உள்ள நெய் உறைந்து போக, அதனால் தீபம் அணையும் நிலையில் அலை பாய்ந்தது. அப்போது பசியால் அலைந்து திரிந்த எலி ஒன்று, அந்த நெய்யை சாப்பிட வந்தது. அதன் மூக்கு திரியைத் தூண்டியதால் தீபம் பிரகாசமானது. இது தற்செயலாக நடந்தது என்றாலும், தீபத்தைச் சுடர் விடச் செய்ததற்காக



இறைவன் எலியை அடுத்த பிறவியில் மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறக்கச் செய்தார்.

அரசனாகப் பிறந்து தர்ம வாழ்வை நடத்திய மகாபலி, தன் கொடைத் தன்மையை நினைத்து கர்வம் ஆனான். தேவர்களை இழிவாக நடத்தினான். அவனது ஆணவத்தை அழித்து தன் பாதம் சேர்த்துக் கொள்ள இறைவன் விரும்பினார்.

காஷ்யபருக்கும் அதிதிக்கும் குழந்தை வாமனனாக பிறந்த திருமால், மாவலியிடம் மூன்றடி மண் கேட்டார். திருமாலின் சூழ்ச்சியைத் தெரிந்த சுக்ராச்சாரியார், அவ்விதம் தர வேண்டாம் என்று தடுத்து கூறினார். ஆனால் ‘கடவுள் கேட்கும்போது இல்லை என்று சொல்வது தர்மம் ஆகாது!’ என்று கூறிய மகாபலி, ‘தங்கள் காலடியால் 3 அடி மண்ணை அளந்து எடுத்துக் கொள்ளுங்கள்’ என்றான்.

வாமனனாக இருந்த திருமால் விஸ்வரூபமாகி, விண்ணுலகம் மண்ணுலகம் இரண்டையும் தன் காலடியால் வசப்படுத்திக் கொண்டு, ‘மூன்றாவது அடி வைக்க எங்கே இடம்?’ எனக் கேட்டார். அவரிடம் ‘மூன்றாவது காலடிக்கு என்னுடைய தலையை தருகிறேன்’ என்று கூறிய மகாபலி திருமாலின் திருவடிகளில் கீழே அமர்ந்தான். அவன் பக்தியை மெச்சிய திருமால் பாதாள லோகத்தை யும் சிரஞ்சீவித் தன்மையையும் அருளினார். மகாபலியை வஞ்சித்ததால் ஏற்பட்ட தோஷத்தாலும் தீராப் பழியாலும் திருமால் அல்லற்பட்டார். தன் துயர் தீர்க்க கெடில நதிக்கரையில் லிங்கம் செய்து பூசித்தார்.




திருமாலின் பக்தியைக் கண்டு மகிழ்ந்த ஈசன், அவர் முன் தோன்றி வேண்டிய வரம் யாது எனக் கேட்க, ‘மாவலியை வஞ்சித்ததால் ஏற்பட்ட தோஷத்தை தங்களை பூசித்த மாத்திரத்தில் நீங்கப் பெற்றேன். எனது அனைத்து இன்னல்களும் தீர தங்களின் திருவருளே காரணம்! அந்தத் திருவருளை வியந்து தங்களை பூஜித்தபடியே இருக்க விரும்புகிறேன். இமைப்பொழுதும் நான் இனி பூஜிக்காமல் இருக்கக் கூடாது! எனது பூஜைக்கு எந்தத் தடையும் வரக்கூடாது என அருள்புரிய வேண்டும்!’ என்று வேண்டினார்.

‘நீர் இத்தலத்தில் எப்பொழுதும் பூஜித்து கொண்டிருக்கலாம். பிரம்மச்சாரியாக வாமன அவதாரம் எடுத்து, எம்மை பூஜைத்ததால் இத்தலம் திருமாணிக்குழி (மாணி என்பதற்கு பிரம்மச்சாரி என்று ஒரு பொருள்) எனப் பெயர் பெறும். உனது பூஜையை யாரும் பார்க்கவும் முடியாது. தொந்தரவும் செய்ய முடியாது. எனது வாகனமான நந்தியும் இதில் அடக்கம்!’ என்றார் ஈசன்.

‘புரியவில்லை ஈசனே!’ என்றார் திருமால். அதைக் கேட்டதும் புன்முறுவலுடன் தனது தலையைச் சற்றே சிலுப்பி அசைத்தார். அந்த அசைவில் ஈசனைப் போலவே வடிவம் கொண்ட ஒருவர் தோன்றினார். இடையில் புலித்தோல் ஆடையையும், முடியில் பிறை அணியையும் கொண்டு முக்கண் தரித்திருந்தார். அவர் பீமருத்திரர் ஆவார்.

அவரைப் பார்த்து ஈசன் ‘பீமருத்திரா! நீ திரையாக மாறி இத்தலத்தில் எனது சன்னதியில் என்னை எந்நேரமும் மறைத்துக் கொண்டிருக்க வேண்டும். சன்னதியின் உள்ளே வாமனர் எம்மைப் பூஜித்துக் கொண்டே இருப்பார். நந்திக்குக் கூட எனது தரிசனம் தெரியாமல், நீ எம்மை மறைத்துக் கொண்டிருக்க வேண்டும், எம்மை தரிசிக்க வரும் அடியவர்கள் உம்மை தரிசித்து உன் அனுமதி பெற்ற பின்பு, திரையை நீக்கி என் தரிசனம் பெற



வேண்டும், அதுவும் இரண்டொரு நொடிக்கு மட்டும்தான்! பின்பு திரை மூடப்பட வேண்டும்! என் ஆணையை இன்று முதல் இத்தலத்தில் சன்னதியின் முன்பு திரையாக மாறுவாயாக!' என்று அபய கரம் நீட்டி பீமருத்திரருக்கு கட்டளையிட்டார்.

அன்று முதல் திரை வடிவில் ஈசன் சன்னிதியை ருத்ரர் காவல் காக்கிறார். இந்த வரலாறு கோயில் சுவற்றில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. ஈசனைத் தரிசிக்க வேண்டும் என்றால் இன்றும் திரைவடிவில் அருளும் பீமருத்ரருக்கு பூஜைகள் செய்து அவரது அனுமதி பெற்று திரையை விலக்கி விடுவார்கள். திரையை விலக்கிய அந்த இரண்டு நொடிகளில் ஈசனை தரிசித்திட வேண்டும். மற்ற கோவில்களில் நந்தி சற்றே தலையைச் சாய்த்த கோலத்தில் இருப்பார். ஆனால் இத்தலத்தில் நேரே ஈசனை நோக்கியபடி இருப்பார். நாம் ஈசனைத் தரிசனம் செய்யும் சில மணித்துளிகளில் தான் நந்திக்கும் ஈசன் தரிசனம் கிடைக்கும். அதனால் தலையை திருப்பி இருந்தால் தரிசனம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தில் நந்தி தன் தலையை சாய்க்காமல் ஈசன் தரிசனத்திற்காக காத்திருக்கிறார்.

இச்சன்னதியில் அம்மையும் அப்பனும் எப்போதும் சேர்ந்தே இருப்பதால் சன்னதியை பீமருத்திரர் பாதுகாக்கிறார் என்கிறது தலபுராணம். சன்னிதியின் திரையில் பீமருத்திரர் திருவுருவம் பொறிக்கப்பட்டு இருக்கும். இவருக்கே முதல் பூஜை செய்யப்படுகிறது.

தேவர்களுக்கு ஞானத்தைப் புகட்டவும் அவரது அஞ்ஞானத்தை நீக்கவும் சதா சர்வ காலமும் பார்வதி தேவியுடன் ஈசன் இணைந்து இருப்பதால் இங்கு இறைவனை நேரடியாக தரிசிக்க இயலாது. கற்பகிரகமே இங்கு பள்ளியறையாக இருப்பதால் தனியே பள்ளி அறை இல்லை.

வழிபட்டோர்

இத்தலத்தைப் பற்றி 11 பதிகங்கள் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். அருணகிரிநாதர் இத்தல முருகனை திருப்புகழில் போற்றிப் பாடியுள்ளார். சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேக்கிழார், திருமால் போன்றோர் வழிபட்டதாக தல வரலாறு கூறுகிறது.




இத்தலத்தில் தல விருட்சம் முதல் யுகத்தில் சந்தன மரமும், இரண்டாவது யுகத்தில் வாமனன் வழிபட்டதால் விஷ்ணு —மகாலட்சுமிக்காக வில்வ மரமும் உள்ளது. ஈசன் சன்னதியில் உள்ள நான்கு தூண்களும் நான்கு வேதங்களாக உள்ளன.

மதுரையில் மீனாட்சி ஆகவும், காஞ்சியில் காமாட்சி ஆகவும், காசியில் விசாலாட்சி ஆகவும், நாகையில் நீலாயதாட்சியாகவும் இருக்கும் அம்பிகை, இத்தலத்தில் அஞ்சனாட்சியாக அருள்பாளிப்பதால், அம்பிகையின் ஆட்சிபீடமாக கருதப்படுகிறது.

இத்தலத்தில் அம்பிகை பகல் நேரத்தை தாமரைப் பூவாகவும், இரவு நேரத்தை நீலோத்பவ மலராகவும் எண்ணி இரு கைகளிலும் ஏந்தி காட்சி தருகிறாள். அதாவது காலத்தை அடக்கி ஆளும் சக்தியாக இங்கு விளங்குகிறாள் என்பதே ஐதீகம்!

துர்க்கை



மகிஷாசுரனை வதம் செய்வதற்கு முன்பிருந்தே இங்கே துர்க்கை அருளுவதால், துர்க்கையின் பாதங்களுக்கு கீழே மகிஷாசுரனின் சிரம் இல்லை. அனைத்து தலங்களிலும் மூஷிகம் (எலி) விநாயகர் முன் இருக்கும். இங்கு பக்கத்தில் இருக்கும். பைரவராக சொர்ணாகர்ஷண பைரவர் இருக்கிறார். இத்தலத்தில் கிருஷ்ணா என்னும் கெடிலம் நதிக்கரையில் மகாலட்சுமி தவம் செய்கிறார். பிரம்மாவின் துணை சரஸ்வதி ஸ்வேத நதியாக கெடிலத்தில் வடக்கு முகமாக சங்கமிக்கிறாள். இது சங்கமாசேத்திரத்தில் நான்காவது பிரம்ம சேத்திரமாகும்.

யுகப் பிரளயத்தில் இறைவன் ஜோதிப்பிழம்பாகக் காட்சி தந்த தலம் திருவண்ணாமலை. பிறகு அதே ஜோதி ரூபமாக கடல் சூழ்ந்த உலகை மீண்டும் உற்பத்தி செய்வதற்காக தோன்றியது இத்தலம். எனவே திருவண்ணாமலையில் பரணி நட்சத்திரத்தில் தீபம் ஏற்றப்படும். ஆனால் இங்கு கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் கோயிலுக்கு எதிரில் உள்ள மலை மீது தீபம் ஏற்றப்படுகிறது. பௌர்ணமி தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வருகின்றனர்.

கல்வெட்டு

இத்தலம் 'உதவி' என்று தலக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. கோயில் முதலாம் குலோத்துங்க சோழன், விக்ரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் ராஜராஜ சோழன் காலங்களிலும், விக்ரம பாண்டியன் காலத்திலும், விஜயநகரப் பிரதாபதேவ மகாராயர் போன்றோர் பற்றிக் கல்வெட்டுகளில் உள்ளது.




இங்குள்ள விக்ரமசோழனுடைய மெய்க்கீர்த்தி மாத்திரம் அடங்கிய கல்வெட்டில், சோழ மன்னர்களுக்கு தில்லைச் சிற்றம்பலத்து இறைவன் குலதெய்வம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லையிலே முடி சூட்டிக்கொண்டான் என்றும், குலோத்துங்க சோழனை திரிபுவன சக்கரவர்த்தி, வீரராஜேந்திர சோழ தேவன் என்றும் இருப்பதுடன், சோழமண்டலத்திற்கும் தொண்டை மண்டலத்திற்கும் நடுவில் மண்டலத்தில் (நடுநாடு) திருமாணிக்குழி உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவிழா

இங்கு மகா சிவராத்திரி மற்றும் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகிறது. இத்தலத்து ஈசனை வணங்கினால் வலிமை கூடும் என்பது நம்பிக்கை! அம்மையும் அப்பனும் இங்கே சேர்ந்தே இருப்பதால் கணவன் மனைவி இடையில் ஒற்றுமை ஓங்கும் என நம்பப்படுகிறது. குழந்தை வரம் வேண்டுவோர் அமாவாசை தினத்தில் ஈரத் துணியுடன் அம்மனை பதினோரு தடவை சுற்றி வந்து அம்மனுக்கு வெண்ணெய் நெய்வேத்தியம் செய்து அதை 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால், பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை! சிவனுக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் செய்து, புது வஸ்திரம் சாற்றுகின்றனர்.

சிறப்பு

இச்சன்னிதியில் ஒருமுறை வந்து வழிபடுவது காசியில் 16 முறையும், திருவண்ணாமலையில் 8 முறையும் சிதம்பரத்தில் 3 முறையும் சென்று வழிபடுவதற்கு சமம் என்பது ஐதீகம்!

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 7 மணிமுதல் 11 மணி வரையிலும், மாலை 4.30 மணிமுதல் இரவு 8 மணிவரை திறந்திருக்கும்.

இருப்பிடம்

கடலூரில் இருந்து 10 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. கடலூரில் இருந்தும் பண்ருட்டியில் இருந்தும் பேருந்து வசதியுண்டு.

(தொடரும் வலம்.....)

# பெண்ணுள்ளம்

அதிகாலை
‘அலாரம்‘ வைத்தெழுந்து
அவசரமாய்க் குளித்து
அரைகுறையாய் உடுத்தி
அடுப்படி வேலை முடித்து
அருமைச் செல்வங்களைப்
பள்ளிக்கனுப்பி
அலுவலகம் கிளம்பி வந்து
ஆசுவாசப்படும்போது தோன்றும்
‘ஏனடா இப்பெண் பிறவி? என!

மாலை மீண்டும்
கூடடைகையில்...
ஓடிவரும் பிள்ளைகளின்
உடுப்பு மாற்றி— மதிய
உணவு உண்டார்களாவென
ஆய்ந்து பார்த்து
அவர்கள் சொல்லும்
அன்றைய கதைகளை
‘ஆவென’ வாய்பிளந்து
கேட்கையில் பிறவிப் பயன்
பெற்று விட்டதாய்ப்
பூரிப்படையும்

பெண்ணுள்ளம் போல்
பித்துப் பிடித்தது ஏதேனும்
இருக்கிறதாவென
எண்ணியெண்ணி
இதழ்க் கடையில் தோன்றும்
புன்னகைக்கு
விலையேதும் உண்டோ
சொல்வீர் உலகத்தீரே!?




**ம.இராதா**

கவிதை

# நின் திருமேனி வாசனை

நீர் சுழித்தோடும்
சிற்றோடைக் கரையில்
மிகுமகரந்தம்
குளித்துப் பூத்திருக்கும்
நாணல் பூக்களாகி
நிற்கிறேன்.

என் சிறு செம்மண் பாதையில்
இசைக்குறிப்பெழுதி போயிருக்கிறது
உன் செம்பாதக் கொலுசுகள்.

யாவரும் குளித்துக்
கரையேறிய பின்
சலசலப்பின்றி படித்துறையில்
நீராடும் மழைக்கால வெய்யிலை
அள்ளி வரும் பனிக்காற்றில்
நின் திருமேனி
வாசனையடி பாவாய்!

**சதீஷ் குமரன்**




VARSHA™
HAPPY NEW YEAR
2024
VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Happy
new year 2024
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# அறிவோம் தமிழர்


## பெரியார்: இன்றும் தேவைப்படும் பெருந்தகையாளர்

பகுத்தறிவு பகலவன் என்றழைக்கப்படும் பெரியார், 20 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய சிறந்த தத்துவ அறிஞராகவும், சிந்தனையாளராகவும் கருதப்படுகிறார்.

ஈ.வெ. ராமசாமி என்ற இயற்பெயர் கொண்ட பெரியார், செப்டம்பர் 17 ஆம் தேதி, 1879 ஆம் ஆண்டு ஈரோட்டில் பிறந்தார். அதுவரை பலரும் பேசத் தயங்கிய கருத்துக்களை பொதுவெளிக்கு கொண்டு வந்து அதன் மூலம் உரையாடல்களையும், விவாதத்தையும் தொடர்ந்து ஏற்படுத்தினார். தனது சிந்தனைகளை ஆழமாகப் பரப்பினார். குறிப்பாக இளைஞர்கள் மத்தியிலும், பெண்கள் மத்தியிலும் கேள்விகளை எழுப்பினார்.

சமூக நீதி, சாதி, கடவுள் மறுப்பு, சமூக ஏற்றத் தாழ்வு, பெண் விடுதலை, பெண் கல்வி, விஞ்ஞானம், அரசியல், அறிவியல் என அனைத்து விஷயங்கள் குறித்தும் பெரியார் பேசினார். வயோதிகக் காலத்திலும் ஓய்வெடுக்காமல் தனது சமூகப் பணியை இடைவிடாது தொடர்ந்தார். பெரியாரின் சிந்தனை நீட்சியாகவே தமிழகத்தில் திராவிட கட்சிகள் தோன்றின.

இந்தியாவைப் பீடித்துள்ள ஐந்து நோய்களுள் ஒன்றாக அரசியல் கட்சிகளை அடையாளப்படுத்தியதோடு, இறுதிவரை தமது இயக்கம் தேர்தல் அரசியலில்பங்கேற்காது என்றும் திட்டவட்டமாகப் பிரகடனப்படுத்தியவர் பெரியார். இம்மண்ணில் அரசியல் மாற்றத்தை நிகழ்த்த விரும்பியிருந்தால், அவரே ஓர் அரசியல் கட்சியை நடத்தவும் தயங்கியிருக்கமாட்டார். தானாகத் தம்மிடம் வந்துசேர்ந்த நீதிக்கட்சியைக் கூடத் தேர்தலில் பங்கேற்காத திராவிடர் கழகமாக மாற்றிய பெருந்தகையாளர் பெரியார். இருப்பினும், அரசியல் கட்சிகளின் பல்வேறு தவறுகளுக்காக இன்றைக்குப் பெரியாரே விமர்சனத்துக்கு ஆளாக்கப்படுகிறார் என்பதுதான் முரண்நகை.








# பெருமை

சி.மதிவாணன்

சாதி உணர்விலிருந்து விடுதலை பெறஞ் சமூக மாற்றத்துக்கும் புரட்சிகரச் செயல்பாடுகளுக்கும் முற்போக்கு நடவடிக்கைகளுக்கும் ஆட்சி அதிகார மாற்றத்துக்கும் உலகமே தேர்தல் அரசியலைக் கைக்கொள்ளும்போது, அதில் பங்கேற்பதையே முற்றாகத் தவிர்த்த பெரியாரின் நோக்கம்தான் என்ன? இந்நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களின் பிறவி இழிவாகத் திணிக்கப்பட்டிருக்கும் சாதியச் சமூக அமைப்பை அகராதியிலேயே இல்லாமல் செய்திட வேண்டும் என்பதையே முதன்மை லட்சியமாகக் கொண்டிருந்தார் பெரியார்.



தம்முடைய லட்சியத்துக்குத் தடையாக இருந்த கடவுள், மதம், மொழி, தேசியம், குடும்பம், நம்பிக்கை, தீண்டாமை,கலை, இலக்கியம், புராணம், அரசியல் என அனைத்தையும் கடுமையாக எதிர்த்து விமர்சித்த அவர், தம்முடைய லட்சிய நோக்கத்துக்கு ஆதரவான பகுத்தறிவு, தர்க்கம், ஒழுக்கம், அறம், ஆங்கிலம், சுயமரியாதைமிக்க சமத்துவக் கோட்பாடு, திருக்குறள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், சமூக இயக்கம் என அனைத்தையும் தமதாக்கி, இறுகப் பற்றிக்கொண்டார்.

அம்பேத்கர் குறிப்பிட்டதுபோல, சாதி ஒருவருடைய பிறப்பின் அடிப்படையில் — ஏறுவரிசையில் மதிப்பையும் இறங்குவரிசையில் அவமதிப்பையும் அளிப்பதாக — ஒவ்வொரு நிலையிலும் மக்களைப் பிரித்தாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சாதி உணர்வில் மண்டிக்கிடக்கும் தமிழ்ச் சமூகம் அதிலிருந்து மீண்டெழ வேண்டும் என்ற நோக்கத்தில்தான் பெரியார் கடுஞ்சினத்துடன் சாடுகிறார்:




“நம் கடவுள் சாதி காப்பாற்றும் கடவுள்; நம் மதம் சாதி காப்பாற்றும் மதம்; நம் அரசாங்கம் சாதி காப்பாற்றும் அரசாங்கம்; நம் இலக்கியம்

சாதி காப்பாற்றும் இலக்கியம்; நம் மொழி சாதி காப்பாற்றும் மொழி. இதை உயர்ந்த மொழி என்கிறார்கள். என்ன வெங்காய மொழி! 2000 வருடங்களாக இருக்கும் தமிழ் மொழி, சாதியை ஒழிக்க என்ன செய்தது?”

பெரியாரின் பிரகடனம்: அனைத்தையும் அரசியலாக மட்டுமே புரிந்துகொண்ட தமிழ்ச்



சமூகம், பெரியார் மறைந்து 50 ஆண்டுகளாகியும் சாதி உளவியலிலிருந்து மீளாமல் ஆண்ட பரம்பரைப் பெருமை பேசி, ஆணவப் படுகொலைகளை நடத்தும் அளவுக்குத் துணிந்திருக்கிறது. தமிழ்ச் சமூகத்துக்குப் பாடுபட்ட வ.உ.சிதம்பரனார், தீரன் சின்னமலை, மருது பாண்டியர், கட்டபொம்மன், அழகு முத்துக்கோன், காமராசர் போன்றோருக்கெல்லாம் சிலை வைத்து தமிழ்ப் பெருமை பேசும் அதேவேளை, அவர்களைத் தத்தம் சாதிக்குரியவராகப் போற்றும் முரணான மனநிலை இங்கு ஒரு சமூகக் குற்றமாகக் கருதப்படவில்லை.






சாதிக்கு ஆதாரமான கடவுள், மதம், புராணம், இதிகாசம், நம்பிக்கை, ஆன்மிகம் இவற்றை எல்லாம் கண்டிக்காமல் வளர்த்தெடுக்கப்படும் மொழியுணர்வு, சாதி உணர்வைப் பொசுக்கிவிடும் எனப்பெரியார் நம்பவில்லை. தமிழனின் ஆழ்மனதில் தைக்கப்பட்டிருக்கும் மதத்தின் அடிப்படையிலான சாதியச் சிந்தனை அறுத்தெறியப்படும்போதுதான், அது சாத்தியமாகும் என அவர் உறுதியாக எண்ணினார். அதனால்தான் சாதிக்கு ஆதாரமான மதத்துக்குத் துணைபோகும் அனைத்து வகையான சடங்கு, சம்பிரதாயம், பக்தி, கற்பு, பழக்கவழக்கம் என எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கினார்.

இடஒதுக்கீடு குறித்த புரிதலின்மை: பெரியாரின் உயிர்மூச்சுக் கொள்கையான சாதி ஒழிப்பு, பாலினச் சமத்துவம், பகுத்தறிவு, ‘ஆதிதிராவிடர்’களைத் ‘திராவிடர்’களாக்கும் செயல்திட்டம், தமிழை மத நீக்கம் செய்து அறிவியல் மொழியாக்குவதற்கான திட்டவரைவுகளுக்கு எல்லாம் முன்னுரிமை அளிக்காத தமிழ்ச் சமூகம், அவருடைய அரசியல்வயப்பட்ட தனித் தமிழ்நாடு கோரிக்கை, இந்தி எதிர்ப்பு மற்றும் மாநிலத் தன்னாட்சிக்கு அடுத்ததாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை மட்டுமே கவனப்படுத்தியுள்ளது.

ஆனால், பெரியாருக்குப் பிறகு அதுவும் பிரதிநிதித்துவக் கோட்பாட்டின் உள்ளார்ந்த உரிமையாக வளர்த்தெடுக்கப் படாததால் — சாதிப் படிநிலையால் ஏற்பட்ட — பிற்படுத்தப்பட்ட நிலைக்கான நிவாரணம் என்றளவில் அது இடஒதுக்கீடாகச் சுருக்கப்பட்டுவிட்டது. அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற சுதந்திர

நாட்டில், அதே வேறுபாடுகள் நிலவக் கூடாது என எண்ணுகிறோம். ஆனால், இடஒதுக்கீட்டை அனுபவிக்கும் சமூகத்திலும் சாதியப் பாகுபாடுகள் குறையாமல் அதிகரிக்கும் எனில், அது பெரியார் காணத் துடித்த ஜனநாயகச் சமூகத்துக்கு எதிரானது.

முக்கால் நூற்றாண்டாக இடஒதுக்கீட்டை அனுபவித்த சமூகம் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டிருந்தால், அது நீதித்துறைக்கும்தனியார் துறைக்கும் விரிவடைந்து, அடுத்தடுத்த தலைமுறையும் முழுமையாக அனுபவிக்கும் நிலையைப் பெற்றிருக்கும். ஆனால், பெரியார் பெற்றுத் தந்த வகுப்புவாரிப்பிரதிநிதித்துவக் கோட்பாடு ஒரு நூற்றாண்டை நெருங்குவதற்குள் — சமூக நீதிக் கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிராக — பொருளாதார அடிப்படையிலானதாக மாற்றப்பட்டுவிட்டது.

மதத்தையும் அதனால் விளைந்த ஆதிக்கத்தையும்



பெரியார் கடுமையாக விமர்சித்துப் பெற்றுத்தந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும்; ஆனால், மதத்தையும் அதன்வழி நிலைப்படுத்தப்படும் ஆதிக்கத்தையும் கைவிட மாட்டோம் என்பதால் விளைந்த அவலநிலையே இது. இதை உணராததால்தான் நாம் எஞ்சியிருக்கும் இடஒதுக்கீட்டையாவது அனுபவித்தால் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதோடு — ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கும் அதைப் பகிர்ந்தளிப்பவர்களாக — வரலாற்றில் முரண்பட்ட கையறு நிலையில் இன்று நிற்கிறோம்.

தலித் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நாள்தோறும் அதிகரிப்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், சாதிய ஆதரவாளர்கள் எத்தகைய கருத்தைக் கொண்டிருக்கிறார்களோ அதே கருத்தையேஇடஒதுக்கீட்டுப் பயனாளிகளான பிற்படுத்தப்பட்டோரும் / ஒடுக்கப்பட்டோரும் கொண்டிருக்கிறார்களோ என ஐயமுற வேண்டியுள்ளது. உண்மையில் சாதிக்காகக் கொடுக்கப்படுவது அல்ல இடஒதுக்கீடு; சாதியால் விளைந்த பிற்படுத்தப்பட்ட நிலையைச் சீர்ப்படுத்தவே அது அரசால் வழங்கப்படுகிறது. அதனால் சாதி எந்த நிலையிலும் நிலைபெற்று உண்மை என்றாகிவிடாது. இந்த உண்மை புரிந்துகொள்ளப்படாததால், இடஒதுக்கீட்டுப் பயனாளிகளிடையே ஓர்மை ஏற்படுவதற்கு மாறாக, அது சாதிப் பகையுணர்வாக வலுப்பட்டிருப்பது மிகவும் ஆபத்தானது.

சமூக ஓர்மையின் தேவை: இப்பேராபத்தை




உணர்ந்ததால்தான் பெரியார், "சமுதாயத்தில் ஒவ்வொருசாதிக்காரனும் தமக்குள்ள சாதி இழிதன்மை பற்றிச் சிந்திக்காமல், ஒழிக்கப் பரிகாரம் காணாமல், அவனவன் தாங்கள் மற்றவனைவிட உயர்ந்த சாதி, மேலான சாதி என்று கூறிக்கொள்ள முற்படுகின்றானே ஒழிய, சாதி இழிவை ஒழிக்க, சாதி முறையை ஒழிக்க எண்ண மாட்டேன் என்கிறார்களே!" என்றார். தவிர, எந்தத் தனிப்பட்ட வகுப்பினரும் தங்கள் அளவில் சாதியிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது என்பதால்தான் இவ்வமைப்பால் பாதிப்புக்குள்ளான பெரும்பான்மை மக்கள், ஓரணியில் திரள வேண்டிய அவசியத்தையும்

பெரியார் வலியுறுத்தினார். பெரியார் ஊட்டிய சுயமரியாதை, பகுத்தறிவு, திராவிட — தமிழுணர்வு அரசியல் அதிகாரத்துக்கானதன்று; அது தமிழ்ச் சமூகத்தைப் பண்படுத்தி, அவர்களை மானமும்



அறிவும் உள்ள மக்களாக்குவதே. 'தமிழன்' என்கிற அரசியல் ஓர்மை, ஒரு சமூக ஓர்மையாகப் பரிணமிப்பதன் மூலம் சாதி ஒழிந்தாக வேண்டும் என்பதே அவருடைய ஒப்பற்ற லட்சியம். அதற்காகத்தான் பெரியார் தம் வாழ்நாள் முழுவதும், ஏன் தமது மரணப்படுக்கையில்கூட, இம்மக்களின் பிறவி இழிவைப் போக்க முடியவில்லை என்பதற்கே பெரிதும் ஆதங்கப்பட்டார். பிறவி இழிவை ஒழிப்பதென்பது சாதிப் பட்டத்தைத் துறப்பதுடன் முடிவதில்லை. அது, இச்சமூகத்தின் மனசாட்சியைத் தட்டியெழுப்புவது. அதற்கு முன்னெப்போதையும்விடத் தற்போது பெரியார் தேவைப்படுகிறார்.

"ஒரு காலத்து முறைகளே எக்காலத்துக்கும் என்றால்..." — பெரியாரின் 10 சிந்தனைகள்

*யார் சொல்லியிருந்தாலும் எங்கு படித்திருந்தாலும் நானே சொன்னாலும் உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே.




* ஒரு காலத்து முறைகளே எக்காலத்துக்கும் என்றால் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி இல்லை என்பதுதான் பொருள்.

* வாழ்க்கை ஒழுக்கத்தில் கணவனுக்கு ஒரு சட்டம் மனைவிக்கு வேறு சட்டம் இருக்கிறது.

* என்னை கடவுள் நம்பிக்கை இல்லாதவன் என்கின்றனர் சிலர், அதில் உண்மையில்லை. நான் நம்பிக்கை வைக்க அப்படி எதுவும் இருப்பதாக புலப்படக் காணோமே என ஏங்குபவன் நான்.

* சிந்திப்பவன் மனிதன்; சிந்திக்க மறுப்பவன் மதவாதி; சிந்திக்காதவன் மிருகம்; சிந்திக்கப் பயப்படுகிறவன் கோழை.

* மனிதன் பிறந்தநாள் முதற்கொண்டு சாகின்ற வரையில் உலகில் மாணவனாக இருக்கிறான்.

* ஓய்வு, சலிப்பு என்பவற்றை தற்கொலை என்றே கருதுகிறேன்.

* ஒருவன் தன் தேவைக்கு மேலே எடுத்துக் கொள்ளாவிட்டால் எல்லோருக்கும் வேண்டியவை கிடைத்துவிடும்.

* ஆயுதமும் காகிதமும் பூஜை செய்ய அல்ல, புரட்சி செய்ய.

*மதம் மனிதனை மிருகமாக்கும்; சாதி மனிதனை சாக்கடையாக்கும்




# கடலரசி




**நூல் ஆசிரியர்:** *கொற்றவன்*

*சரித்திர சிறுகதைகள்*

**விலை : ரூ. 300**

**வெளியீடு:**

**அன்னை புத்தகாலயம்**

**தி.நகர், சென்னை–17**

**Ph: 94441 26523**

*தமிழ் நிலத்தின் வரலாற்றுடனும், சங்கத் தமிழ் இலக்கியத்துடனும் தொடர்புடைய இருபது சிறுகதைகளை உள்ளடக்கியதே 'கடலரசி' நூல். மன்னர்களின் கவிபாடும் திறம், அவர்கள் தமிழை வளர்த்துக் காத்த விதம், புலவர்களை போற்றி ஆதரித்த விதம், தமிழ் நிலத்துக்கும் மொழிக்கும் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சாதனைகள் எனப் பலவற்றை நேர்த்தியான கதைகள் மூலம் சுவைபடக் கூறுகிறது இந்நூல்.*

*தமிழர்கள் வீரத்தையும், காதலையும், கொடையையும் எவ்வாறு உயிராக நேசித்தனர் என்பதை வனப்புமிகு வாளிப்பான வார்த்தைகளில் நெஞ்சை அள்ளும் படைப்பாக வடித்திருக்கிறார் நூலாசிரியர்.*

*இதில் இடம் பெற்றிருக்கும் சிறுகதைகள் பல பரிசுகளும் விருதுகளும் வென்றிருக்கும் கதைகள் என்பதால், பரவலான வாசிப்பையும், வரவேற்பையும் பெற்றிருக்கின்றன என்றாலும், அவற்றை ஒரே தொகுப்பில் பார்ப்பது இலக்கிய — சரித்திர வாசகர்களுக்கு பெரும் அறுசுவை விருந்தாக அமையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை!*



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## இரத்தம் கசிந்தது 32

மாமல்லர் கீழே விழுந்து விடுவாரே என்ற பயத்தினால் பரஞ்சோதி அவருடைய கரத்தைப் பிடித்துக் கொண்டார். இருவரும் பேச நாவெழாமல் ஆயனரைப் பார்த்தபடியே நின்றார்கள்.

மீண்டும் ஆயனர், "பல்லவ குமாரா! சிவகாமி எங்கே? என் செல்வக் கண்மணி எங்கே? ஆயனச் சிற்பியின் அருமைக் குமாரி எங்கே? மகேந்திர பல்லவரின் சுவீகார புத்திரி எங்கே? பரத கண்டத்திலேயே இணையற்ற நடன கலாராணி எங்கே?" என்று வெறிகொண்ட குரலில் கேட்டுக் கொண்டே போனார்.

மாமல்லருடைய உள்ளமானது பெரும் புயல் அடிக்கும் போது கடல் கொந்தளிப்பது போல் கொந்தளித்தது. ஆயினும் சிவகாமிக்கு என்ன நேர்ந்தது என்று தெரிந்து கொள்ளும் ஆவலினால் பல்லைக் கடித்து மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, பசையற்ற வறண்ட குரலில், "ஐயா! தயவுசெய்து மனத்தை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். சிவகாமி எங்கே என்று நானல்லவா தங்களைக் கேட்க வேண்டும்? சிவகாமிக்கு என்ன நேர்ந்தது? சொல்லுங்கள்" என்று கேட்டார்.




ஆயனருடைய வெறி அடங்கியது. அவருடைய உணர்ச்சி வேறு உருவங் கொண்டது. கண்ணில் நீர் பெருகிற்று, "ஆமாம், பிரபு! ஆமாம்! என்னைத்தான் தாங்கள் கேட்க வேண்டும். சிவகாமியை இந்தப் பாவியிடந்தான் தாங்கள் ஒப்புவித்திருந்தீர்கள். நான்தான் என் கண்மணியைப் பறி கொடுத்து விட்டேன். ஐயோ! என் மகளே! பெற்ற தகப்பனே உனக்குச் சத்துருவானேனே!" என்று கதறியவண்ணம் தலையைக் குப்புற வைத்துக் கொண்டு விம்மினார்.

ஆயனரின் ஒவ்வொரு வார்த்தையும் நரசிம்மவர்மரின் இருதயத்தை வாளால் அறுப்பது போல் இருந்தது. சிவகாமி இறந்து போய் விட்டாள் என்றே அவர் தீர்மானித்துக் கொண்டார். பொங்கி வந்த துயரத்துக்கும், ஆத்திரத்துக்கும் இடையே சிவகாமி எப்படி இறந்தாள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் எழுந்தது. ஒருவேளை சளுக்கர்களால் அவளுடைய மரணம் நேர்ந்திருக்குமென்ற எண்ணம் மின்னலைப் போல் உதயமாகி அவருடைய உடம்பையும் உள்ளத்தையும் பிளந்தது.

மீண்டும் ஒரு பெரு முயற்சி செய்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார். அதிகாரத் தொனியுடைய கடினமான குரலில், "ஆயனரே! மறுமொழி சொல்லிவிட்டு அப்புறம் அழும். சிவகாமி எப்படி இறந்தாள்? எப்போது இறந்தாள்?" என்று கர்ஜித்தார்.

"ஆஹா! என் கண்மணி இறந்து விட்டாளா?" என்று அலறிக் கொண்டு,






படுத்திருந்த ஆயனர் எழுந்து நிற்க முயன்றார். அவர் கால் தடுமாறியது. பயங்கரமாக வீறிட்டுக் கொண்டு தொப்பென்று தரையில் விழுந்தார்.

"இறந்து விட்டாளா?" என்ற கேள்வியினால், சிவகாமி இறந்து விடவில்லை என்ற உண்மை மாமல்லரின் மனத்தில் பட்டது. ஆயனர் அப்படி நிற்க முயன்று விழுந்த போது, அவருடைய காலில் ஊனம் என்னும் விவரமும் மாமல்லருக்குத் தெரிந்தது. இதனால் அவர் கல்லாகச் செய்து கொண்டிருந்த மனம் கனிந்தது.



"ஐயா! தங்களுக்கு என்ன?" என்று கேட்டுக் கொண்டே ஆயனரின் அருகில் வந்து உட்கார்ந்தார்.

"ஐயா! தங்கள் கால் முறிந்திருக்கிறதே? இது எப்படி நேர்ந்தது?" என்று இரக்கத்துடன் வினவினார்.





"மலையிலிருந்து விழுந்து கால் முறிந்தது. என் கால் முறிந்தால் முறியட்டும். சிவகாமி இறந்து விட்டதாகச் சொன்னீர்களே! அது உண்மைதானா?" என்று ஆயனர் கேட்டார்.

"ஐயா! சிவகாமியைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. போர்க்களத்திலிருந்து நேரே வருகிறேன். நீங்களும் சிவகாமியும் காஞ்சியில் சௌக்கியமாயிருப்பதாக எண்ணியிருந்தேன். நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? சிவகாமியை எப்போது பிரிந்தீர்கள்? அவள் இறந்து போய் விடவில்லையல்லவா?" என்று மிகவும் அமைதியான குரலில் பேசினார் மாமல்லர்.

இதற்கு மாறாக, அலறும் குரலில், “ஐயோ! சிவகாமி இறந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!” என்றார் ஆயனர்.

“ஐயா! சிவகாமிக்கு என்னதான் நேர்ந்தது?”

“ஐயோ! எப்படி அதைச் சொல்வேன்? எல்லாம் இந்தப் பாவியினால் வந்த வினைதான்! பிரபு! சிவகாமி யைச் சளுக்கர்கள் சிறைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்!”






“என்ன? என்ன?” என்று மாமல்லர் கேட்ட தொனியில் உலகத்திலேயே கண்டும் கேட்டு மிராத விபரீதம் நடந்து விட்ட தென்று அவர் எண்ணியது புலனாயிற்று.

“ஆம், பிரபு! சிறைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். தாங்கள் சளுக்கர்களைத் தொடர்ந்து போனது பற்றிக் கேள்விப்பட்ட போது, சிவகாமியை விடுவித்துக் கொண்டு வருவீர்களென்று நம்பியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள்! ஆனால் உங்கள் பேரில் என்ன தப்பு? எல்லாம் இந்த பாவியினால் வந்ததுதான். சித்திரம், சிற்பம் என்று பைத்தியம் பிடித்து அலைந்தேன். என் உயிர்ச் சித்திரத்தை, ஜீவ சிற்பத்தைப் பறிகொடுத்தேன்!... ஐயோ! என் மகளுக்கு நானே யமன் ஆனேனே!”

இவ்வாறெல்லாம் ஆயனர் புலம்பியது மாமல்லரின் காதில் ஏறவே இல்லை. சிவகாமியைச் சளுக்கர் சிறைப்பிடித்துச் சென்றார்கள் என்னும் செய்தி ஒன்றுதான் அவர் மனத்தில் பதிந்திருந்தது. சிறிது நேரம் பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார்.

பிறகு, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, மிக மெலிந்த குரலில், “சிற்பியாரே! இதெல்லாம் எப்படி நடந்தது? காஞ்சியிலிருந்து நீங்கள் ஏன் கிளம்பினீர்கள்? சிவகாமி எப்படிச் சிறைப்பட்டாள்? உங்கள் கால் எப்படி ஒடிந்தது? அடியிலிருந்து எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!” என்றார்.

ஆயனரும் அவ்விதமே விவரமாகச் சொன்னார். தட்டுத் தடுமாறி இடையிடையே விம்மிக் கொண்டு சொன்னார்.

மாமல்லர் கேட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம் உறையிலிருந்து எடுத்த கத்தியை அவர் கையில் வைத்துக் கொண்டிருந்தார். கத்தியின் கூரிய விளிம்பை அவர் இடக்கை விரல்கள் தடவிக் கொண்டிருந்தன. அவ்வாறு தடவிய போது விரல்களில் சில கீறல்கள் ஏற்பட்டன. அந்தக் கீறல்களில் கசிந்த இரத்தம் சொட்டுச் சொட்டாகத் தரையில் சொட்டிக் குட்டையாகத் தேங்கியது.

(சபதம் தொடரும்)


பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# யோகா

### யோக சூத்திரம்:

பதஞ்சலி முனிவர் வகுத்த அட்டாங்க யோகம் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு அடுக்கு எனப்படும் அட்டாங்க வழியைக் காண்பிக்கும் ஒன்று.

இதனால் உடல் ஆரோக்கியமும், மன ஆரோக்கியமும், சமுதாய நலனும் மேம்படும் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டு விட்டதால் உலகெங்கும் யோகா இப்போது நடைமுறைப் பழக்கமாக ஆகிவிட்டது.

இதற்கென தனி இடமோ அல்லது விசேஷமான சாதனங்களோ தேவை இல்லை. உடலே இதற்கான கருவி. உள்ளமே உயரத்தை எட்டுவதற்கான ஏணி.


யோகத்தினால் மூச்சை அடக்கிய யோகி:

உலகெங்கும் உள்ள சோதனைச் சாலைகளில் யோகா பற்றிய ஏராளமான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவை வியத்தகு முடிவுகளை அறிவித்துள்ளன.

மகராஜா ரஞ்சித் சிங் லாகூரை ஆண்டபோது அவருடன் இணைந்து பிரிட்டிஷ் ஜெனரலான சர் கிளாட் வேட் ஒரு சோதனையை நடத்தினார். அரசு முத்திரை பொறிக்கப்பட்ட ஒரு பெட்டியில் யோகியான ஹரிதாஸ் என்பவர் வைக்கப்பட்டு புதைக்கப்பட்டார். 120 நாட்கள் கழித்து குழி தோண்டப் பட்டு பெட்டியைத் திறந்து பார்த்த போது முன்னர் எப்படி அமைதியாக இருந்தாரோ அதேபோல அவர் எழுந்து வந்தார். இதைப் பார்த்த அனைவரும் பிரமித்தனர்.

986—ம் ஆண்டு பிரிட்டன் ராணுவ ஆய்வு மையம் பிரெனர் மற்றும் கனாலி ஆகிய இரு விஞ்ஞானிகளை மூச்சை அடக்கும் யோகா திறன் பற்றி ஆய்வு செய்ய நியமித்தது.

'தியானத்தின் மூலமாக மிக அதீத ஓய்வு நிலையைப்






# யோகம்!

தீ.பரிமளா

பெறுவதால் உடல் இயக்கம் நம்ப முடியாதபடி குறைந்து ஆக்சிஜன் தேவையை வெகுவாகக் குறைக்கிறது. ஆகவே இது சாத்தியமாகிறது' என்று அவர்கள் ஆய்வின் முடிவைக் கூறினர்.

1927—ம் ஆண்டு பாரீசில் நடந்த பன்னாட்டு அதீத உளவியல் மாநாட்டில் பேராசிரியர் வான் ஷ்ரெங் நாட்ஜிங் முன்னிலை வகிக்க மாநாட்டில் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க ஒரு இளைஞர் 27 முறை மேலே பறந்து காண்பித்தார். யோகத்தால் வந்த — மிதக்கும் — 'லெவிடேஷன்' சக்தி இது என்று அவர் கூறியபோது அனைவரும் வியந்தனர்.



யோகம் தரும் பயன்கள்: தியானம் மற்றும் எளிய ஆசனங்கள் எல்லையற்ற பயனைத் தருபவை. தினமும் 20 முதல் 30 நிமிடங்கள் வரை இதற்கு ஒதுக்கினால் போதும். நல்ல ஒரு ஆசானிடம் எளிய ஆரம்பப் பயிற்சிகளைக் கற்று ஒருவர் இதில் ஈடுபட்டால் ஏராளமான பயன்களைப் பெறலாம்.




சில பயன்களின் பட்டியல் இதோ:

1) பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தியானம் ஒருவருக்கு ஆக்கபூர்வமான தொடர் வரிசை விளைவுகளை ஏற்படுத்துகிறது.

2) நடத்தையைச் சீராக்கும் மருத்துவ சிகிச்சையில் இது தன்னைத் தானே கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த வழிமுறையாக ஆகிறது.

3) மன அழுத்தத்தை இது நீக்குகிறது. நல்ல ஓய்வை உறுதி செய்கிறது.

4) ஒருவரின் உண்மையாக தற்போது இருக்கும் ஆன்ம அடையாளத்தை அவரது லட்சியபூர்வமான ஆன்ம அடையாளத்துடன் சமப்படுத்துகிறது.

5) அனைத்தும் உள்ளடக்கிய முழு மருத்துவத்தைத் தன்னுள்ளே கொண்டது இது.

*6) அகங்காரத்தை நீக்குகிறது.*

*7) நிகழ்காலத்தில் வாழ வழி வகுக்கிறது.*

*8) எண்ணங்களைத் தளர்த்தி வெளியேற்றும் சிறந்த உத்தியாக அமைகிறது இது.*

*9) ஆரோக்கியத்திற்கான அற்புதத் திறவுகோல் இது. மாரடைப்பு, கேன்சர், பக்கவாதம் போன்ற கொடிய நோய்களை வரவிடாமல் செய்ய உள்ள அற்புத வழி இது.*

*10) தியானத்தால் நம்பமுடியாத உடல் ரீதியான சாகசச் செயல்களைச் செய்ய முடியும்.*

*11) தியானத்தினால் தானியங்கி நரம்பு மண்டலத்தை நமக்கு உகந்த படி கட்டுப்படுத்த முடியும்.*

*12) மன அழுத்தம், மன இறுக்கம் சம்பந்தமான உளவியல் மற்றும் இதர பிரச்சினைகளை நீக்குவதற்கு உதவுவது இது.*

*13) மனிதனுக்கு அகண்ட பார்வையைத் தருவது இது.*

*14) வேக யுகத்தில் நமக்குள்ள தொழில் நுட்ப கலாசாரத்தின் தீமைகளை எளிதில் அகற்றுவது இது.*

*15) மனித வாழ்வின் மாண்புகளையும் மதிப்புகளையும் உணர்த்துவது இது.*

*16) நமக்குத் தெரிந்த கலைகளிலேயே மிக எளிதாகக் கற்கக் கூடிய கலை யோகக் கலையே.*

*17) நமக்குத் தெரிந்த உத்திகளிலேயே மிக எளிதாகப் பயிற்சியை நடைமுறைக்குக் கொண்டுவருவது இதுவே.*

*18) இதைச் செய்ய பணம் தேவை இல்லை.*

*19) இதற்கு வயது வரம்பு கிடையாது.*

*20) ஆண், பெண் என்ற பால் பாகுபாடு இல்லை.*

*21) எந்த இடத்தில் வேண்டுமானாலும் செய்யலாம்.*

*22) தியானத்தை எந்த நேரத்திலும் மேற்கொள்ளலாம்.*

*23) இனம், மதம், நாடு, அந்தஸ்து என்ற பாகுபாடோ பேதமோ இல்லை.*

*24) மனதைப் பண்படுத்தி உயரலாம்.*

*25) உடலை மேம்படுத்தலாம்.*

*26) ஆன்மீக சக்தியை அதிகப்படுத்தலாம்.*

*27) மனித குலத்தின் பாரம்பரியத்தின் சிறந்த குணங்கள் தியானத்துடன் சம்பந்தமுள்ளவையாக இருக்கின்றன.*

*28) தியானத்தின் போது ஆச்சரியகரமான அற்புத அனுபவங்கள் ஏற்படும்.*

*29) நீண்ட ஆயுளை உறுதி செய்யும்.*

*30) கெட்ட கனவுகள் அகலும்.*

*31) இரவில் நல்ல தூக்கம் வரும்.*






33) அனைவரையும் கவரும் வண்ணம் எல்லையற்ற அமைதியுடன் எப்போதும் இருக்க முடியும்.

34) புன்னகை ஒளிர முகத்தில் ஒரு ஒளி தோன்றும்.

35) வெட்கம் அகலும்.

36) விளையாட்டு வீரர்கள், கணினி நிபுணர்கள், விஞ்ஞானிகள், பைலட்— என இப்படி எந்தத் துறையினருக்கும் இது பொருந்துவதோடு அவர்களின் திறனை வியத்தகு அளவில் கூட்டும்.




தலாய்லாமாவின் அழைப்பு: 2000—ம் ஆண்டில் தலாய்லாமா அமெரிக்க விஞ்ஞானிகளை தியானம் பற்றி அறிவியல் ரீதியாக ஆராய வருமாறு அழைப்பு விடுத்தார். அவர்கள் ஒரு யோகியை சோதனைக்கு அனுப்புமாறு வேண்ட அமெரிக்காவிற்கு 30 வயதே ஆன ஒரு யோகியை தலாய்லாமா அனுப்பினார்.

விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிரபல நியூரோ விஞ்ஞானியான ரிச்சர்ட் டேவிட்சன் அந்த யோகியின் மீது சோதனைகளை மேற்கொண்டார்.

யோகி ஆறு விதமான தியான நிலைகளைச் செய்து காண்பித்தார்.

மாக்னெடிக் ரெசோனென்ஸ் இமேஜிங் மெஷின் (விஸிமி) என்ற நவீன கருவியை உபயோகித்து ஒவ்வொரு தியானத்திலும் லாமாவின் மூளையில் ஏற்படும் மாற்றங்களை ரிச்சர்ட் ஆராய்ந்தார்.

ஒவ்வொரு விநாடியும் அந்தச் செயல்பாடுகளை ஸ்கேன் செய்ய முடிந்தது. ஆறு தியான நிலைகளில் 'தயை' என்னும் தியானம் லாமாவின் மூளையில் இடது பக்க பிரண்டள் கைரசின் செயல் பாட்டைக் காண்பித்தன. இந்தப் பகுதி தான் ஒரு மனிதனின் சந்தோஷம், உற்சாகம், சக்தி, விழிப்புணர்வு ஆகியவற்றைக் குறிக்கும்.

வலது பக்க பிரிப்ரண்டல் பகுதி ஒருவரின் சோகம், துக்கம், கவலை, ஏக்கம், மனச்சோர்வு ஆகியவற்றைக் குறிக்கும். 'தயை தியானத்தில்' லாமாவின் மூளைப்பகுதி சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் எல்லையற்ற நலத்தையும் காண்பித்தன. இவற்றைப் பயிற்சி மூலம் பெறலாம் என்பதை இது உறுதிப்படுத்தியது.

அடுத்த சோதனைத் தொடரை பால் எக்மன் என்னும் விஞ்ஞானி நடத்தினார். முகத்தில் ஏற்படும் நுணுக்கமான முகபாவ வேறுபாடுகளை ஆய்வதில் வல்லவர் அவர்.




திடீரென ஒரு பயங்கரமான ஓசையை அவர் ஏற்படுத்தி லாமாவைக் கவனித்தார். இந்த சத்தத்திற்கு யாராக இருந்தாலும் திடுக்கிட்டுப் பயப்படாமல் இருக்க முடியாது. ஆனால் லாமாவோ 'ஓபன் ஸ்டேட்' என்னும் தியான நிலையை மேற்கொண்டிருந்ததால் அவர் முகத்தில் எந்த வித பய உணர்ச்சியும் தெரியவில்லை. அவரது இதயத்துடிப்பும், ரத்த அழுத்தமும் சிறிது உயர்ந்தது. எந்தவித அதிர்ச்சி ஏற்பட்டாலும் உடனடியாக சமநிலைக்கு உடனே வர முடியும் என்பதை தியானம் மூலம் அவர் நிரூபித்தார். இப்படி ஏராளமான சோதனைகள் நடந்தன. முடிவுகளை வெளியிட்ட விஞ்ஞானிகள் வியந்தனர்.

பிரபல உளவியல் இதழான சைக்காலஜி டு டே

தொடர்ந்து யோகாவின் சிறந்த பயன்களைப் பற்றிய அறிவியல் ஆய்வுகளை வெளியிட்டு வருகிறது. பத்து நிமிட தியானத்திற்கே பெரும் பயன் உண்டு என்று விஞ்ஞானிகளின் சோதனைகள் நிரூபிக்கின்றன.

இந்த பத்து நிமிட தியானத்திலேயே தியானம் செய்வோர் அதிக அளவுஆல்பா அலைகளை (ஓய்வான மூளை அலைகள்) வெளியிடுவதையும், மனச்சோர்வு, மன அழுத்தம் இல்லாமல் இருப்பதையும் ஹார்வர்டு மெடிகல் ஸ்கூல் விஞ் ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். தமனிகளில் தடிப்பு ஏற்படும் ஆர்தெரோஸ்லெரோசீஸ் என்ற வியாதியால் அவதிப்பட்ட அமெரிக்கர்களில் அறுபது பேர் ஆறு முதல் ஒன்பது மாதம் வரை தியானம் செய்ய அவர்களின் தமனிகளில் தடிமன் குறைய ஆரம்பித்தது என்றும் ஆய்வு தெரிவிக்கிறது.

மகரிஷி மகேஷ் யோகி கற்பித்த ஆழ்நிலை தியானத்தைப் பற்றி ஏராளமான அறிவியல் சோதனை முடிவுகள் இரு பாகங்களாக படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.கவனத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு தனிமனிதனின் உணர்வில் செல்வாக்கை ஏற்படுத்தும் ஒரு உத்தியே தியானம் என அறிவியல் தியானத்தை வரையறுத்துக் கூறுகிறது. ஆனால் இதைத் தோற்றி வளர்த்துக் காக்கும் இந்து மதமோ, “உடல் ரீதியாக உயர்வது மட்டுமின்றி ஆன்மாவை உணர்வதற்கான கலையே யோகா” என்று கூறுகிறது.

தினமும் யோகாசனம் செய்வது உங்களுக்கு சிறந்த ஒரு மூச்சு பயிற்சியாக இருக்கும். இதனால் இதயத்திற்கு தேவையான இரத்த ஓட்டம் சீராக அமையும். மேலும் நமது உடல் சுறுசுறுப்பாக இயங்க உதவும்.

இதயம் தினமும் யோகாசனம் செய்வதன் மூலம் நமக்கு ஏற்படக்கூடிய இதயம் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும். யோகா செய்பவர்களுக்கு இரத்த ஓட்டம் சீராகி, இதயம் பலம் பெறுகிறது.மேலும் நல்ல சீரான சுவாசம் கிடைப்பதோடு இதயம் சரியாக இயங்கி உடல்நலத்தை மேம்படுத்துகிறது.

உடலின் பல பகுதிகளில் இருக்கும் கொழுப்புகள், ஊளை சதை எனப்படும் தேவையற்ற சதைகள் கரைந்து உடல் அழகான வடிவம் பெறுகிறது. மன அமைதி தினமும் காலையில் யோகாசனங்கள் செய்வதால் நம்முடைய சிந்திக்கும் ஆற்றல் மேம்படுகிறது. மேலும் நம்முடைய மனம் பதற்றங்கள் நீங்கி அமைதியடைகிறது.

அதிகப்படியான வேலைபளு மற்றும் இன்ன பிற காரணங்களால் பலரும் மனஅமைதியை, சந்தோஷம் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே தினமும் யோகா செய்வதால் நம்முடைய மன அழுத்தம் மற்றும் மனம் சம்பந்தமான அத்தனை குறைபாடுகளும் நீங்குகிறது.

இரத்த ஓட்டம் யோகா செய்யும் போது நாம் உடலை வளைத்து, நெளித்து செயல்படுவதால் உடலுக்கு அதிகப்படியான இயக்கம் கொடுகின்றோம். இதனால் நம்முடைய இரத்த ஓட்டம் சீரடைகிறது.

நோய் நொடியின்றி வாழ ஆரோக்கியமான உணவு முறைகளை பின்பற்றுவதோடு தினந்தோறும் யோகாசனங்கள் செய்து வருவதால் உடலும் மனதும் நல்ல ஆரோக்கியம் பெரும்.

தொந்தி குறைப்பு இன்றைய காலகட்டத்தில் கடைகளில் விற்கும் பொருட்களை அதிகமாக சாப்பிடுவதாலும், கொழுப்பு நிறைந்த உணவு பொருட்களை சாப்பிடுவதாலும் பலருக்கும் வயிற்றில் தொந்தி அல்லது தொப்பை ஏற்படுகிறது. யோகானசனங்களில் நவுகாசனா, உஷட்ரசனா, போன்ற யோகாசனங்களை செய்வதன் மூலம் சுலபத்தில் தொந்தியை குறைக்க முடியும்.

யோகம் கற்போம்! வளமுடன் வாழ்வோம்!!





# உண்டு ! உண்டு !

ராத்திரியில் பகலுண்டு
பகலிலும் இரவுண்டு
விடுமுறையில் தினம் உண்டு
விடுமுறைக்கும் தினம் உண்டு
வெயில் பிழி மழை உண்டு
வெற்றிலை மெல் வெம்மை உண்டு

வார்த்தை குலுங்க மௌனம் உண்டு
பிரார்த்தனை அற்ற பிரியம் உண்டு
வாய் முனங்க பொருள் உண்டு
கண்கள் கலங்கும் கனவு உண்டு

ஒரு காதலை மறைத்ததுண்டு
ஒரு காதலை மறப்பதும் உண்டு
தூர தேசப் பறவைக்கு
தனையே மென்றிடும் தவமுண்டு
தாகம் தீரா நதிக்கு
வானம் தொடவும் திசை உண்டு

உண்டு உண்டு உண்டு
உண்டபின் ஆன உடல் இதுகண்டு
உண்டு உண்டு உண்டு
உண்ணா நோன்பிலும்
பசி ஆறுதல் உண்டு

**யுத்தன்**



# மருத்துவத்

## நீரிழிவு கட்டுப்பட உணவும், மருந்தும்

முதுமையில் நடைப்பயிற்சியின் பலன்களை உறுதி செய்ய பல்வேறு ஆய்வுகள் உலகநாடுகள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்சுலின் ஹார்மோன் பணியை செய்யவிடாமல் தடுக்க கூடியதாக இருப்பது உடலில் அதிகரிக்கும் கொலஸ்ட்ரால் தான்.

'உலகின் நீரிழிவு நோயின் தலைநகரம்' என்று கருதப்படும் நாடாக உள்ளது இந்தியா. காரணம் உலகின் ஒட்டுமொத்த சர்க்கரை நோயாளிகள் எண்ணிக்கையில் 17 சதவீதம் பேர் நம் நாட்டினர் தான். அதில் வெறும் 40 சதவீதம் பேர் மட்டுமே உடற்பயிற்சியை மேற்கொள்வதாக ஆய்வுகள் கூறுவது வருத்தத்திற்குரியது.

பல ஆண்டுகளாக நீரிழிவு நோய்க்கு மருந்து மாத்திரைகள் எடுத்துக்கொள்பவர்கள் கூட உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், ஆரோக்கியத்தின் மீது அக்கறை இல்லாமல், மருந்து மட்டுமே போதும் என்ற தவறான கணிப்பில் வாழ்க்கையை நகர்த்தி செல்கின்றனர்.

உண்மையில் சர்க்கரை நோயினைப் பொறுத்தமட்டில் மருந்துகள் தரும் பலனை விட நடைப்பயிற்சியும், உடல்பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும் மிகப்பெரும் பலன்களைத் தரக்கூடியதாக உள்ளன. நீரிழிவு நோயாளிகள் வாரத்திற்கு குறைந்தது 150 முதல் 300 நிமிடங்கள் வரை மிதமான செயல்பாடுகளை செய்ய வேண்டியது அவசியம் என்கிறது நவீன அறிவியல். இதனால் இன்சுலின் செயல்திறன் அதிகரிக்கும் என்றும், சர்க்கரை அளவு கட்டுப்படும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

முதுமையில் நீரிழிவு நோய் கட்டுப்பட உணவு கட்டுப்பாட்டிற்கு அடுத்தாற் போல், அடுத்து இருக்கும் ஒரே வழி உடல்பயிற்சி தான். முதுமையில் உடல் சோர்ந்து எலும்புகளும் தசைகளும் வலுவிழந்த நிலையில் அத்தகைய பயிற்சிகளை மேற்கொள்வது கடினம் என்று பலர் கருதுகின்றனர். ஆனால் நல்வாழ்வை நாட வேண்டி, மருத்துவமனை வாசலை நாடாமல் இருக்க, மனதில் திறம் கொண்டால் உடல் ஒத்துழைப்பு நல்கும். ஆரோக்கியம் கிட்டும்.

மனம் செம்மையானால் உடலில் பல்வேறு உறுப்புகளின் செயல்பாடும் சீராகும் என்கிறது நவீன அறிவியல். "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்கிறது தமிழ் நூலான திருமந்திரம். அத்தகைய மனம் சீராக இருக்கவும், ஆயுட்காலம் கூடுவதற்கும்









மருத்துவர்

**சோ.தில்லைவாணன்**

தியானப் பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. முதுமையில் அமர்ந்த இடத்திலேயே தியானப் பயிற்சியினை மேற்கொள்ள உடல் புத்துணர்வு பெறுவதுடன் மனஅழுத்தம் நீங்கி சர்க்கரை அளவு அதிகரிக்காமல் தடுக்கப்படும்.

டைப் 1 மற்றும் டைப் 2 வகையான நீரிழிவு நோயாளிகள் பெரும்பாலானோர் தூக்கமின்மையால் அவதியுறுவதாக ‘அமெரிக்கன் டயாபெடிக் அசோசியேஷன்’ கூறுகின்றது. தூக்கத்திற்க்கும், உடலில் நடைபெறும் வளர்ச்சிதை மாற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. அத்தகைய தூக்கமின்மையைப் போக்குவது சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைக்க உதவும் எளிய வழி. எனவே தியானம் செய்வதும், எண்ணெய் குளியல் எடுப்பதும் தூக்கமின்மையைப் போக்கி சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் தியானம் மேற்கொள்வது முதுமையில் இயல்பான தூக்கத்தை உண்டாக்கி ரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் உதவும். தியானத்தை மையமாகக் கொண்டு 6 மாதங்கள் தொடர் கண்காணிப்பிற்கு பின், இதய நோயாளிகளிடம் நடைபெற்ற ஆய்வில் ரத்தத்தில் சர்க்கரை அளவு கணிசமாக குறைவதாகவும், பிதீகி1நீ எனும் மூன்று மாத மதிப்பீட்டின் அளவு குறைவதாகவும் ஆய்வு முடிவுகள் கூறுவது சிறப்பு. ஆகவே தினசரி 20 முதல் 30 நிமிடங்கள் வரை தியானப்பயிற்சி மேற்கொள்வது முதுமையில் நீரிழிவைக் கட்டுப்படுத்தவும், இதயம் காக்கவும் எளிய வழிமுறை.







மன அழுத்தமே முதுமையில் பல்வேறு நோய்நிலைகளுக்கு காரணம். எனவே தியானம் செய்வது ‘என்டார்பின்ஸ்’ எனும் மனமகிழ்ச்சியைத் தரும் ஹார்மோன் சுரப்பிகளை தூண்டி மன அழுத்தத்தைப் போக்கக்கூடியது. இந்த என்டார்பின்கள் முதுமையில் இயற்கை வலிநிவாரணிகளாகவும் செயல்படுவது கூடுதல் சிறப்பு.

ரத்த சோகை நோய், வைட்டமின் பி—12 குறைபாடு, குடிப்பழக்கம், ரத்தத்தில்

அதிகரித்த பித்தத்தின் (பிலிரூபின்) மற்றும் யூரியா அளவு போன்ற நோய்நிலைகள் பிநீகி1நீ அளவை பொருத்தமில்லாமல் அதிகமாக காட்டும். அதே போல் ரத்த இழப்பு, கல்லீரல் நோய்கள், குருதியேற்றம், ரத்தத்தில் அதிகமாகும் டிரைகிளிசெரைட் அளவு, ஆஸ்பிரின் போன்ற மருந்துகள் அந்த அளவை பொருத்தமில்லாமல் குறைவாக காட்டும் என்கின்றன ஆய்வுத்தரவுகள். எனவே மனம் தளராமல் மருத்துவர் கண்காணிப்பில் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

நீரிழிவு நோயின் மிக முக்கிய தொந்தரவாக கருதப்படுவது நீரிழிவுப்புண். நாட்பட்ட புண்ணை ஆற்றுவதற்கு மத்தன் தைலம், வெட்பாலை தைலம் போன்ற பல சித்த மருந்துகள் பலன் தருவதாக உள்ளன. மன அழுத்தம், குடிப்பழக்கம், புகைப்பிடித்தல் இவற்றால் ரத்த சர்க்கரை அளவு அதிகரித்து, சிறு ரத்தக் குழாய் பாதிப்பு மற்றும் ரத்த ஓட்டத்தில் பாதிப்பை உண்டாக்கி புண் ஆறுவதைத் தள்ளிப்போடும். எனவே மது அருந்துதல், புகைப்பிடித்தலை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.

முதுமையில் மதுப்பழக்கமும், புகைப் பிடித்தலும் நீரிழிவு நோயில் கூடுதல் சவால்களை உண்டாக்கும் என்கின்றன ஆய்வுகள். ஆல்கஹால் குடிப்பதால் “உடலுக்கு நல்லது, தூக்கம் வரும், துக்கம் நீங்கும்“ போன்ற தவறான தகவல்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் தவறான பாதை. திடீரென உண்டாகும் மாரடைப்புக்கும், பக்க வாதத்திற்கும் இது துணை புரியும். இன்னும் பல நோய்நிலைகளுக்கு இவை முக்கிய காரணம் என்பதை மறந்து விடக்கூடாது.

“உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு” என்பது சொலவடை. அதாவது உணவு உண்ட பின், ரத்தத்தில் அதிகரிக்கும் சர்க்கரை அளவானது சோம்பலையும், மயக்கத்தையும் உண்டாக்கும். ஆதலால் ‘நண்பு பெற உண்டபின் குறுநடை கொள்வோம்‘ என்று சித்த மருத்துவம் கூறுகின்றது. உணவு உண்ட பிறகு நடைப்பயிற்சி, சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவும்.

நடைப்பயிற்சியின் பலன்களை உறுதி செய்ய பல்வேறு ஆய்வுகள் உலகநாடுகள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற ஆய்வு ஒன்றில் தினசரி 10000 காலடிகள் (ஷீமீஜீஷ) நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது ரத்தத்தில் சர்க்கரை அளவு கணிசமாகக் குறைவதுடன், ரத்த அழுத்தத்தின் அளவும் குறைவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிப்பது சிறப்பு.

சீரான நடைப்பயிற்சி மேற்கொள்வதால் பிநீகி1சி 0.5 சதவீதம் அளவு குறைவதுடன், ரத்த அழுத்தம் குறைவதாகவும், உடல் எடை குறைவதாகவும் ஆய்வுத்தரவுகள் தெரிவிக்கின்றன. எனவே முதுமையில் முடிந்த வரை நடைப்பயிற்சி செய்வது சர்க்கரை நோயை முடிவுக்கு கொண்டு வரும்.





ஆக கொஞ்சம் நடைப்பயிற்சியும், அத்துடன் தியானப் பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும் பழகுவது சர்க்கரை அளவைக் குறைத்து முதுமையில் வாழ்வை இனிப்பாக்கும். முதுமையில் இடுப்பு மூட்டு எலும்புகள் தேய்மானத்தால் நடைப்பயிற்சி செய்ய






முடியாதவர்கள் வீட்டில் அமர்ந்தபடியே யோகாசனப் பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. இது சர்க்கரை அளவைக் குறைக்க உதவும்.




எளிய யோகாசனப் பயிற்சிகளான தாடாசனம், கோமுகாசனம், பாவன முக்தாசனம், சலபாசனம், வக்ராசனம், தனுராசனம், பட்சி மோத்தாசனம், மயூராசனம் ஆகியவற்றை பழகி வருவது நல்லது. வைட்டமின் டி3 அளவு குறைவதும் நீரிழிவு உண்டாக காரணமாக நவீன அறிவியல் கூறுகின்றது. எனவே வெயிலில் கொஞ்சம் நடைபயிற்சி செய்வதும், சூரிய வணக்கம் செய்வதும் முதுமையில் பலன் தரக்கூடும். நீரிழிவு கட்டுப்பட எக்காலத்திலும் உடல் எடை கூடாமல் பார்த்துக்கொள்வது நல்லது. நம் குடலில் உட்கிரகிக்கப்படும் சர்க்கரை சத்து உடல் செல்களை சென்றடைவதற்கு இன்சுலின் ஹார்மோன் திறவுகோலாக உள்ளது.

அத்தகைய இன்சுலின் ஹார்மோன் பணியை செய்யவிடாமல் தடுக்க கூடியதாக இருப்பது உடலில் அதிகரிக்கும் கொலஸ்ட்ரால் தான். ஆகவே உடலில் கொழுப்பின் அளவை சீராக கட்டுப்பாட்டில் வைப்பது இன்சுலின் பணியை சீராக்கி, சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைக்க உதவும். இதற்கு நடைப்பயிற்சி, உடல் பயிற்சி போன்றவை பேருதவி புரியும்.

இதய நோய், புற்றுநோய் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றிற்குப் பின் அமெரிக்கா மற்றும் கனடாவில் இறப்புக்கான நான்காவது முக்கிய காரணியாக, மருந்துகளின் பக்க விளைவுகள் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. மேலும், உலகளவில் இறப்புக்கான காரணங்களில் ஏ.டி.ஆர். ஆறாவது இடத்தில் இருப்பதாக உள்ளது. ஆகவே நீரிழிவு கட்டுப்பட மருந்துகளைக் குறைத்து, உணவுக் கட்டுப்பாடும், உடல்பயிற்சியும் மேற்கொள்வது மருந்துகளைக் காட்டிலும் சிறந்தது.




5000 ஆண்டுகளுக்கு முன்னரே திருமூலரும், பதஞ்சலியும் தோற்றுவித்த யோகாசனக் கலையை இன்றைய உலகம் தலையில் வைத்துக் கொண்டாடுவதோடு பயன்படுத்த அறிவுறுத்தி அங்கீகாரம் அளிக்கின்றது. நம் முன்னோர்கள் நமக்காக, நம் நலனிற்காக, தோற்றுவித்த மரபுக்கலைகளும், மரபு வாழ்வியல் முறைகளும் இன்னும் ஏராளம்.




இவற்றை மறந்த நாம் தாராளமாய் மருந்துகளை உட்கொண்டு ஆரோக்கியத்தை தேடி அலைவது என்பது அறியாமையின் உச்சம். ஆகவே இனியும் விழிபிதுங்கி நிற்காமல் விழிப்புடன் செயல்பட்டு, நல்வாழ்விற்கான பாதையை உருவாக்க வேண்டியது அவசரமான அவசியம்.



# உறவின்

### உறவுகளில் உன்னத உறவுநிலை !


மனிதர்களின் குடும்ப உறவுகள் ஒன்னுடன் ஒன்று பிணைக்கப்பட்டவை.புதிய தலைமுறையும் பட்டுப் போகாமல் பழைய தலைமுறையின் உரம்பெற்றுத் தளிர்த்து வளர முடியும். தலைமுறைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. தலைமுறை மாற்றத்திற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப வளர்ச்சிகளும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இதனை இன்றைய அறிவியல் தொழில்நுட்பம், 2ஜி, 3ஜி, 4ஜி, 5ஜி எனத் தலைமுறைகளின் சுருக்கக் குறியீடுகளாகக் கொண்டு குறிப்பிட்டு வருகின்றது.

தொழில்நுட்பத்தில் எத்தனை 'ஜி'க்கள் மாறி வந்தாலும் தலைமுறை உறவுகள் மாறிவிடுவதில்லை. கணவன், மனைவி, அப்பா, அம்மா, பெற்றோர் பிள்ளைகள், மாமா தாய்மாமா, அத்தை, அண்ணன், அண்ணி, அக்கா, தம்பி, தங்கை, சித்தப்பா, பெரியப்பா, நாத்தனார், கொழுந்தனார், மாமனார், மாமியார், மருமகன், மருமகள், தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி என வரும் மனித குடும்ப உறவுப் பரிமாணத்தில் எந்தச் சிறு மாற்றமும் நிகழ்ந்து விடுவதில்லை.

மனிதர்களின் குடும்ப உறவுகள் ஒன்னுடன் ஒன்று பிணைக்கப்பட்டவை. அவை பாசமெனும் கண்களுக்குத் தெரியாத அன்பின் கயிற்றால் இறுக்கமாகக் கட்டப்பட்டிருப்பவை. இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் வாழ்க்கைச் சூழல் மாற்றங்களால் பல உறவுப்பெயர்கள் தொலைந்துபோகத் தொடங்கியிருக்கின்றன. ஆயினும் அவற்றுள் தொலைக்க முடியாத உன்னத உறவாகத் “தாத்தா பாட்டி— பேரன் பேத்தி” உறவே திகழுகிறது என்றால் அதனை எவராலும் மறுக்க முடியாது.

சமுதாய அமைப்பில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும்இணைந்துவாழும்வாழ்வியல்‘குடும்பம்‘ என்னும் அமைப்பியலுக்குள் வருகிறது. ஒவ்வொரு குடும்பமும் பின்னர் வாழையடி வாழையாய் வளர்ந்து பல்கிப் பெருகத் தொடங்குகிறது. இப்பெருக்கத்தில்தான் உறவுமுறை நெருக்கமும் உருவாகிறது. ஒரு குடும்பத்தின் நிகழ்காலத்தில் மிக அதிகமான வயது கொண்டோர் தாத்தா பாட்டியாகவும், மிகக் குறைந்த வயதுடையோர் பேரன் பேத்திகளாகவும் இருக்கின்றனர். இந்த இருவேறு தலைமுறை சார்ந்த இருவருக்கிடையே மலரும் அன்புணர்வின் உறவுப் பெருக்கத்தில்தான் மனிதப் பண்புசார்ந்த வளர்ச்சிகள் உச்சம் காணவிருக்கின்றன.

தாத்தா பாட்டிகளின் பெயர் சொல்லவும்








# மகிமை!


முனைவர்

## சுந்தர ஆவுடையப்பன்


அவர்களின் புகழ் விளங்கவும் பிறந்தவர்கள் 'பெயரன்'. 'பெயர்த்தி'கள்; இந்த மூலச்சொற்களே பேச்சுவழக்கில் பேரன் பேத்திகள் ஆயின. அதனால் தான் மரபுசார்ந்த குடும்ப வழக்கில் தாத்தா பாட்டிகளின் பெயர்களையே பேரன் பேத்திகளுக்கு வைக்கும் பழக்கம் இன்றும் இருக்கிறது.

“அது என்ன தாத்தா உன்னை மட்டும் 'தாத்தா' என்று கூப்பிடச் சொல்கிறார்கள்?” என்று கேட்ட பேரனிடம் தாத்தா சொன்னார்,” நீ உன் அப்பா அம்மாவிடம் “தா! தா!”என்று எதை வாங்கித் தரச்சொன்னாலும் எல்லாவற்றையும் வாங்கித் தரமாட்டார்கள்!. ஆனால் தாத்தாவிடம் எதைக்கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் வாங்கித் தந்துவிடுவோம். அதனால்தான் எல்லாப் பேரன் பேத்திகளும் 'தா!தா!'என்றே அழைக்கின்றனர்”.“அப்படியா தாத்தா! இந்தக் குளிர்காலத்தில் ஐஸ் கிரீம் கேட்டால் வாங்கித் தருவீர்களா?” என்று கிண்டலாகக் கேட்டான் பேரன். “ஓ! அவசியம் வாங்கித் தருவேன்! உனக்கு ஒன்று வாங்கித் தரும் சாக்கில், சர்க்கரை நோயாளியான இந்தத் தாத்தாவும் ஒரு ஐஸ்கிரீமை வாங்கிச் சுவைத்துவிடுவேன் அல்லவா?” என்று நகைச்சுவையாகப் பதில் சொன்னார் தாத்தா.




முதிர்ந்த அனுபவத்தையும், மூப்பின் வயதினையும் உடைய மூத்தோர்கள், தங்கள் அனுபவத்தையும் அறிவினையும் அடுத்தவர்களிடம் பகிர்ந்து கொள்வதில் விருப்பம் மிக உடையவர்களாக இருக்கின்றனர். அதே நேரத்தில், பூமிக்குப் புதிதாக வந்த இளையோர்களோ எல்லாவற்றையும் அறிந்துகொள்ளவும், தெரிந்துகொள்ளவும்,




புரிந்துகொள்ளவும் ஆர்வம் மிகுதி உடையவர்களாகத் திகழுகின்றனர். அறிவும் அனுபவமும் ஆர்வமும் சந்திக்கின்ற மையப் புள்ளியாகத் 'தாத்தா—பேரன்' உறவு திகழுகிறது.

இந்த வகையில் அனுபவப் புதையலாகத் திகழும் தாத்தா பாட்டிகளும், ஆர்வத் தேடலாக விரையும் பேரன் பேத்திகளும் ஒரே அலைவரிசையில் பயணிப்பதால் ஒத்துப் போகின்றனர்.

எங்கெல்லாம் 'தாத்தா பேரன்'கள் இணைந்து வளர்கின்றனரோ அங்கெல்லாம் இருவருக்குமே நன்மைகள் பல விளையும் மாயவித்தை நிகழ்வதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பா, அம்மா, மாமா அத்தை போன்ற மற்ற எந்த உறவை விடவும் தாத்தா பாட்டியிடம் மட்டுமே ஒட்டுதல் உறவு உடையவர்களாகப் பேரன் பேத்திகள் விளங்குகின்றனர். அதற்குக் காரணம், பேரன் பேத்திகள் செய்யும் சேட்டைகள் உள்ளிட்ட அனைத்துச் செயல்களையும், மாறுபடாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை தாத்தா பாட்டிகளிடம் மட்டுமே இருக்கிறது. கோபமும் எரிச்சலும் அடையாத பொறுமை, அப்பழுக்கற்ற அன்பு, அரவணைக்கும் பாசம், அனுபவம் கற்றுக்கொடுத்த அறிவு, ஆதரிக்கும் தாராளம் ஆகியவை தாத்தா பாட்டிகளின் நிரந்தரச் சொத்துகள்.




இப்படி இருப்பதால், தாத்தா பாட்டி, பேரன் பேத்தி இருதரப்புமே நலமான வாழ்க்கையைப் பெறுகின்றனர். இளையோர்களுக்கு நேர்முறைச் சிந்தனைகள் வளர்கின்றன; அவர்கள் எளிதில் மனச்சோர்வு அடைந்துவிடாமல் எந்தச் செயலிலும் நம்பிக்கை ஆர்வத்தோடு இயங்குகின்றனர். அதே போல, வயதாகிவிட்டதே என்று சோர்ந்துபோய் விடாமல், மூளைப் புத்துணர்ச்சியோடு, வாழும் காலத்தை நீட்டித்துக் கொண்டு மூத்தோர்கள் மகிழ்ச்சியோடு வாழும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.


தாத்தா பேரன் உறவு என்பது வெறும் பிறப்பாலாகிய உறவு மட்டுமல்ல: அது உணர்வுபூர்வமான உறவு. தாத்தாவோடு நெருங்கிப் பழகும்போது ஒவ்வொரு பேரனும் அவனையறியாமலேயே மனத்தளவில் முதிர்ச்சிப் பக்குவம் அடைகிறான். அதைப்போலவே பேரன் பேத்திகளோடு பழகி அளவளாவி விளையாடும்போது ஒவ்வொரு தாத்தா பாட்டியுமே அவர்களை அறியாமலேயே குழந்தைகளாகி இளமைப் புதுமை அடைகின்றனர்.

தாத்தா பாட்டிகளோடு சேர்ந்து வாழும் பேறுபெற்ற குழந்தைகள் உண்மையிலேயே இந்த உலகத்தில் வரம் வாங்கி வந்தவர்கள்; இதையே, பேரன் பேத்திகளோடு சேர்ந்து வாழும் பேறுபெற்ற தாத்தா பாட்டிகளும் வரம் வாங்கி வந்தவர்களே! என்றும் கூறலாம். இது, சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கூட்டுக்குடும்ப வாழ்வியலுக்கு வேண்டுமானால் பொருந்தி வரலாம். ஆனால் வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திற்கு வேலைக்குப் போகும் இந்தக் காலத்தில் இது பொருந்த வருமா? நடைமுறைச் சாத்தியமா?.

சரியான கேள்விதான். கூட்டுக்குடும்ப வாழ்விலும் வீட்டு உறுப்பினர் ஒவ்வொருவருமே வேலைக்குப் போகத்தான் செய்தார்கள்; அவர்களது வேலைகளெல்லாம் ஒரே ஊரில் வயல்வெளிசார்ந்து ஒரே இடத்தில் இருந்தது. அதனால் ஒரே வீட்டில் கூடிவாழ்ந்து குதூகலித்து இருந்தனர்.

குழந்தைகளுக்கு, சோறூட்ட ஒருவர், கதைசொல்ல ஒருவர், விளையாட்டுக் காட்ட ஒருவர், தாலாட்டுப் பாடித் தூங்கவைக்க ஒருவர், குளிக்க வைக்க ஒருவர், கண்டிக்க ஒருவர், அரவணைக்க ஒருவர்ஞ் என ஒருவர் இல்லையென்றால் மற்றொருவர் எனப் பலர் இருந்தனர் ஆனால் இன்றைய புறாக்கூண்டு அடுக்கக வாழ்வியலில் அப்பா அம்மாவைத் தவிர வேறு முகங்களைக் காணும் வாய்ப்பே கிடையாது. அதனால் செல்பேசிகளும், தொலைக்காட்சிகளும் காட்டும் கார்ட்டூன் சித்திரக் கதைமாந்தர்களே உறவுகளாக மாறிப்போன அவலம்.

வாழ்வியலைப் பின்னுக்குத் தள்ளி வைக்கமுடியாது. அதன் ஒட்டத்திலேயே முடிந்த அளவுக்கு உறவுகளை ஒட்டவைத்து வளர்க்க முனைதலே புத்திசாலித்தனம். பேரன் பேத்திகள் ஓர் ஊரிலும் (நாட்டிலும் கூட) தாத்தா பாட்டிகள் ஓர் ஊரிலும் வாழ்ந்தால், அடிக்கடி இவ்விரு தரப்பினரும் சந்தித்து வாழும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.




குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு விடுமுறை வாய்க்கும் போதெல்லாம் தாத்தா பாட்டி வீடுகளுக்குப் பேரன் பேத்திகளை அவசியம் அழைத்து வரவேண்டும். இதனால் பணச்செலவும் வீண் அலைச்சலும் உண்டாவதாக யாரும் சலித்துக் கொள்ளக் கூடாது. இவ்வகைச் சந்திப்புகள் மூலமாக நம் சந்ததிகளே அறிவுப் புத்துணர்வும் பண்பாட்டுச் சம்பாத்தியத்தையும் பெறுகின்றனர்.

முடிந்த அளவுக்குத் தாத்தா பாட்டிகளும் தங்களால் முடிந்த அளவுக்குப் பயணம் செய்து பேரன் பேத்திகளைச் சென்று பார்த்து வருவதை வழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். புண்ணியத் தலங்களுக்குச் சென்றுகடவுளரைப்

பார்த்து வருவதைப் போல மகன் மகள் வீடுகளுக்குச் சென்று பேரன் பேத்திகளைப் பார்த்து வருவதையும் ஒரு கடமையாகக் கொள்ள வேண்டும். இது குடும்பக் கடமை மட்டுமல்ல; சமூகக் கடமையும் கூட.

“வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபு!” என்று வள்ளல்பெருமான் குறிப்பிடுவது, மனிதகுல வளர்ச்சியின் மேன்மையை உணர்த்தும் வரிகள். மனிதன், குடும்பம், குடி, இனம், சமுதாயம் போன்ற பல்வேறு நிலைகளில் இணைந்தும் பிணைந்தும் மனிதன் செயலாற்ற வேண்டியதை வலியுறுத்தும் வரிகள் இவை.

பல தலைமுறைகளாக வளர்ந்து வரும் குடும்பத்தில், அப்போதைக்கு, முதல் தலைமுறை தாத்தா பாட்டி என்றால், மூன்றாம் தலைமுறை பேரன் பேத்திகள். குடும்ப மரத்தின் வேர்களையும் கிளைகளையும் இளையோர்களிடம் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்கள் தாத்தா, பாட்டி எனும் மூத்தோர்களே ஆவர். ஒவ்வொரு பேரனும் பேத்தியும் நல்வழிக் கதைகளோடு, தமது மூதாதையர்களின் கதைகளையும் பாடுகளையும், தங்கள் தாத்தா பாட்டிகள் வழியே மட்டும்தான் தெரிந்துகொள்ள முடியும். இதன் வழிமுறையில் ஒவ்வொரு இளந்தலைமுறையும் பண்பாட்டு அறிவு பெற்றுப் பெருமை கொள்ள முடியும்.

ஒருமாலைநேரத்தில்,ஒரு தாத்தாவும் ஒரு பேரனும் அவர்கள் வீட்டின் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்தத் தெரு முனையில் பேரனின் ஆசிரியர் வருவதை பார்த்த தாத்தா, “பேராண்டி! ஓடிப்போய் ஒளிந்துகொள்! உன் கணக்கு ஆசிரியர் வருகிறார்! பார்த்தால் பள்ளிக்கு ஏன் வரவில்லை? என்று கேட்பார்!” என்று பதற்றத்துடன் சொன்னார். இன்றைக்குக் கணக்கு ஆசிரியர் இறந்து போனதால் பள்ளிக்கு விடுமுறை! என்று அவனது அப்பாவிடம் பொய் சொல்லித்தான் பேரன் வீட்டில் இருக்கிறான் என்பது தாத்தாவுக்குத் தெரியும்.

பேரன் பதற்றமில்லாமல் தாத்தாவிடம் சொன்னான், “ தாத்தா! முதலில் நீ வீட்டுக்குள் போய் ஒளிந்துகொள்! நீ இறந்து விட்டதாகப் பொய் சொல்லித்தான் நான் பள்ளிக்கே விடுமுறை போட்டிருக்கிறேன்!”. நல்ல நகைச்சுவை என்று சிரித்து மகிழ்ந்தார் தாத்தா.




தாத்தா, பாட்டி, பேரன், பேத்திகள், நேரில் சந்தித்து உடன்வளரும் சூழல் தற்போது குறைந்து போனாலும். வீடியோ அழைப்புகள், வாட்ஸ் அப்புகள், இன்ஸ்டாகிராம், சூம் போன்ற எத்தனையோ நவீனத் தொழில்நுட்ப வசதிகள் வந்துள்ளன. உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்வதற்கு. ஒலி/ஒளிப்பதிவு செய்யப்பட்ட கலந்துரையாடல்களும், கதையாடல்களும்கூட நல்ல பயனளிக்கும்.

அப்படி இருந்தால்தான் பழைய தலைமுறை இற்றுப்போகாமல், புதிய தலைமுறையோடு மேவிப் போக முடியும். புதிய தலைமுறையும் பட்டுப் போகாமல் பழைய தலைமுறையின் உரம்பெற்றுத் தளிர்த்து வளர முடியும்.

# ஞானம்

வீட்டினறை சுவர்களெங்கும்
கைக்கெட்டும் தூரம்
பென்சிலால் எழுதப்பட்ட கிறுக்கல்கள்
சுவரின் மேல்பாதி
மொட்டையாக அசிங்கமாகவும்
சுவரின் கீழ்பாதி அற்புதமான
தொடரோவியமாகவும்
காட்சியளிக்கிறது
குழந்தைகளிருக்கும் வீடு!
ஞானமும் கிட்டுவதில்லை
புத்தரும் கிட்டுவதில்லை
மரத்திலில்லை ஞானம்
மனதிலிலுள்ளது ஞானமென்பதை
மௌனமாக உரைக்கின்றன
போதிமரங்கள்
மௌனமொழி புரியாது
கடந்து செல்கின்றன மரங்கள்!

**பா.சிவகுமார்**


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
NEW YEAR
2024
VARSHA™


# ஜனவரி



# பிப்ரவரி



# மார்ச்




# ஏப்ரல்


April 2023
தமிழ்
14
YEARS
ANNIVERSARY
நற்றமிழரின் நாடித்துடிப்பு
சித்திரை
சிறப்பிதழ்

# மே



# ஜூன்




# ஜூலை



# ஆகஸ்ட்




# செப்டம்பர்



# அக்டோபர்



# நவம்பர்


November 2023
தமிழ்
14
YEARS
ANNIVERSARY
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
மலர்

# டிசம்பர்



# தமிழ் 2024

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | | |

## MARCH

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
VARSHA
புத்தாண்டு நல்வாழ்த்துகள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு